
கல்கி
KALKI
12.12.1965
35
காசு
Natarajan



கல்கி

பொருளடக்கம்



ராஜாஜி இதழ்


ராஜாஜி சுயநல நோக்கம் எதுவும் அறவே அற்றவர். தேச நலத்துக்காகச் சகலத்தையும் தியாகம் செய்த உத்தமர். பொது ஜனங்களின் பிரியத்தை இழந்தாலும் பாதகமில்லை என்று மனச்சாட்சியின்படி நடக்கத் துணிந்தவர்.


— காந்தியடிகள்

விசுவாவசு கார்த்திகை 27 ● டிஸம்பர் 12


உலகுக்கு ஒருவர்	—	3
என்ன சேதி?	—	6
ராஜாஜியின் கருத்துக்கள்	—	7
நூறினும் அதிகம் வாழ்க !	—	10
செம்மலென வாழியவே!	—	13
வாழ்க பல்லாண்டு	—	14
கத்தும் குயிலோசை	—	18
வெற்றித் திருநகர்	—	22
தனிப்பெரும் தலைவர்	—	28
கந்தன் கருணை	—	30
சேவைக்கு ஒரு சகோதரி	—	34
இளைஞர்களுக்கு	—	38
பல்கலைப் பக்கங்கள்	—	41
நாரதர் தீர்ப்பு	—	44
வெள்ளித் திரை விமரிசனம்	—	47
காரா, கல்யாணமா?	—	48
அறிவும் சீலமும்....	—	57
காலச் சக்கரம்	—	63
வட்ட மேஜை	—	71
ஜீவ கீதம்	—	73
வியாசர் வாழ்கின்றார்	—	81
சாதல் இல்லையேல் காதல்	—	85

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.








காங்கிரஸ்
PK

மலர் 25 ✽ இதழ் 20



உலகுக்கு ஒருவர்!

''அர்ஜுனு,
அச்சமின்மை, அகத் தூய்மை, ஞானத்திலும் உள்ள ஒருமைப்பாட்டிலும் நிலைத்து நிற்றல், ஈகை, புலனடக்கம், வேள்வி மயமான வாழ்வு, மறைவழியை அறிந்தொழுகல், சித்த ஐக்கியமாகிய தவம், நேர்மை, அஹிம்சை, சத்தியம், வெறுப்பின்மை, தியாகம், அமைதி, பிறரைக் கெடுக்காதிருத்தல், சகல ஜீவ ராசிகளிடத்தும் அருள், பொருளில் பற்றின்மை, மிருதுவான தன்மை, தவருன சிந்தையில் நாணம், சலியாமை, ஆன்ம ஒளி, பிறர் குற்றம் பொறுத்தல், தீரம், அந்தக்கரண சுத்தம், வஞ்சனை செய்யாமை, செருக்கின்மை — இந்தக் குணங்கள் யாவும் தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன!''

என்று ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் கீதாசாரியன் உத்தம புருஷ இலட்சணங்களைத் தன் கனிவாயால் கூறினன்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின் இந்தக் கலியுகத்திலும் அந்தத் தெய்வ சம்பத்துக்கள் அனைத்தும் செறிந்த பக்குவமான கனியாக விளங்குகிருர் தலைவர் ராஜாஜி அவர்கள். இந்த அன்புப் பழத்துக்கு, அறிவுப் பழத்துக்கு இம்மாதம் ஒன்பதாம் தேதியன்று எண்பத்தெட்டாவது பிராயம் தொடங்குகிறது. எண்பதற்கே இனிய எண்பத்தெட்டு! ஆம், நினைத்ததெல்லாம், பேசியதெல்லாம், செய்ததெல்லாம், அந்தரங்க பூர்வமான சத்தியம் தவிர வேறெதுவுமே இன்றி நெடுங்காலம் வாழ்கின்ற பாக்கியத்தைவிட எண்ணுவதற்கு இனியது எது உண்டு?

✽✽✽

பார்த்தசாரதி எடுத்தோதிய தெய்வ சம்பத்துக்கள் யாவும் 'பண்பு' என்பதில் அடங்கும். பண்பாளராக ஒருவர் இருப்பதே அரிதெனில் இந்தப் பண்பின் சக்தியைப் பிறர்மீது பிரதிபலிப்பது அரிதிலும் அரிது. காலஞ்சென்ற கென்னடி அவர்கள் ராஜாஜியுடன் நீண்டநேரம் சம்பாஷித்தபின் 'அவரது சந்திப்பு என்னைப் பண்படுத்திய மகத்தான சக்திகளில் ஒன்று' என்று கூறியதே ராஜாஜியின் வாழ்வு செய்து வரும் மகத்தான பணியைக் குறிப்பிடும். இவ்வாறு பண்பட்ட—பண்படுத்துகிற—தெய்வ சம்பத்துப் பெற்ற மகான்கள் பலர் இந்த நானிலத்தில் தோன்றியதுண்டு. ஆனல் அவர்களிலும் ராஜாஜி பல அம்சங்களில் தனித்தவராக, உலகுக்கே ஒருவராகத் திகழ்கிருர்.

எதிர்ப்புக்களை அவர் எதிர்கொள்ளும் அரிய முறையில் இந்தத் தனித் தன்மையை முக்கியமாகக் காண்கிறோம். எதிர்ப்பு இல்லாமல் எந்த மகா புருஷருமே இருந்தது கிடையாது. எதிர்ப்பு என்பது தெய்வப் பிறவிகளுக்கு இன்றியமையாதது என்பதால்தான் உத்தம புருஷர்களின் முதல் இலட்சணமாக 'அச்சமின்மை' என்பதைக் கண்ணன் கூறினன் போலும்! ஆனல் ராஜாஜி கண்ட, கண்டு வருகிற எதிர்ப்பு தனித்தன்மை வாய்ந்தது. அவர் காங்கிரஸில் முக்கியத்துவம் பெற்றிருந்த காலத்திலிருந்து ஒரு தனிப்பட்ட முறையில் போராடி வருகிருர். அந்நிய அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும்போதே, தமது தீர்க்கதரிசனத்தின் காரணமாகத் தம்முடைய சகாக்களைக் காட்டிலும் நுண்மையாக அவரால் எதிர்காலத்தைக் காண முடிந்தபடியால் அத்தகைய ஆழ்ந்த நோக்கு இல்லாத மற்றவர்களுடனும் எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. தமது மனத்தில் சத்தியம் என்று தோன்றுவதை அவர் ஒருநாளும் மறைத்துப் பழகாத புனித சீலரானபடியால் தமது கட்சிச் சகோதரர்களின் எதிர்ப்பையும் எதிர்கொள்ள நேர்ந்தது. இன்று ராஜாஜியை எதிர்க்கும் சாமானிய அரசியல்வாதிகளை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மோதிலால் நேரு, தேசபந்து தாஸ், வி. ஜே. பட்டேல், எஸ். ஸ்ரீநிவாச அய்யங்கார், அதன்பின் ஜவாஹர்லால்ஜி போன்ற சிம்மங்களுடனும் - ஏன் காந்தி அடிகளுடனுமே தீரமுடன் மாறுபட்டு நின்று மனச்சாட்சியின்படியே ஒழுகிய மாசற்ற தங்கமலை நம் ராஜாஜி. இவ்வாறு உள்-வெளி என்ற இரு முனைகளில் சத்தியத்துக்காகப் போராடிய ஒரே சரித்திர புருஷர் ராஜாஜி.

பொதுமக்களின் நரம்புகளைக் கிண்டிவிட்டு, துவேஷம் முதலிய துறைகளில்

உணர்ச்சிகளைத் திருட்டிவிட்டு, அதன் மூலம் தமக்குப் பொதுஜனமோகமாகிய 'பிரபை'யை ஏற்படுத்திக் கொண்ட தலைவர்கள் எத்தனை ஆண்டுகள் எதிர்ப்புப் போராட்டம் செய்தாலும் அதில் ஆச்சரியப்பட்ட எதுவுமில்லை. ஆனால் ராஜாஜியோ ஒருபோதும் மக்களின் நயப்பைத் தூண்டாதவர்; மக்கள் தம்மிடம் மோகித்துப் 'பிரபை' ஒன்றை ஏற்படுத்திப் பிரமை கொள்வதை இம்மியும் விரும்பாதவர். மாறாக, மக்களின் தப்பபிப்பிராயத்துக்கு ஆளானாலும் பொருட்டில்லை என்று கருதுபவர். அப்படிப்பட்டவர் பலனைச் சற்றும் கருதாது இந்தத் தள்ளாத பிராயத்தில் எதிர்ப்புப் பணிசெய்து வருவதிலுள்ள சூக்ஷும சத்தியத்தைக் கவனிக்க வேண்டும். எத்தனையோ ஆண்டுகளாக அவர் எத்தனையோ விஷயங்களை எதிர்த்து எழுதியும் பேசியும் வந்தபோதிலும் அவரது வாக்கு அன்றும் இன்றும் என்றும் நுண்ணறிவில் உரைத்துப் பார்க்கும் திட்பம் பெற்றுள்ளதேயன்றி வெறும் உணர்ச்சியைத் தூண்டி விடுவதாக அமைந்ததேயில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? அவரது உள்ளத்தில் நீதிதேவதையின் துலாக்கோல் இருக்கிறது. அதன் சமநிலை தான் அவரது இலட்சியம். இந்த இலட்சியத்தில் பிறந்த எதிர்ப்பில் துவேஷத்துக்கு இடமில்லை. அன்பே அதன் அடிப்படை. இத்தகைய எதிர்ப்பு உண்மையில் எதிர்மறையானதுமல்ல. இதுவே ஆக்க சக்தியுமாகும். ஆக்க சக்தி வாய்ந்த எதிர்ப்பாளர் என்பதில் ராஜாஜி உலகுக்கு ஒருவரே யன்றோ?

ராஜாஜியின் இந்த அபரிமிதமான ஆக்க சக்தியை அவர் நிருவாக பீடத்திலிருந்த போது பிரத்தியட்சமாகக் கண்டோம். மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றில் ஆக்கரீதியில் செயலாற்றி, தாழ்ந்த நிலையிலிருந்த மக்களைத் தீரமாக ரட்சித்ததில் அவர் போன்ற திடபுத்தி யாருண்டு? 1952-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் பரவியிருந்த கம்யூனிஸத்தை அவர் நடத்த உத்வேகமும், ரேஷன் கட்டுப்பாடுகளை நீக்குவதில் அவர் காட்டிய துணிவும் அவரது அளப்பரிய ஆக்க சக்திக்கே ஆணித்தரமான சான்றுகளாகும்.

இன்னொரு அம்சத்திலும் அவர் உலகுக்கு ஒருவராக விளங்குகிறார். அதாவது தம்மைத் தாமே எதிர்த்துக் கொள்வதில் அவருக்குள்ள துணிவு ஈடிணையற்றது. 'தம்மைத் தாமே எதிர்த்துக் கொள்வது' என்பதைச் சிறிது விளக்க வேண்டும்: எப்போதும் அநுசரிக்க வேண்டிய தருமங்கள் என்றும், சந்தர்ப்பத்தை யொட்டிப் பின்பற்ற வேண்டிய கால தருமங்கள்—ஆபத்துத் தருமங்கள் என்றும் அறத்தைப் பாகுபாடு செய்திருக்கிறார்கள். சில தருக்களின் ஒரே அடித்தண்டு நுனி வரையில் ஒரு சீராக நேராகச் செல்லும் போதே, பக்கவாட்டிலும் கவடுகள் விடுவதுபோல் அடிப்படைத் தருமம் தடைப்படாதவாறே, அதிலிருந்து காலதேச வர்த்தமானங்களை யொட்டிக் கிளைகளும் புறப்படலாமெனச் சான்றோர் அநுமதித்துள்ளனர். இவ்வாறே ராஜாஜி என்ற பிரும்மாண்டமான விருட்சம் தர்மம்—சத்தியம்—அன்பு—முதலிய வேர்களில் எழுந்த ஆதாரத் தண்டிலிருந்து இம்மியும் பிறழாமல் நேராக வளர்ந்துள்ள போதே, காலதேச வர்த்தமானங்களை யொட்டி அவர் தமது கருத்துக்களில் சிலவற்றைத் தைரியமாக மாற்றிக் கொண்டு புதுக் கிளைகளைப் பரப்பியதுமுண்டு. காலத்திலும் மாறுபடாத விஷயங்களில் அவரது உறுதிப்பாடு அணுவளவும் மாறியதில்லை. ஆனால் காலத்தின் போக்குக்கு இடம் கொடுக்க வேண்டிய பிரச்னைகளில் இதே உறுதிப்பாட்டைக் காட்டுவது, 'உண்மையான மனோதிடம் அல்ல; இது வீம்புப் பிடிவாதமே' என்பதை உணர்ந்து செயலாற்றி வருபவர் ராஜாஜி. தூய்மை நிறைந்த தமது திரு உள்ளத்தில் எழும் வாய்மையின் குரலை அவர் ஒருபோதும் அடக்காமல், தமது பழைய கருத்துக்களில் சிலவற்றையே பிறகு தீரமுடன் மாற்றிக் கொண்டு தெள்ளிய புது முடிவுகள் கண்டுள்ளார். இதில் ராஜாஜி உலகுக்கே ஒருவர் தான்—ஐயமில்லை.

புருஷோத்தமன் கூறிய தெய்வ சம்பத்துக்களைச் சச்சரவுகளுக்கு அதிக இடமற்ற ஆன்மிகத் துறையில் ஈடுபட்டுள்ள மகனீயர்களிடம் காண்போமாயின் அதில் அதிக வியப்பில்லை. ஆனால் அரசியலில் — அதுவும் அபவாதத்துக்குச் சிறிதும் நாணாத இன்றைய அரசியலில் — இத்திவ்விய குணங்கள் அனைத்தையும் பெற்றுத் திகழுபவர் என்கிற முறையிலும் ராஜாஜி பிரபஞ்சத்துக்கே தனிப்பட்ட ஒரு வியத்தகு வியக்திதாமே?

* * *

அபவாதங்களுக்கு ஆளாவதிலும் ராஜாஜிக்கு ஒரு தனி இடமுண்டு. பற்றே அற்ற இம்முனிவரைப் பதவி மோகக்காரர் என்றும், சூதுவாது அறியாத இந்த நிர்மலரைத் தந்திரசாலி என்றும், நாட்டுக்காகத் தள்ளாத பிராயத்திலும் போராடி வரும் இந்தத் தேச பக்த திலகத்தை நாட்டு விரோதி என்றும் அவதூறுகள் கூறுவதைக் கேட்கும்போது, பத்தினித் தெய்வமான சீதாதேவியின் கற்பில் ஐயமுற்றுப் பேசிய மக்களின் பரம்பரை இன்னும் நம் நாட்டில் இல்லாமல் போய் விடவில்லை என்றே தோன்றுகிறது. அதைப் பற்றி நாம் விசனப்படத் தேவையில்லை. ஏனெனில், சத்தியத்தில் அக்கினிப் பிரவேசம் செய்து சீதாதேவியாகத் திகழும் ஒரு ராஜாஜியைப் பெற வேண்டுமாயின், 'இம்மகாநுபாவ'ப் பரம்பரையையும் சகித்துக் கொள்ளலாம். பொன் எனில் அது அக்கினிப் பிரவேசம் செய்து தானே ஆக வேண்டும்?

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு
என்பதுவே தமிழ் மறை அல்லவா?

புடம் போட்ட பின்பும் பொன்னைப் பொன்னாக அறியாத 'அற்புதப் பிறவி'களோடு சேராமல், அந்தப் பொன்னின் அடிசார்ந்து நிற்கும் நாம் பாக்கியசாலிகள்!

* * *

ராஜாஜியின் ஜன்ம தினத்தன்று உபநிஷத முனிவர்களும், கண்ண பெருமானும், ஆஞ்சநேயனும், வால்மீகியும், வியாஸரும், வள்ளுவரும், காந்தியடிகளும் அவருக்கு ஆசி கூறுவார்கள். அவர்களது ஆசிக்கெல்லாம் உரிய, சத்தியலக்ஷ்மியின் சக்தியான ராஜாஜியை இன்று நாம் அனைவரும் வணங்கி, அவரது பரம உத்தமமான பாங்குகளை நாமும் பின்பற்றுவதற்குப் பரந்தாமனைப் பரவுகிறோம்.



தாய்ப் பட்சி வருகிறதென்னில் கூட்டிலுள்ள குஞ்சுப் பறவை எப்படி மகிழுமோ அப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தாம் எழுந்தருளும் இடந்தோறுமுள்ள அடியாருக்கு அளிப்பவர் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள். ஞானம் ஒரு சிறகாகவும், கருணை மறு சிறகாகவும் கொண்ட இந்தத் தாய்ப் பட்சி இப்போது சென்னை மாநகரின் உள்ளங்களுக்கு உணவு ஊட்டு வதற்காக இம் மாநகரில் பொன்னடி சாத்துவது அன்பர்களின் பேரதிருஷ்டம். இம் மாதம் 12ந் தேதி யன்று தேனாம்பேட்டை பாலசுப்பிரமணிய ஸ்வாமி ஆலய கும்பாபிஷேகமும், அதன் பின் வியாச வித்வத் சதஸ்-ம் ஆசாரியரின் பவித்திரமான முன்னிலையில் நடைபெறும். நமக் கெல்லாம் மகிழ்ச்சிதரும் ஸ்வாமிகள், தாமும் இங்கு அகமகிழ்வெய்தித் தரிசனம் தருவதைக் காண்கையில் 'அத்தன், ஆனந்தன், அமுதன்' என்ற மணிவாசகம் எப்பேர்ப்பட்ட மணியான வாசகமெனப் புரிகிறதல்லவா?

என்ன சேதி?

- நல்வரவாகுக!
- கிரிக்கெட் மன்னர் மறைந்தார்

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு மைனர் மோசஸ் அவர்கள் சென்னையின் புது மேயராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதே கட்சியைச் சேர்ந்த திரு சடகோபன் அவர்கள் உதவி மேயராகத் தேர்வு பெற்றிருக்கிறார். இவ்விருவரையும் தமிழ் மாநிலத் தலைநகரின் ஆட்சிக்கு நல்வரவு கூறி வரவேற்கிறோம்.

சென்னை நகராண்மைக் கழகம் தி. மு. க. வசம் சென்றதிலிருந்து காங்கிரஸ்காரர்கள், நகர பரிபாலனம் மிகவும் சீர்கேடுற்றுவிட்டதாகவும், நகர சபையில் ஊழல் ஆட்சி நடப்பதாகவும் ஓயாமல் குற்றம் சாட்டிய வண்ணம் இருக்கிறார்கள். இதற்குப் பதிலாக தி. மு.க. வினர் சென்னை அரசாங்கத்திலும், மத்திய அரசாங்கத்திலும் காங்கிரஸ் நிர்வாகத்தில் நிகழ்ந்துள்ள சீரழிவுகளையும், ஊழல்களையும் எடுத்துக் காட்டுவது வழக்கம். இதனால் இது உண்மையான பதிலாகாது. 'சென்னை மாநிலத்தின் அடுத்த அரசாங்கம் எங்களுடையது' என்று கூறி வரும் தி. மு.க. வினர், அதற்கு முதற் படியாக இப்போது தங்கள் வசமுள்ள சென்னை மாநகராட்சியை நல்ல முறையில் நடத்தி வீண் அவதூறுகளுக்கு இடம் தராமல் நற்பெயர் கொள்ள வேண்டும். நகரின் அபிவிருத்தியோடு மட்டுமின்றி, நகர சபையில் நிர்வாகம் தூய்மையாக நடைபெறுகிறது என்ற நம்பிக்கையையும் மக்களுக்கு ஊட்ட வேண்டும். இத்துறைகளில் புதிய மேயரும், உதவி மேயரும் ஊக்கம் காட்டி, வெற்றி எய்துவார்களென நம்பி அவர்களை வாழ்த்துகிறோம்.

இந்தியாவில் கிரிக்கெட் என்ற பெயரைக் கேட்டதும் இரண்டு பேர்களுடைய நினைவு உண்டாகும். ரஞ்சியும், விஜய நகரம் மகாராஜ் குமார் விஜயானந்தும் கிரிக்கெட்டுக்கு என்றே பிறந்தவர்களோ என்னுமாறு அந்த விளையாட்டில் ஊறிப் போனவர்கள். இந்தியக் கிரிக்கெட் ஆட்டத்தை வளர்ப்பதற்காக விஜயானந்த், பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரர்களை இந்தியாவுக்குத் தம் குழுவில் ஆட அழைத்து வந்திருக்கிறார். இங்கிலாந்தில் இந்தியக் கிரிக்கெட் கோஷ்டி சென்று ஆடுவதற்கான நிதிச் செலவையெல்லாம் இவரே ஒருதடவை ஏற்றுக் கொண்டுள்ளார்! அகில இந்திய ரேடியோ கிரிக்கெட் விமரிசகர்களில் 'விஜி'யின் அபாரமான விமரிசனத்தைக் கேட்க வேண்டும் என்ற ஆவல் படைத்த ரஸிகர்கள் ஏராளம். 1936ம் வருஷம் இங்கிலாந்துக்கு விஜயம் செய்த கிரிக்கெட் குழுவின் காப்டனாக இருந்திருக்கிறார். இந்திய சர்க்கார் இவருக்குப் பத்ம பூஷண் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இவர் இந்தியக் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டின் தலைவராகப் பணியாற்றியவர்.

'விஜி'க்கு வேட்டைகளிலும் அபாரப் பிரியமாம். அவரது அரண்மனையை அவர் சுட்ட நானூறுக்கு மேற்பட்ட புலிகள் அலங்கரிக்கின்றன. அயல் நாட்டிலிருந்து விஜயம் செய்யும் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு அவற்றில் சிலவற்றை வழங்கி உபசரிப்பாராம்.

விஜியின் திடீர் மறைவு கிரிக்கெட் உலகுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம்.

காசியில் காஞ்சி

காசிக்கும் காஞ்சிக்கும் ஆதி காலம் தொட்டே தொடர்புண்டு. இரண்டுமே பற்பல மதங்களில் தேர்ந்த பண்டிதர்களுக்குப் பெயர் கொண்டவை. வேதாந்தப் பிரசாரத்தைக் காசியில் தொடங்கிய ஆதி சங்கர பகவத் பாதர், இறுதியில் காஞ்சியிலேயே தமது சித்தாந்தத்தைப் பூரணமாக நிலைநிறுத்தி ஸர்வக்ஞ பீடமேறி அங்கேயே தமது உடலை உகுத்தார். இதற்குப் பொருத்தமாகவே காசி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்துக்குரிய ஒரு கிளை மடம் உள்ளது. சுகதேவர் மடம் என்பது இதன் பெயர். ஆதிசங்கரரின் குருவுக்குக் குருவுக்குக் குருவான சுகரின் பெயரால் அமைந்துள்ளது போலும்! இம்மடத்தை அடியோடு புதுப்பித்து அமைக்கும் கைங்கரியத்தை ஸ்ரீ காஞ்சி ஆசாரியர்கள் ஆடிட்டர் ஸ்ரீ எஸ். பரமசிவன் அவர்களிடம் அளித்திருக்கிறார். ஸ்ரீ பரமசிவன் மிகுந்த சிரத்தையுடன் இப்பணியில் ஈடுபட்டு நிதியம் சேகரித்து, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் காசி மடம் மானேஜர் ஸ்ரீ வி. எஸ். செல்லமய்யரவர்களின் உதவியுடன் சென்ற மாதம் அஸ்திவாரமிடும் வைபவத்தை வெகு சிறப்பாக நடத்தியிருக்கிறார். இனி கட்டிடம் எழும்ப அன்பர் யாவரும் பொருள்தர வேண்டும். **ஆடிட்டர் எஸ். பரமசிவன், சாலபுரம், கள்ளிக்கோட்டை - 2** என்ற விலாசத்துக்கோ, **ஸ்ரீ கே. நீலகண்டய்யர், காமகோடி கோசஸ்தானம், 4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை - 1** என்ற முகவரிக்கோ திரவியம் அனுப்ப வேணும்.

★

ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் மைசூர் சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழாவில் காச்மீரப் பிரச்னை குறித்துக் கூறிய கருத்துக்கள் பல முக்கியமான பத்திரிகைகளில் இடம் பெறவில்லை. இவ்வாறு பத்திரிகைகள் தமது கருத்துக்களைச் சொல்லாமல், பிறர் கருத்துக்களைச் செய்தியாகப் பிரசுரிக்கும் போது கூட ஆள்கிற கட்சியின் அபிப்பிராயத்துக்கு மாறுபடக் கூடாது என்கிறபோது நாட்டின் அரசியல் மிகவும் துர்ப்பாக்கிய நிலையை அடைந்து விடுகிறது.

ஜனநாயகத்தில் சுதந்திரமான விமரிசனமே அரசாட்சிக்கு உகந்த யோசனையும் உதவியும் ஆகும்; அது தடையோ, வியாதியோ அல்ல. சர்வகட்சித் தேசிய சர்க்கார் என்பதாக ஒன்றை அமைத்தால் மந்திரி சபைக்குள்ளேயே இத்தகைய விமரிசனங்கள் எழும்பும்; அல்லாத பட்சத்தில் வெளிப்படையாகப் பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் தான் மாற்றுக் கருத்துக்கள் வெளியாக வேண்டும். இரண்டுக்கும் இடமில்லாமற் செய்து, ஐக்கிய சிந்தனை இருப்பதாகச்



சிருஷ்டித்திருக்கிறார்கள்; இந்நிலையில் யாவரும் தங்களைக் காத்துக் கொள்வதற்காக அந்த 'ஐக்கிய சிந்தனை' யோடு மட்டுமே உடன்பட்டு நிற்க எண்ணுகிறார்கள். இந்நிலை அபாயகரமானது. ஏனெனில், நெருக்கடிக் காலங்களில்தான் மற்ற சமயங்களைவிடத் தீவிரமாகவும், நுணுக்கமாகவும், பூரணமாகவும் பொருளாதார நிதிக் கொள்கைகளையும், உற்பத்தி — விநியோக அமைப்புக்களையும் தயங்காமல் பரிசீலித்து, ஆன்ம பரிசோதனை செய்துகொள்ள இடமிருக்க வேண்டும். தேசிய சர்க்கார் என்கிற முறையில் மந்திரி சபையில் நிர்வாக விஷயங்களைப் பரிசீலனை செய்யாவிடில், சட்டசபை களிலும், பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் விமரிசனத்துக்கு இடம் அளிக்கத்தான் வேண்டும். இரண்டும் இன்றேல் ஜனநாயகம் உயிர் வாழ முடியாது. உள்ளே நல்ல காற்றைக் கொண்டு வருவதற்காக இன்று சன்னல்கள் தேவை; சன்னலே இல்லாமல் ஆட்சியாளரின் கருத்துக்களையே பிரதிபலிக்கும் கண்ணாடிச் சுவரை எழுப்பிக் கொண்டால் பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம்; ஆனால் ஜனநாயகம் சுவாசிப்பதற்குத் தேவையான காற்று கிடைக்காது. பார்லிமெண்டிலும் சட்டசபைகளிலும் எதிர்க்கட்சிகள் இருக்கின்றனவே எனலாம்; ஆனால் மிகுந்த பலம் பொருந்திய மெஜாரிட்டி சக்தியின் முன்பு இந்த எதிர்ப்பு போதாது. சட்டசபைக்கு வெளியே பத்திரிகைகளிலும் மேடைகளிலும் செய்யக்கூடிய பொதுப்படையான எதிர்ப்புப் பணிக்கு அது ஈடாகாது.


★

சீனத்தின் ஆதிபத்தியம் பரவுவதைத் தடுப்பதற்காகப் பல தேசங்களின் சக்திகளும் ஒன்று சேர்ந்த ஒரு திறமை வாய்ந்த எதிர்ப்பை உருவாக்குவதில் தனக்குத் தனியான பொறுப்பு உள்ளது என ஜப்பான் உணர்ந்துள்ளது. சீன விஸ்தரிப்பை எதிர்த்து பாகிஸ்தான் உள்ளிட்ட ஆசிய நாடுகள் யாவும் தாமே ஒரு கம்யூனிஸ - எதிர்ப்பு அமைப்பை உண்டாக்கிக் கொள்வதின் அவசியத்தை அமெரிக்காவும் உணர்ந்து வருகிறது. ஆசிய நாடுகள் இக்கண்டத்தில் கம்யூனிஸம் பரவாதபடி ஆக்க ரீதியில் தமது சக்திகளை ஒன்றுபடுத்திக் கொண்டால் அதற்கு அமெரிக்கா உதவி தரும் என்றும் நம்ப முடிகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே இன்று ஏற்பட்டுள்ள அனர்த்த நிலை மாற வேண்டும் என்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் சிறிது வெற்றி பெற்றாலும், ஆசியாவுக்குள் கம்யூனிஸ எதிர்ப்புச் சக்திகள் ஓங்கச் செய்வதற்கு நமது நாடு வலிவான முறையில் உதவி புரிய இயலும். இந்த இலட்சியத்தை நோக்கி ஆரம்ப நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். பிரச்னைக்குத் தொடர்பில்லாத மனத்தடைகளையும், பிராந்தியையும், பரஸ்பர ஐயங்களையும் விட்டுக் காரியத்தில் பிரவேசித்தாக வேண்டும். இவ்வாறு ஆசிய நாடுகள் பொதுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை ஒழுங்கான முறையில் வகுத்துக் கொண்டால் இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளின் சக்தியும், வளங்களும் பொருளாதார அபிவிருத்திக்கே நல்ல முறையில் பயனாகும்; ஆயுதப் போட்டியும் அதனால் ஏற்படும் தீர்க்க முடியாத கடன் தொல்லையும், பொருளாதார நாசமும் தவிர்க்கப்படும்.

★

இந்தோனேசிய நாணயத்தின் மதிப்பு கடந்த ஆறே மாதங்களில் தனது பழைய மதிப்பில் கால்பங்காகக் குறைந்து விட்டிருக்கிறது. சென்ற ஓர் ஆண்டில் அந்நாட்டின் முக்கிய உணவான அரிசியின் விலை நாலு மடங்குக்கு மேலாகியுள்ளது. ஆயுதப் போட்டியும், பிடிவாதமான பகையும் பொருளாதார முன்னேற்றத்தைப் பாழ்படுத்தத்தான் செய்யும். ஆரம்பத்தில் அமுதமாக இனித்து, இறுதியில் கொடிய நஞ்சாவதே துவேஷம் முதலிய மனப்போக்குகளின் வேலை முறை. இதனை பகவத் கீதை அழகாக விவரிக்கும்.

சாமான்களின் பத்திரமான பாதுகாப்புக்கு
கீரா ஸ்டீல் காபினெட்கள்



வீட்டுக்கும் சரி, ஆ:பீஸுக்கும் சரி, இடவசதிக் கேற்ப அலங்காரமாக அமையும் கீர ஸ்டீல் காபினெட் சாமான்களைப் பத்திரமாகப் பாதுகாக்க மிகச் சிறந்தது. துரு, அரிப் இவற்றினால் பாதிக்கப்படாதபடி பிரத்தியேக முறையில் தயாரான உயர் ரக ஸ்டீலினா செய்யப்பட்ட இந்த காபினெட் பல வருஷங்கள் மெருகு குலையாமல் இருப்பதற்காக 'ஒவன் பேக்டு' எனாமல் பூசப் பட்டது. இந்த காபினெட் உங்கள் தேவைக் கேற்றபடி பொருத்திக் கொள்ள பல உபகரணங்கள் பொருத்தப்பட்டு பலவித வகைகளிலும் கிடைக்கிறது. மதிப்புள்ள பொருள் களுக்கு பத்திரமான பாதுகாப்பு அளிப்பது கீரா ஸ்டீல் காபினெட்.

Khira

கீரா ஸ்டீல் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடெட் ஸ்வாமி விவேகானந்தா ரோடு, ஸாந்தா க்ரூஸ், பம்பாய்-54



நூறினும் அதிகம் வாழ்க!



சௌந்தரா கைலாசம்




உடுத்தினால் வாழ்வில் கொஞ்சம்
    உயரலாம் என்னும் நாள்வர்(து)
அடுத்ததால் கதரை யின்றைக்(கு)
    அணிகிறார் பலபேர்; நீயோ
"பிடித்துவா கதர ணிந்த
    பித்தரை" என்று மெத்தத்
துடித்ததே வெள்ளைக் காரத்
    துரைத்தனம், அன்றே செய்தாய்!

கையினால் நூற்று செய்யும்
    கதரினைப் போற்று, வாழ்வில்
உய்யலாம் என்றாய், கொண்ட
    உறுதியால் வென்றாய், பக்தி
செய்யலாம் வாராய், தெய்வம்
    தேசமே பாராய் என்று
பையவே நெஞ்சில் தேச
    பக்தியைப் பயிர் செய்தாயே!

எனதரும் அன்னை யாரின்
    இனியநற் றந்தை; உன்னைத்
தனதரும் நண்ப ராகத்
    தழுவிய தாத்தா வீட்டில்
இனிதுறக் கதரில் கூறைச்
    சேலையே எடுக்க வைத்தாய்!
உனதரும் திறமை இந்த
    உலகமே அறிந்த ஒன்று!








சிறக்கவே நிகழ்ந்த அந்தத்
திருமண வீட்டில், கொள்கை
பிடிக்கவும் செய்தாய், நாலு
பெருந்தலை கதரை வாங்கிச்
சுமக்கவும் செய்தா யாமே!
சுதந்திர விதையைத் தூவி
முளைக்கவும் செய்தாய்; வெற்றி
முழக்கமும் செய்தாய், வாழி!

யாரெது சொன்னா லென்ன?
ஆத்திரப் பேச்சா லுன்றன்
சீரதை — வயிரக் குன்றைச்
சிதைக்கவா முடியும்? இந்த
பாரதம் உனது தெய்வம்;
பக்தியை அறியும்; தீட்டும்
கூரிய மதியை என்றும்
குவலயம் புகழும்; வாழி!

தனதொரு சக்தி யாலே
தாக்குவாள்; கூன வைப்பாள்;
மனிதரைக் கால மாது
மயக்குவாள்; ஆனால் நீயோ
புனிதருள் புனித னாகிப்
புகழெனும் தவிசி லேறி
முனிவனாய் மாறிக் கால
முனைப்பினை வென்றாய்; வாழி!





வாழ்வினைக் கெடுத்து வந்த
மதுவினைக் குடித்து மாந்தர்
தாழ்வதைத் தடுத்துக் காக்கச்
சமரினைத் தொடுத்து நின்றாய்!
ஏழ்பிறப் பெடுத்துப் பல்லோர்
நன்றியை இசைத்துச் சென்னி
தாழ்ந்திடத் தொண்டு செய்த
தலைவனே வாழி வாழி!

கண்ணுதல் வந்து நெற்றிக்
கண்ணினைத் திறந்த போதும்
எண்ணிய சொன்ன வீரன்
இணையிலாக் கீர னுக
மண்ணிலே வாழ்ந்த அந்த
மனிதருள் மனிதன் நீயோ?
திண்ணிய நெஞ்சங் காட்டத்
திரும்பவும் வந்திட் டாயோ?

உரைப்பது தவறே என்றிவ்
வுலகெலாம் தன்னைப் பார்த்துச்
சிரிப்பது முடிவென் றாலும்
சிறுமையே கூறி நாடு
வெறுப்பது விளைவென் றாலும்
விலகிடாய், வேறு சொல்லாய்!
பொறுப்பது பெரிதென் றெண்ணிப்
புகல்வது நிகழ்ந்தே தீரும்!

நாயினும் இழோன் என்ற
குகனையோர் நண்பனென்று
வாயினைத் திறந்து சொன்ன
மாலினைத் தொடர்ந்தாய், பெற்ற
தாயினும் அன்பு காட்டித்
தழுவிடப் புகுந்தாய், தெய்வக்
கோயிலைத் திறந்து விட்டுக்
கும்பிடச் செய்தாய் வாழி!

தீயிருந் தெரிந்த நெஞ்சைத்
தினந்தினங் குளிர்வித் தாய்;நீ
ஆயிரம் செய்தாய், எங்கள்
ஆசையா கொய்தாய்? பிஞ்சுக்
காயிலும் இனித்தாய்: முற்றிக்
கனிந்தனை; இருந்தே இன்னும்
நோயினை அறியா யாகி
நூறினும் அதிகம் வாழ்க!

துயரினைப் போக்க வந்த
தூய்மையே வாழி : எங்கள்
அயர்வினை நீக்க வந்த
ஆண்மையே வாழி: நாட்டிற்(கு)
உயர்வினை ஆக்க வந்த
உள்ளமே வாழி: நல்ல
செயலினை ஊக்க வந்த
செல்வமே, தெளிவே வாழி!





செம்மலென வாழியவே!




சத்தியத்தின் நிலைக்களனும்ச
சன்மார்க்கப் பேரொளியாம்
முத்திபெறும் நூலனைத்தும்
முற்றுணர்ந்த இராஜாஜி
சித்தத்துள் ஒன்றுவைத்துச்
செயல்வேறு ஆற்றுகின்ற
பித்தருளம் பெற்றிபெறப்
பல்லாண்டு வாழியவே!

ஒழுக்கத்தின் தனிக்குன்றும்
உயர்மானங் காப்பதுவே
விழுப்பத்திற் காக்கமென
விறலோடு செயலாற்றும்
பழக்கத்தில் பண்பார்ந்த
பாரிலுயர் இராஜாஜி
ஒழுக்கங்கை விட்டவரும்
உயர்வுபெற வாழியவே!

அறிவாற்றல் மிக்கவராய்
அரனருளைப் பெற்றவராய்
வெறியாடும் வீணர்களும்
விற்பனராய் மாறிவிடுங்
குறியோடு செயலாற்றுங்
கொற்றவனும் இராஜாஜி
நெறிகாத்து நிலத்தெங்கும்
நேர்மையுற வாழியவே!

அறத்திற்கு நல்லூற்றும்
அழுக்காறு போக்குமுயர்த்
திறத்திற்கும் செய்நிலமாய்த்
திகழ்கின்ற இராஜாஜி
மறத்திற்கு மசியாத
மாண்புடைய பெரியோரைச்
சிறப்பிக்கும் நாடெங்கும்
செம்மலென வாழியவே!

கோவை அய்யாமுத்து





வாழ்க பல்லாண்(டு)

சா.கணேசன்



என்னும் எண்ணம் யாவினிலும், இ
பண்ணும் பணிகள் முழுதினிலும், பாப
புண்ணி யத்தின் மணம் கமழும் புனித வ
மண்ணில் நல்ல படிவாழ வரம்தா இறைவா

கன்னித் தமிழே என்மொழியாம், கம்பன் ப
என்ன நம்பி எந்நாளும் இறுமாந் திருப்பே
மன்னும் மொழிகள் பலவுக்கும் மாளாப் புலவ
பின்னும் என்றன் நெஞ்சகத்தில் பேதம் இல்லா மதிப்புரு-

சிந்தை இங்ஙன் இருந்தாலும், தேயம் அடிமை எனும்போது,
முந்தைக் கலைகள், நாகரிகம், மொழியின் மேன்மை, பண்பாடு
எந்தப் பெருமை ஒன்றேனும் இல்லை நமக்கே என உணர்ந்தேன்
அந்த உணர்வே அரசியலில் அடியேன் நுழையக் காரணமாம்.

சோர்ந்து கிடந்த இந்தியர்தம் துயரம் போக்கி வாழ்வளிக்க
மாந்தர் தம்முள் அற முதலாய் மலர்ந்து மணக்கும் பெரியோராம்
காந்தி யடிகள் ராஜாஜி கடமை உணர்த்தி எனை ஆண்டார்
தேர்ந்து யானும் அவர்ஆணை சிரமேல் ஏந்திப் பணிபுரிவேன்.

'அன்றோ, ''நம்மை அன்னியர்கள் அடிமை கொள்ளச் சம்மதியோம்''
என்றே, உள்ளம் கொதித்தெழுந்தோம்; எய்தி விட்டோம் விடுதலையை!
நன்றாய், மகிழ்வாய், சுதந்திரராய், நாமும் வாழ்வோம் என்றிருந்தோம்;
இன்றோ நம்தம் வாழ்வினிலே எல்லாம் சர்க்கார் மயமாச்சே.

'நிலத்திற் குச்ச வரம்பென்றார், நேய உழவர் நலம்கொன்றார்;
இலத்தில் பொன்செய் கொல்லரெலாம், தங்கக் கட்டுப் பாடென்னும்
பலத்த அடியால் பதைக்கின்றார்; பற்றாக் குறைக்கு ஹிந்தியெனும்
ஜலத்திற் குதவா மொழியதுவே நாடாள் மொழியாம் என்கின்றார்.

'இன்றிக் காட்சி புரிபவர்கள் எதற்கும் கட்டுப் பாடென்பார்;
நன்றே எனினும் சுதந்திரமாய் நாட்டில் எதுவும் செய்யவொட்டார்;
நின்று பசப்பி காங்கிரஸின் நிதிக்குக் கொடுத்தால் நினைத்த எலாம்
அன்றே முடியச் செய்திடுவார்; அந்தோ! இதுவோ ஆளும்நெறி?

'காந்தி பெயரைச் சொல்லிடுவார்; கனவில் கூட அவர்வழியை
ஏந்தி நிற்க மனம்கொள்ளார்; என்றும் சோஷ லிசம்பேசி
மாந்தர் தம்மை அறநெறியில் மான மாக வாழவிடார்;
தாம்தோம் என்று திட்டமிட்டுத் தாழாக் கடனில் மூழ்கடித்தார்.

கூட்டுச் சேராக் கொள்கை என்பார், கூடா நட்பால் குடிகெடுப்பார்;
நாட்டிற் குதவும் நல்லோரை நாக்கூசாமல் பழியுரைப்பார்;
மாட்டிக் கொண்ட சோஷலிச வறட்டுக் கொள்கை அளறினின்றும்
மீட்டிக் கொள்ள வகையறியார், மேலும்மேலும் அழுந்துகின்றார்.

'நாட்டின் ஒழுக்கம் சிதைந்தாலும், நாணயத்தின் உறுதிநிலை
ஆட்டம் கண்டு தளர்ந்தாலும், அறனும் திறனும் மெலிந்தாலும்,
ஓட்டு வாங்கிக் கோலோச்ச உதவும் பணத்தைத் திரட்டுதற்காய்
கோட்டா, பெர்மிட், லைசென்ஸைக் கொண்டு செலுத்த முனைகின்றார்.

'முன்னர் இருந்த சுதந்திரமும் முற்றும் பறிபோய் நிற்கின்றோம்;
தின்னச் சோறும் கிடைக்கவில்லை; செய்யத் தொழிலும் கிட்டவில்லை;
என்ன முறையிற் பார்த்தாலும் எங்கும் செம்மை இலங்கவில்லை.
இன்னும் என்ன இடிசாமம் இவரால் நமக்கு விளைந்திடுமோ?'

என்றென் றஞ்சி நல்லறிஞர் இதயம் நொந்து கலங்குவதை
நன்றும் உணர்ந்த மாமேதை நாட்டில் ஒருவர் உண்டென்றால்
தொன்று தொடுநல் அறவழியில் தோய்ந்தே யார்க்கும் அஞ்சாமல்
நின்று பணிசெய் ராஜாஜி நெஞ்சம் தூயர் அவராவார்.

காந்தியடிகள் மாண்டுவிட்டார்; காலம் ஆறேர் பட்டேலும்;
சார்ந்த தலைவர் எவர்தாமும் தட்டிப்பேசத் துணியவில்லை
வாய்ந்த கடமை உணர்வாலே மதிக்கத்தக்க அறிவுரைகள்
ஆய்ந்து பகர்ந்தார் ராஜாஜி ஆள்வோர் செவியில் ஏறவில்லை.

'இன்னும் சும்மா இருந்திட்டால் இதுகால் பட்ட பாடெல்லாம்
மின்னல் போலத் தேய்ந்துவிடும் விழலுக்கிறைத்த நீராமே'
என்ன எண்ணிக் காங்கிரஸை எதிர்க்க நல்ல கட்சிதனை
மன்னச் செய்தல் அல்லாமல் மாற்று வழியே இல்லென்றார்.

நாட்டின் நல்ல மதியாளர், நாளும் தொண்டே புரிபவர்கள்
கேட்டார், ஆய்ந்தார், ராஜாஜி கிளர்த்தும் அறம்சேர் நல்லுரையை;
மீட்டோர் வழியும் இலையதனால், மேவி ஒன்றாய்க்கூடி நின்று
வேட்டார் புதிய கட்சியினை மேலாம் விதிகள் நன்கமைத்தே.

'நாடு பெற்ற சுதந்திரத்தை நாட்டு மக்கள் பெறவேண்டும்;
கூடுமான வரையினிலும் குறைய வேண்டும் அதிகாரம்;
பாடு படுவோர் எவரேனும் பயனை அடையும் முறைவேண்டும்;
கேடு பயவா நெறியினிலே கிளைக்கவேண்டும் தொழிற்போட்டி.

— வேறு —

'தப்பிதம் தோன்று வாறு தரணியை ஆள்வ தல்லால்,
செப்பிய தொழில்கள் எல்லாம் செய்வதோ அரசுக் கொவ்வா;
அப்படிச் செய்தால் கேடே அடைந்திடும்' என்ப போன்ற
துப்புடைக் கொள்கை எல்லாம் துலங்கிட விளக்கம் செய்தார்.

நிதம்பல சட்டம் செய்து நீதியோ டறத்தைக் கொன்று
சுதம்பல தோன்ற நிற்கும் காங்கிரஸ் ஆட்சி மாற்றி
இதம்தரும் ஆட்சி காண எழுந்ததோர் இயக்கத் திற்குச்
சுதந்திரக் கட்சி என்று சூட்டினர் பெயரை நன்றே!



தேசத்தின் பாலும், மக்கட் சேவையின் பாலும், மிக்க
பாசத்தி னாலே இன்று பருவந்தான் முதிர்ந்த போதும்
நாசத்தை எடுத்துக் காட்டி நன்மையை விடாது கூறும்
மாசற்ற ராஜா ஜீயே வழிகாட்டி யானார் வாழ்க!

எத்தகைய சிக்க லேனும் இடுக்கணை நெருக்கி னாலும்
புத்தியது தெளிவே காட்டும்; புதிர்களெல்லாம் விடுபட் டோடும்;
சித்தமது கலக்கம் இன்றிச் செயற்பட்டு வெற்றி கூட்டும்;
உத்தமராம் ராஜா ஜீயை உலகமெலாம் போற்றி நிற்கும்.



மன்னிய நிகழ்ச்சி கொண்டு வருபொருள் உரைக்கும் ஆற்றல்
தன்னிகர் இல்லா மேதை; தனக்கென ஏதும் எண்ணார்;
அன்னவர் வாழ்வை ஆய்ந்தால் அனைத்துமே தியாக சீலம்;
சென்னியே போவ தேனும் திருவறம் கடவாத் திரம்.


எண்பத்தேழ் ஆண்டு தன்னில் எடுத்தடி வைப்பா ரேனும்
பண்பட்ட வீர உள்ளம் பருவத்தால் தளர வில்லை;
கும்பிட்டு வாழும் கூட்டம் கொடுமையே நிகழ்த்தும் போதும்
எம்பிட்டும் கலங்கா ஏந்தல்! என்சொல்லி ஏத்துவோமே!

— வேறு —

'தொன்றுதொடு நாளாகத் தொடர்ந்துவரும் நல்லறமே துணையாக் கொண்டு
நன்றுதரு திருப்பணியே நயந்துதினம் புரிந்துவளர் நல்லான் தோன்றல்'
என்றுபல பெரியோர்கள் இசைக்கின்ற ராஜாஜீ இலங்கு தில்லை
மன்றில்நடம் ஆடுகின்றான் வளம் சுரக்கப் பல்லாண்டு மகிழ்ந்து வாழ்க!

ஊழல்மிகு ஆட்சியுடன் ஊதாரித் தனத்தையுமே ஒழியச் செய்து
தாழ்நிலை ஏழையரும் தரணிதனில் சரிசமமாய்த் தாழ் பார்ந்து
வாழவழி காட்டுகின்ற மாமேதை ராஜாஜீ வையம் தன்னில்
ஏழுமலை யானருள இன்பமுடன் பல்லாண்டு இருந்து வாழ்க!

நல்லான்சக் கரவர்த்தி நற்குடியில் தோன்றிஒளிர் ஞான தீபம்;
சொல்லாலும் எழுத்தாலும் தொண்டாலும் அறமுணர்த்தும் தூய செம்மல்;
எல்லாரும் சுதந்திரராய் இருக்கவழி காட்டும் எங்கள் இராஜா ஜீதாம்
பல்லாண்டு பல்லாண்டு பங்கயத்தோன் அருள்சுரக்கப் படர்ந்து வாழ்க!






கச்சிதமான மென்மை, கதகதப்பு ... உங்கள் கம்பளித் துணிகளின் பண்புகளைக் காப்பது: சலவையிலே நருவிசாகப் பராமரிக்கும் லக்ஸ். பட்டு, நைலான், ரேயான், டெரிலீன் ... பாங்கான துணிகள் எல்லாமே பார்க்கப் புதிதாய்ப் பன்னெடுநாள் நீடித்திருக்கத் துணைபுரிவது: தூய, மெல்லிளம் லக்ஸ் தூள்களால் சலவை!

அத்தனை நருவிசாக ஆடைகளைக் காப்பது லக்ஸ் ஒன்றே!

LX. 21-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்.....
பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்."

என்று அளப்பருங் கருணையுடன் பாடிய மகாகவி பாரதி இன்று நம்மிடையே இருந்தால் அவருக்கு எண்பத்தாறாவது வயது. அந்தக் கவிஞர் பெருமானுக்கு நாடு முழுவதும் எண்பத்து நாலாவது ஜயந்தியைக் கொண்டாடி அஞ்சலி செலுத்தும் இவ்வேளையிலே, பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் எழுதும் "கத்தும் குயிலோசை" என்னும் காவிய சுவை ததும்பும் கவினுறு கட்டுரையை வெளியிடுவதில் மகிழ்கிறோம். —ஆசிரியர்

கத்தும் குயிலோசை



பதினாறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. பாரதியாரின் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாட்டைத் திரும்பவும் படித்துக் கொண்டிருந்தேன். நன்றாகத் தெரிந்த பாடல், பழக்கமான சொற்கள். ஆகவே பழைய பாதை ஒன்றில் நடக்கும் அலட்சியத்தோடு, என்னுடைய மனம் மேலெழுந்தவாறாக, பாடல் மேல் ஊர்ந்து சென்றது. காணி நிலம், தூய்ய நிறத்தொரு மாளிகை, கேணி, தென்னை மரக் கீற்று, இளநீர் — இவையெல்லாம் மங்கலாக நிழலாடின. சோம்பலாக, அடுத்து வரும் அடிகளின் மீது என் மனம் உலாவியது.

பத்துப் பன்னிரண்டு — தென்னைமரம்
பக்கத்திலே வேண்டும்

முதற் பகுதியில் தென்னை மரக் கீற்று ஒன்று போதும் என்று எண்ணிய பாரதியார், இப்போது பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களல்லவா கேட்கிறார், பராசக்தி கொடுக்கத் தொடங்கினால், கவிஞனுடைய இருப்பிடக் குமிந்து, ஆசை தலைதூக்கும் போல் இருக்கிறது என்று நினைத்து, எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன். போகட்டும், அப்படியும் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள்தானே கேட்கிறார், பராசக்திதான் கொடுக்கட்டுமே, உலகெல்லாம் உடையவளான அவளுக்குக் குறைந்தாவிடப் போகிறது என்று பாரதியார் முதுகிலே தட்டிக் கொடுக்கின்ற பாவனையில் எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

பாடல் தொடர்ந்தது.

— நல்ல
முத்துச் சுடர்போலே — நிலாவொளி
முன்பு வரவேணும்

வரட்டுமே, யாருக்கு என்ன செலவு, முத்துக்கள் வேண்டும் என்று கேட்கவில்லையே, முத்துச் சுடர் போல் வரும் நிலவைத்தானே கவிஞர் விரும்புகிறார்? பராசக்தி தன் ஆணைத்தால் மேகங்களை ஒதுக்கிவிட்டு, தெளிந்த மறுவில்லாத நிலவைத் தரமாட்டாளா, தருவாள் என்று வைமிட்டேன். நிலவை வேண்டுகிறாரே, அதுதான் தவறாமல் தானே 'வருமே' வேண்டுவானேன், ஒருசமயம் நிலவை வரவேற்கும் மனத்தை வேண்டுகிறாரோ என்ற நிறைவுப்பக் குயுக்தி ஒன்றைச் செய்து, 'பலே, ஆராய்ச்சி அபாரம்' என்று சொல்லி முடிப்பதற்குள்,

கத்தும் குயிலோசை — சற்றே வந்து
காதிற் படவேணும்

என்று பாரதியார் பேசினார்.

அதுவரை சோம்பலாக ஊர்ந்து சென்ற என் மனம் பளிச்சென்று நிமிர்ந்தது. 'குயில் கத்துமா', அதன் குரல் 'ஓசையா?' இனிமைக்கு எடுத்துக்காட்டாகவே, தமிழ்க் கவிதை மரபில் குயிலின் குரல் இடம் பெற்றிருக்க இந்தக் கவிஞர் மட்டும் குயில் கத்தும் என்கிறாரே, இது என்ன வேடிக்கை! 'கீதம் இனிய குயிலே', 'பொழில்கள் தோறும் குயில் கூவ', 'களித்திசை பாடும் குயிலே', 'குயிலினம் கூவும் சோலை', இப்படியெல்லாம் கவிஞர்கள் பேசியிருக்க, இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் குயிலுக்குக் கத்துகின்ற தனிப் பெருமையைக் கற்பித்திருக்கிறாரே, இதுதான் 'புதிய' கவிதையோ? அல்லது, பத்து, முத்து என்ற சொற்களுக்கு எதுகை தேடி, 'கத்தும்' என்று போட்டு வைத்தாரோ? அப்படியானாலும் 'கத்தும் குயில் ஓசை' என்று கத்தலோடு விடாமல் ஓசையை வேறு சேர்த்துக்கொண்டதன் பொருளென்ன?

தவிர, குயில் இரவிலே குரலெழுப்பும் பறவையா, இல்லையே! நிலவிலே குயில் சத்தம் கொடுத்ததாகப் பாரதியார் பேசுகிறாரே!

ஆங்கிலத்திலே சொல்வதுண்டு: 'Even Homer nods' ஹோமர் என்ற பெரும் புலவனும் தூங்கி வழியலாம், இடறி விழலாம் என்று. தமிழிலே 'யானைக்கும் அடி சறுக்கும்' என்று சொல்லி வைப்போம். பாரதியார் சிறந்த கவிஞர்தான். ஆனாலும் அவருக்கும் இங்கே அடி சறுக்கியது போல் இருக்கிறது. ஆமாம், அப்படித்தான் என்று முடிவு கட்டி, பாரதியாரிடம் கூடக் குறை கண்ட என்



அ. சீநிவாசராகவன்

னுடைய நக்கீரத்தை நானே பாராட்டிக் கொண்டு... இதற்குப் பிறகு, பாட்டை யாரா வது படிப்பார்களா? 'காணி நில'த்தை ஒதுக்கி வைத்தேன்.

இது நடந்த இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் இரவு. காற்றுக்காக வாசலில் வந்து, என்னுடைய பித்தான் நாற்காலி சிம்மாதனத்தில் வீற்றிருந்தேன். பொழுது சாய்ந்து ஏழெட்டு நாழிகைக்கு மேலிருக்கும். அன்று நல்ல நிலா. என் சிறு வீட்டை அடுத்துக் கிழக்கே அடர்ந்த தென்னந் தோப்பில் நிலா திட்டுத் திட்டாகத் தேங்கிக் கிடந்தது: தென்னை மட்டைகளின் மேல் உருகிய வெள்ளியாக வழிந்தோடியது. சுவர்க் கோழியின் சத்தத்தைக் காணோம். ஒரே மோனம். ஏதோ குருட்டு யோசனையில் ஆழ்ந்தேன். தெளிவற்ற எண்ணச் சிதர்கள் ஏதேதோ தலைதூக்கின. இனங் காண்பதற்குள் ஓடி மறைந்தன. நிலா, நிழல், ஓடிய வெள்ளி, உறைந்து சிலிர்த்த இரும்பு, மேலே ஓரிரு பொன் தாரகை, அமைதி.

சரேலென அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்தது ஒரு வேதனைக் குரல். பறவையின் குரல்தான். தோப்பின் உள்ளிருந்து வந்த அந்தக் குரல், குயிலின் கூவல் என்று தெரிந்து கொள்வதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. அப்படி உருமாறிப் போயிருந்தது. அதற்குள் நாலைந்து முறை அந்தக் குயில் கூவி விட்டது.

குயில் கூவுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'அக்கூ' என்று மெல்லத் தொடங்கி, படிப் படியாக மேலே ஏறி, கடைசியில் நின்றுவிடும். மறுபடியும் கீழேயிருந்து தொடங்கும். வேனிற் காலத்துப் பிற்பகல் மோனத்தில் மாந் தோப்பிலிருந்து வரும் இந்த அற்புத இசையில் மயங்காதவர் உண்டோ? கடைசிவரையில் எவ்வளவு உயர்ந்த ஸ்தாயியை எட்டிப் பிடித்தாலும் குயிலின் குரலில் தெளிவு, இனிமை, கனிப்பு, பிசிறில்லாத நாதம், இவையே நிறைந்திருக்கும்.

ஆனால், அன்றிரவு என் வீட்டை அடுத்த தோப்பில் நிலவிலே, அந்தக் குயில் கூவவில்லை. கத்தியது. ஆம், கத்தியது. நாலைந்து முறை உச்ச ஸ்தாயியில் கத்திக் கத்தி முடிவில் குரல் உடைந்து, கரகரத்து விம்மியது. சிறிது நேரம் மோனம். பிறகு மறுபடியும் அந்தக் கதறல். பாரதியாரின் சொற்கள் நினைவுக்கு வந்தன.

கத்தும் குயிலோசை –
சற்றே வந்து
காதிற் படவேணும்

எனக்குப் புல்லரித்தது. குயிலும் கூட, கத்தும் போலிருக்கிறதே, ஏன் இந்தக் குயில் இப்படி இரவிலே குரல் எழுப்பியது? குயில் கூவுவது நமக்கு இனிமையான இசையை வழங்கவா? இல்லை. அது தன் பெடையை அழைக்கிறது. அந்தக் காதற் குரலை நாம் கேட்கும் குயிலின் 'இனிய' கீதம். பகல் முழுதும் பெடையைத் தேடித் தேடி அழைத்து, ஏமாந்து, இரவு வந்த பின்னும் அழைத்து வெந்தது போயிருக்கிறது, அந்த அப்பாவிக் குயில். இல்லாவிட்டால் இரவில் குரல் கொடுக்குமா? இப்போது தாபம், ஏமாற்றம், சோர்வு, வேதனை, அனைத்தும் கலந்த வெறி யல்லவா குயிலின் குரலில் பேசுகிறது? அந்தக் குரல் கத்தலாக இல்லாமல், கரகரத்து, ஒடிந்து மடியாமல், வேறு எவ்விதமாக அமையும்?

'கத்தும் குயிலோசை'. பாரதியார் கவிதை மரபை விட்டு விலகிப் போயிருக்கிறார். உண்மைதான். ஆனால் உண்மையை விட்டு விலகவில்லை. என்றோ ஒரு நாள், இரவில், நிலவில், குயில் கத்திக் கத்தி அலமருவதை அவர் கேட்டிருக்கிறார், நெஞ்சில் வாங்கியிருக்கிறார். ஆகவேதான், 'கத்தும் குயிலோசை'

என்று பாடுகிறார். 'கத்தும்' என்பது எதுகைக் காக வரவில்லை, அப்படியே, அது கவிதைக் காக வந்தது என்று ஒரு குட்டுக் குட்டிக் கொண்டேன்.

அது சரிதான். ஆனால் 'காணி நிலம் ஒன்றிலே இன்பச் சூழல் ஒன்றை அமைத்துத் தா' ' என்று பராசக்தியை வேண்டும் இந்தக் கவிஞர், மாளிகையும், தென்னை மரமும், கேணியும், முத்துச் சுடர்போல நிலவும் வேண் டும் என்று வரம் கேட்கும் இவர், எதற் காக வேதனை நிறைந்த குயிலின் கத்தல் தமது காதிற்பட வேண்டும் என்று கேட் கிறார். அவர் விரும்பும் அந்தக் காணி நிலச் சொர்க்கத்தின் கலப்பற்ற இன்பத்தை இந்தச் சோகக் குரல் சிதைத்து விடாதா?

கலப்பற்ற இன்பம் என்பது உண்டா? அது துயரிலே உழல்கின்ற மனிதனுடைய கற்பனை. இன்பமும், துன்பமும், ஒளியும் நிழலும் போல; சூரியனும் சாயாதேவியும் போல; அவற்றைப் பிரிக்க முடியாது.

'துன்பு உளது எனில் அன்றோ சுகம் உளது' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் பேசும் போது, இந்த உலகின் மாறா நியதி ஒன் றையே நமக்கு நினைவுபடுத்துகிறான். துன்பம் இருப்பதால்தான் இன்பம்.

இதைத் தெரிந்துதான் பாரதியார் தம்முடைய காணி நிலத்தில் குயிலின் வேதனைக் குரல் வடிவத்தில், துன்பத்துக்கு இடந் தருகிறாரோ? ஆனால் அந்தத் துன்பம் பெருவெள்ளமாக வந்தால் காணி நிலத்தில் அவர் கட்டுகின்ற இன்பம் சிதறிப் போகுமே! ஆகவே, குயிலின் கதறல் சிறிது காதில் விழுந்தால் போதும்,

சற்றே வந்து
காதிற்பட வேணும்

என்று பாடுகிறாரோ? எங்கோ தொலைவில் துன்பம் இருக்கிறது. ஆனால் இருக்கிறது என்ற உணர்வுதான், காணி நிலத்துக் களிப் புக்கு அழுத்தம் தருகிறதோ, அதற்காகத் தான் அதைத் தமது பாட்டில் பாரதியார் கொண்டு வந்தாரோ என்றெல்லாம் நினைத்தேன்.

ஆனாலும், கவிஞனுடைய பரிவு, இதை எப்படி அனுமதித்தது? உலகில் தோல்வியும், ஏமாற்றமும் துன்பமும் உள்ளன என்பதைக் கவிஞன் மறப்பதில்லை. ஆனால் அதற்காக அந்தத் துன்பத்தைத் தன்னுடைய இன்பத் தைத் தூக்கிக் காட்டும் சாதனமாகவா கவிஞன் பயன்படுத்த வேண்டும்? பாரதியா ருடைய காணி நிலப் பாயசத்திற்கு, குயிலின் வேதனைக் கதறலா ஊறுகாயாக அமைய வேண்டும் ?

அப்படித்தான் என்று பாட்டைச் சொல் லிப் பார்த்துக் கொண்ட எனக்கு முதலில் தோன்றியது. இல்லாவிட்டால், குயிலின் கத்தல் சற்றே வந்து காதிற்பட வேண்டும் என்று சொல்லிவிட்டு, தாம் வேண்டும் இன்பத்தின் மற்றைய அம்சங்களைக் கவிஞர் அடுக்கிக் கொண்டு போயிருப்பாரா? இவ் வளவு கடின இதயமா பாரதியாருக்கு?

சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாய் இளந்
தென்றல் வர வேணும்
பாட்டுக் கலந்திடவே — அங்கே ஒரு
பத்தினிப் பெண் வேணும் — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டு தர வேணும்

தென்றல், பத்தினிப் பெண்ணோடு கூட்டுக் களி — ஆனால் தொலைவிலிருந்து, நிலவிலே பெடைக்காக ஏங்கும் அந்தக் குயிலின் குரல். பிறகு, அந்தக் குரலைப் பற்றிப் பேச்சே இல்லை. ஒரு சமயம் அது நின்று விட்டதோ. இல்லை, பாரதியார்தான் தமது இன்பத்திலே அழுந்தி விட்டாரோ ?

குயிலின் குரல் ஓய்ந்ததோ, இல்லையோ, அதன் எதிரொலி பாரதியாரின் நெஞ்சிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை அடுத்து வரும் அவருடைய சொற்கள் காட்டுகின்றன. குயிலின் ஓசையாக, இருக் கிறேன் என்று தொலைவிலிருந்து எச்சரிக்கை கொடுக்கும் துன்பம், காணி நிலத்துக் குள்ளே, அதன் தித்திப்பில் கசப்புப் பெருங் கடலாக வருவதற்கு எவ்வளவு நேரமாகும் ? வந்தால், எப்படிக் காத்துக் கொள்வது, வராமலிருக்கும்படி அதைத் தடுக்கும் அணை எது? பராசக்தியின் அருள்தான்.

காட்டு வெளியினிலே — அம்மா, நின்றன்
காவலுற வேணும்

இந்தக் காவலின் அரவணைப்பில், துன்பம் இருக்கிறது என்றாலும் நம்மை அணுகாது என்ற நம்பிக்கையில், காணி நிலத்திலிருந்து, அந்தத் துன்பம் அனைத்தையும் ஒழிக்கும் பாடல்களை ஏன் வீசப்படாது?

—என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்

இல்லை, பாட்டின் முடிவிலே, காணி நிலத் தையே வீசி எறிந்துவிட்டு வையத்தைப் பாலிக்க, பாட்டைக் கையிலேந்தி — அதுவும் பராசக்தி தந்த பரிசுதானே — பாரதியார் புறப்படுகிறார் என்றே எனக்குத் தோன்றியது.

'கத்தும் குயிலோசை' என்பது பாட்டின் இருப்பு மையம். அது வரையில், இந்த உலக சுகம்; அதன் பகைப்புலமாக, அதை எடுத்துக் காட்டும் கருவியாகவருகிறது குயிலின் கத்தல். ஆனால் துன்பத்தின் சின்னமாக ஒலிக்கும் அது, வர வர நெருங்கி வளர்ந்து வளர்ந்து கவிஞருடைய நெஞ்சு முழுவதுமே நிறைத்து, பராசக்தியிடம் பெற்ற கவிதை களையே படையாகக் கொண்டு, அவரை உலக மென்ற துன்பக் களத்துக்குப் போக வைக் கிறது. இப்படியெல்லாம் எண்ணினேன்.

சரிதானோ? மேலே ஒன்றிரண்டு மேகங்கள் மிதந்து வந்தன. நிலவு மங்கியது. காற்று, குருடனைப் போல் தட்டித் தடவி என்னைச் சுற்றித் தடுமாறி விட்டுத் தோப்பிருளில் எதையோ தேடிச் சென்றது. தென்னையின் சலசலப்பு, 'ஏன் வந்தாய்' என்று காற்றைக் கேட்டது. குயிலின் குரல் ஒடுங்கி விட்டது. சுவர்க்கோழிகள் தமது ஓயா நெடும் சுருதியை மீட்டத் தொடங்கின. அந்தச் சுருதியோடு ஒன்றிப் பாரதியாரின் 'காணி நிலம்'—எளிமை யின் எல்லை நிலத்து மைந்திலே கவிதையின் இதயத்தைக் காட்டும் அந்த அற்புதப் படைப்பு — என் நெஞ்சிலே ஒலித்தது இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கிறது

வெற்றித் திருநகர்

உள்ளே எழுந்து சென்ற சாளுவ நரசிம்மர் உணவு ஏற்பாடுகள் சித்தமாகி விட்டதென்று வந்து கூறித் தந்தையையும் மகனையும் சாப்பிடுவதற்கு அழைத்தார். விருந்தும் ஒரு வழியாக முடிந்தது.

லட்சுமியை அழைத்து விசுவநாதனுக்குத் தாம்பூலம் கொடுக்கச் சொல்லிவிட்டு, நாகம நாயக்கரைத் தனியே அழைத்துக் கொண்டு மேல் மாடத்துக்குச் சென்றார் அமைச்சர். அங்கே அவர்கள் இருவரும் தனித்திருந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்படி அவர்கள் தனித்துப் பேசுவது வழக்கமாதலால் விசுவநாதனும் அதைத் தவறாக நினைக்கவில்லை.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் தாம்பூலம் தரித்துக் கொள்வதும் அதை விருந்தினருக்கு வழங்குவதும் மிகவும் உயர்ந்த மரியாதைகளாகக் கருதப்பட்டன. சக்கரவர்த்திக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கும் இளைஞனாகத்தான் விசுவநாதன் முதன் முதலில் அரண்மனையில் பணியாற்றினான். மிகவும் எளிதான பணி போல் அது தோன்றினாலும் சக்கரவர்த்தியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களே பொன்னாலாகிய அந்தச் சிறு பேழையைச் சுமந்து கொண்டு சக்கரவர்த்தியின் அருகில் இருக்க முடியும். தம்மையொத்த நிலையினர் என்று கருதும் விருந்தினருக்கு மட்டிலும் சக்கரவர்த்தி தாமே விசுவநாதனிடமிருந்து தாம்பூலச் சுருளை வாங்கித் தம் கரத்தாலேயே விருந்தினருக்கு வழங்குவார். பகை கொண்டிருந்த அரசர்களது நட்புறவை வளர்க்கும் சின்னமாகவும் தாம்பூலம் பரிமாறிக் கொள்ளப் பெறுவதுண்டு. நெருக்கமான உறவை வளர்க்கும் ஒரு பேராற்றல் அப்போது அந்தத் தாம்பூலச் சுருளுக்கு இருந்தது. ஆகவே தாம்பூலச் சுருள் மடிப்பதை ஓர் அருங்கலையாகவே அங்கு வளர்த்திருந்தார்கள்.

தாம்பூலப் பேழையை எடுத்துக் கொண்டு லட்சுமி விசுவநாதனிடம் வந்தாள். அவளுக்கே தன் தந்தையார் இப்படிக் கூறியது வியப்பாகத்தான் இருந்தது. வழக்கமாக யாருக்குமே அவர் தாம்பூலம் வழங்கும்படி லட்சுமியிடம் கூறியதில்லை.

விசுவநாதனின் தாயாரும் லட்சுமியின் தாயாரும் உள்ளே பேசிக் கொண்டிருந்

அகிலன்





தனர். நாகமரும் அமைச்சரும் மேல்மாடத்தில் பேசிக் கொண்டிருந்தனர். கூடத்திலிருந்த விசுவநாதனிடம் தாம்பூலப் பேழையை எடுத்துக் கொண்டு வந்தாள் லட்சுமி.

லட்சுமி தன் கரத்தாலேயே தாம்பூலத்துக்குரிய வாசனைத் திரவியங்களைச் சேர்த்து அதை ஒரு ரோஜா மலரின் வடிவத்தில் மடிக்கத் தொடங்கினாள். அந்தக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்த விசுவநாதனுக்கு அவளுடைய கைவண்ணத்தின் புதுமை மிகுந்த வியப்பைத் தந்தது.

நாணத்தால் முகம் சிவக்க, விழிக் கோணத்தால் அவனைப் புன்முறுவலுடன் நோக்கிவிட்டு, தனது மென்தளிர்க் கரத்தால் தாம்பூலச் சுருளை அவனிடம் நீட்டினாள் லட்சுமி.

அதை வாங்கும்போது அவன் மனம் பூரிப்பால் ஊற்றுப் பெருக்கெடுத்துப் பொங்கியது. அதையே சிறிது நேரம் வேடிக்கையாக உற்றுப் பார்த்தான். ''எனக்கே இப்படி மடிக்கத் தெரியாது; இவ்வளவுக்கும் இது என்னுடைய தொழில்!'' என்றான் விசுவநாதன்.

''இல்லை; இது எங்களுடைய பிறவித் தொழில்'' என்றாள் லட்சுமி; ''இதில் மட்டும் நீங்கள் எங்களை மிஞ்சிவிட முடியாது. தெரியுமா?''

''நமக்குள் போர் நீங்கி விட்டதற்கு இது அடையாளம்; நம்முடைய புது உறவின் சின்னமாக நீ இதைக் கொடுப்பதாக நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்று கூறினான் விசுவநாதன்.

அதே வேளையில் மேல்மாடத்தில் சாளுவ நரசிம்மரும் நாகமநாயக்கரிடம் சில இரகசியமான ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குத் தீவிரமான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்தார்.

அத்தியாயம் பதினொன்று

தந்தையின் லட்சியம்

நாகம நாயக்கரின் ஆட்சிப் பொறுப்பிலிருந்த நாடு நகரங்களிலிருந்து முப்படைகளும் வந்து விஜய நகரத்தில் குவிந்து கொண்டிருந்தன. தமது யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை இவற்றில் சரிபாதியை மட்டும் திரட்டிக் கொண்டு புறப்படுவதென்று முடிவு செய்தார் நாகமர். பொக்கிஷத்தைப் பேணிக் காப்பதில் மட்டிலும் அவர் சிக்கனமானவரல்லர்; போரில் குறைந்த அளவுக்கு வீரர்களையும் ஆயுதங்களையும் பயன்படுத்தி நிறைந்த வெற்றியைத் தேடும் போர்முறைத் தந்திரங்களிலும் அவருக்குத் தேர்ச்சியுண்டு.

யானைப் படைகளும் குதிரைப் படைகளும் இன்னும் புறப்படவில்லை. பாண்டியர் இருவரையும், அவர்களோடு வந்த வீரர்களையும் தம்மோடு அழைத்துச் செல்வதாக இருந்தார் நாகம நாயக்கர். பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அரண்மனைக்கு வந்து அரியநாத முதலியாருடன் பொக்கிஷத்தின் இருப்புக்களைச் சரிபார்த்து முடித்தார். பிறகு சக்கரவர்த்தியைக் கண்டு செய்திகளைக் கூறிவிட்டுத் திறவுகோல்களை அவர் முன்பாகப் பணிவோடு வைத்தார்.

''நான் இருப்புப் பார்த்து முடித்துவிட்டேன்; எல்லாம் சரியாக இருக்கின்றன. பொறுப்பேற்கும் விசுவநாதன் வந்து இனிக் கணக்கெடுத்துக் கொள்ளலாம்'' என்றார் நாகமநாயக்கர்.

சக்கரவர்த்தி தமக்குள் புன்னகை பூத்துக் கொண்டார். உடனே அங்கு விசுவநாதனை வரவழைத்தார்.

''பொக்கிஷத்தின் இருப்பை நீ சரி பார்த்துக் கொள்ளலாம் என்கிறார் உன் அப்பா. நீ என்ன சொல்கிறாய்?''

''சக்கரவர்த்தியின் கட்டளைப்படி செய்கிறேன்'' என்றான் அவன்.

அதற்கு மேலும் தமது சிரிப்பை அடக்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்து விட்டார் சக்கரவர்த்தி. ''பொருளைப் பற்றியவரையில் நாகமர் யாரையும் நம்புவதில்லை. அதே போல் நீயும் எங்கே அவரை நம்ப மாட்டாயோ என்று நினைத்துவிட்டார்'' என்று விசுவநாதனிடம் கூறிவிட்டு நாகமரிடம், ''அரியநாத முதலியார்தான் விசுவநாதனுக்கும் உதவியாக இருக்கப் போகிறார்; அதனால் அவர் பார்த்துவிட்டால் போதும்'' என்றார்.

திறவுகோல்களை அப்போதே விசுவநாதனிடம் சக்கரவர்த்தி கொடுப்பார் என்று எதிர்பார்த்தார் நாகம நாயக்கர். ஆனால் சக்கரவர்த்தி அப்படிச் செய்யவில்லை. அவை அவர் முன்பாகவே கிடந்தன.

பாண்டியர்கள் இருவரையும் வரவழைத்து, அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்புவது போல் சில செய்திகளைக் கூறினார் சக்கரவர்த்தி.

''தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் நான் அதிகமாகக் கவலைப்படுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. உங்களுக்குள் நடைபெறும் சண்டைகள் சச்சரவுகள்கூட எனக்கு ஒரு பொருட்டாகப்படவில்லை. பழம் பெரும் பண்பாடும் நாகரிகமும் கொண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்கள் நீங்கள். ஆனால் வடக்கத்திய வழிப்பறிக்காரால் உங்கள் பண்பாடே பெரிய அளவில் சீர்குலைந்து போயிருக்கிறது என்று கேள்வியுற்றேன். குடிமக்களின் காவலராக இருக்க வேண்டிய அரச குடிமக்களின் காலனாக மாறிப் போகும் இழிந்த நிலைக்கு வந்து விட்டதாம். கொள்ளை கொலை புரிவதற்காக வெளியிலிருந்து வந்தவர்கள் தங்களது சொந்த நலனுக்காகக் கொடுங்கோன்மை புரிவது இயல்பு. சொந்த மண்ணில் பிறந்த உங்களிடம் ஆட்சியை நாங்கள் விட்டு வைத்திருப்பதற்குக் காரணம்

நேரத்தையும் உழைப்பையும் மிச்சமாக்கும் பஜாஜ் வீட்டு வேலை உபகரணங்களைக் கொண்டு உங்கள் இல்லத்தை அழகுபடுத்தி வேலைகளைத் திறம்படச் செய்யுங்கள். கண்ணைக் கவரும் அமைப்பும், உத்தரவாதமான நீடித்த உழைப்பும் உடைய இக் கருவிகள் அனைத்தும் உங்கள் சக்திக்கு உட்பட்டவைதான்.





பஜாஜ்

உபகரணங்களின் உதவியால் வாழ்க்கை பயனடைகிறது

பஜாஜ் எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

45-47, வீர்நாரிமன் ரோடு, பம்பாய்-1.

இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு

பஜாஜ்

heros' BE-231 G TM

மொழியின்றிப் பேசமுடியுமா?

தனி மதம் எதையும் சேராமல் பொதுவான மத உணர்வு மட்டும் வேண்டும் என்கிற அறிவாளிகளைக் கேட்கிறேன்: 'எந்த ஒரு மொழியையும் பேசாமல், ஒரு பொது மொழியைத்தான் பேசவேண்' என்று கூறமுடியுமா?

'எல்லோருக்கும் பொதுவாக சங்கீதம் என்ற மொழியில்லையா?' என்று சிலர் ஆட்சேபிக்கலாம். இசையிலும் ராகம் என்று ஒரு தனி அம்சம் உண்டு. இன்னவொரு ராகத்தையோ, ஒன்றன்பின் ஒன்றாகக் குறிப்பிட்ட சில ராகங்களையோ ஒருவர் பாட முடியுமே அன்றி, ராகம் என்ற தனி உருவம் இல்லாமல் சங்கீதம் என்ற பொதுத் தத்துவத்தைமட்டும் பாடிக் காட்ட முடியுமா?

—ராஜாஜி

உங்களது பழம் பெரும் பண்பாட்டை அங்கே நிலைநாட்டி, நாட்டின் அக வாழ்விலும் புற வாழ்விலும் புத்தெழுச்சி ஏற்படுத்துவீர்கள் என்பதற்காகத்தான். நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பளித்தும்கூட நீங்கள் உங்கள் கடமையில் தவறிவிட்டீர்கள். நாடென்றும் அதற்கென்று ஒரு மாபெரும் லட்சியம் வேண்டும். அந்த லட்சியத்தின் சின்னமாகவே அதன் அரசர் விளங்க வேண்டும். உங்களுடைய பழம் பெரும் பண்பாட்டை மீண்டும் நிலைநாட்டப் பாருங்கள், பாண்டியரே! அது நமது பண்பாடு!"

"சித்தம் சக்கரவர்த்தியவர்களே! தமிழ்நாடு நன்றி மறவாத நாடு. என்றுமே இனி அது தங்களை மறவாதபடி செய்து விட்டீர்கள்" என்றார் சந்திரசேகர பாண்டியர்.

"இன்னும் அதற்குச் செய்ய வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இப்போது வடக்கில் மீண்டும் அபாயம் தோன்றியிருக்காவிட்டால், அதன் புது வாழ்வுக்காக நாகமரிடம் நிறைந்த பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பியிருப்பேன். அப்படி அனுப்ப முடியவில்லையே என்றதுவே என்னை வாட்டுகிறது."

பாண்டியர்களுக்கு மட்டுமல்ல, விசுவநாதனுக்குமே மெய்சிலிர்த்தது. இவன் தமிழ் நாட்டு நிலையை அறிந்து வந்து சக்கரவர்த்தியிடம் கூறியபோது அவர் கண்கள் கலங்குவதைக் கண்டான். பழங்கால வரலாற்றில் இடைவிடாது போர்கள் நிகழ்த்தியவர்கள் தமிழர்களும் சாளுக்கியர்களும். இப்போதோ ஓர் இனம் மற்றோர் இனத்துக்காகக் கண்ணீர் வடிக்கிறது! 'வரலாறு மாறுகிறது: புதிய வரலாறு உதயமாகி விட்டது: புதிய வரலாறு வளரத் தொடங்குறது' என்று அளவற்ற பூரிப்படைந்தான் விசுவநாதன்.

பாண்டியர்கள் இருவரையும் அனுப்பி விட்டு, நாகம நாயக்கரின் பக்கம் திரும்பினார் சக்கரவர்த்தி. "உங்களுக்குப் பொருள் போதவில்லையென்றால், தேவையான அளவு நம்முடைய பொக்கிஷத்திலிருந்து எடுத்துச் செல்லுங்கள்; அங்கு சென்ற பிறகு சிரமப்பட வேண்டாம்" என்றார்.

நாகமநாயக்கருக்கு வரும் பொருளை மறுப்பதற்கு மனமில்லை. என்றாலும், வடக்கத்திய அபாயத்தின் நினைவு அவருக்கும் வந்து விட்டது.

"வேண்டாம்; என்னிடம் இருப்பதே போதும்" என்றார் அவர்.

"வெற்றியுடன் திரும்பி வாருங்கள்!" என்று நாகமருக்கு விடை கொடுத்துவிட்டு, "விசுவநாதா! நீயும் சென்று உடனிருந்து உன் அப்பாவை வழியனுப்பிவிட்டு வா; மெதுவாக வந்து அரண்மனை அலுவல்களைக் கவனிக்கலாம்" என்று அவனையும் அனுப்பி வைத்தார் சக்கரவர்த்தி.

நாகமநாயக்கரின் ஒரே புதல்வன் விசுவநாதன் என்பதும், அவர்கள் இருவருமே ஒருவர் மீது ஒருவர் மிகுந்த பற்றுதல் கொண்டிருந்தார்கள் என்பதும் சக்கரவர்த்திக்கு நன்கு தெரியும். தமது குமாரனைப் பறிகொடுத்து விட்டுப் புத்திர பாசத்தால் வாடிக் கொண்டிருந்தவர் அவர். ஆகவே நாகமநாயக்கரின் மகிழ்ச்சியை முன்னிட்டு விசுவநாதனை அவருடன் அனுப்பி வைத்தார். நாகமர் புறப்பட்டுச் செல்லும் வரையில் அருகில் இருந்து அவரைக் கவனித்து விட்டுப் பிறகே அரண்மனைக்கு வருமாறு பணித்தார்.

மறு நாள் அதிகாலையில் புறப்படுவதாக இருந்ததால், அதற்கு முதல் நாள் இரவு விசுவநாதனிடம் நெடுநேரம் தனித்துப் பேசிக் கொண்டிருந்தார் அவன் தந்தை. நாடு விட்டு நாடு செல்வதாலும் போர் மீது போவதாலும் அவர் மனம் சற்றுக் கலக்கமுற்றிருந்தது. போருக்குச் செல்வதற்கு அவர் என்றுமே அஞ்சியதில்லை. வீரத்தில் யாருக்குமே அவர் சளைத்தவரல்லர். அப்படியொன்றும் இந்தப் போரை அவர் ஒரு பொருட்டாகவும் மதிக்கவில்லை.

ஆனாலும் நெடுநாள் போரின்றி அமைதியாகவே குடும்பத்தோடு ஒன்றி வாழ்ந்துவிட்டார். வயதும் மிகுதியாக ஆகிவிட்டது. காலம் கடந்து பிறந்த ஒரே மகன் என்பதால் விசுவநாதன் மீது அவர் தம் உயிரையே வைத்திருந்தார். அவனைப் பிரிந்து செல்வது ஒன்றுதான் அவருக்கு மன வேதனையை அளித்தது. விசுவநாதன்கூட அவருடைய கலக்கத்தை உணர்ந்து அவருக்காகத் தனக்குள் வருந்தினான்.

"விசுவநாதா! என்னுடைய காலத்தை நான் கூடுமான வரையில் வெற்றிகரமாகக் கழித்து விட்டேன். இனி நான் நினைப்பது, பேசுவது, செய்வது எல்லாமே உன் ஒருவனுடைய வருங் காலத்தைப் பொறுத்ததுதான். என்னிலும் சிறந்தவனாக, என்னிலும் சிறந்த வெற்றிகள் பெற்று நீ வாழ வேண்டும். அதனால்தான் உன்னைச் சிறு வயதி-

லேயே நேரடியாகச் சக்கரவர்த்திகளிடம் பணி செய்வதற்கு அனுப்பி வைத்தேன்'' என்று கூறினார்.

''சக்கரவர்த்திகள் என்னிடம் இவ்வளவு அன்பு கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்கே தெரியவில்லை'' என்று பதிலளித்தான் விசுவநாதன்.

''இரண்டே இரண்டு விஷயங்களை நீ எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்: அப்போதுதான் உன் எதிர்காலம் இன்னும் சிறந்ததாகவும் இருக்கும்; பொறாமைக்காரர்களுக்கு மத்தியிலிருந்து நீ உன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். அரசியல் வாழ்வில் எதிர்பாராத ஏற்றங்களும் உண்டு; எதிர்பாராத ஆபத்துக்களும் உண்டு.''

விசுவநாதனுக்குத் தெளிவாக ஏதும் விளங்கவில்லை. ''இரண்டு விஷயங்கள் என்கிறீர்களே?'' எனக் கேட்டான்.

''ஒன்று, சக்கரவர்த்திகள் உன்னிடம் கொண்டுள்ள அன்பை நீ தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகத் தயங்கக் கூடாது. மற்றொன்று, அரண்மனையில் இருப்பவர்களே உன்னுடைய வளர்ச்சியில் பொறாமை கொண்டு உனக்கு ஏதாவது துன்பம் கொடுக்க முயல்வார்கள். அவர்களிடம் நீ விழிப்போடிருக்கவேண்டும்.''

முதலாவதாக அவன் தந்தை குறிப்பிட்டது பற்றி அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. சக்கரவர்த்தியின் மீது அவனுக்கு எல்லையற்ற நம்பிக்கை இருந்ததால், அதை அவரே கவனித்துக் கொள்வார் என்று நினைத்தான். அடுத்தாற்போல் குறிப்பிட்டது பற்றி அது சரியான எச்சரிக்கை என்றே தோன்றியது. இருஷ்ண தேவராயரின் நெருங்கிய உறவினர்களாகவும், அதிகாரிகளாகவும் இருந்த சிலரே அவன் மீது மறைமுகமாகப் பகைமை கொண்டிருந்தார்கள். பகைமைக்குக் காரணம் வேறெதுவுமில்லை. அவனுடைய நேர்மைத் திறனும் அதில் சக்கரவர்த்தி கொண்டிருந்த நம்பிக்கையுமே மற்றவர்களின் பொறாமையைத் தூண்டிவிட்டிருந்தன.

நாகம நாயக்கரே தொடர்ந்து பேசினார்:


''நானும் உன்னைப் போல் இருந்தபோது நம் நாடே பெரிதென்றுதான் மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டு அதற்காகப் பாடுபட்டேன். மனக்கோட்டைகள் வெற்றிக் கோட்டைகளாகவும் மாறி விட்டன. இனி நமக்கென்று தனிக் கோட்டைகள் எழுப்பிக் கொள்ள வேண்டாமா? உன் மாமாவுக்கும் லட்சுமியை விட்டால் வேறு ஆண் மகன் இல்லை. அதனால் நாங்கள் இருவருமே உன்னுடைய முன்னேற்றத்தைத்தான் லட்சியமாகக் கொண்டிருக்கிறோம். நீ செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இங்கே எனக்குப் பதிலாக மாமா இருப்பதால் அவருடைய யோசனைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். மற்ற விஷயங்களை அவர் கவனித்துக் கொள்வார்.''

விசுவநாதன் ஒருபுறம் தந்தையின் பாசத் துடிப்பை உணர்ந்து உருகினான் என்றாலும், அவரது ஆசைகள் அவனைத் திடுக்கிட வைத்தன. நமக்கென்று தனிக் கோட்டைகள் எழுப்ப வேண்டுமென்றால் அதற்கு என்ன பொருள்?...

''விசுவநாதா! உனக்காகவேதான் இப்போது நான் பாண்டிய நாட்டுக்குப் புறப்படுகிறேன்'' என்று கூறி அவன் கரங்களைப் பற்றினார் அவர். அவருடைய கரம் அனலாகச் சுடுவதை உணர்ந்தான் விசுவநாதன். அதோடு இருவரும் தங்கள் தங்கள் விழிகளில் பொங்கிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர். (தொடரும்)



ராஜாஜி கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து விலகியபோது அவருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் நேருஜியுடனும், சர்தார் வல்லபாய் பட்டேலுடனும்.





தனிப்பெரும் தலைவர் ராஜாஜி


● புதுடில்லிக்குச் சமீபத்தில் ராஜாஜி அவர்கள் சென்றிருந்தபோது பாரதப் பிரதமர் லால்பகதூரிடம் மகிழ்ச்சியோடு அளவளாவுகிறார்.

● ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது தசரா தினத்தன்று கவர்னர் ஜெனரல் எஸ்டேட் கல்லூரி மாணவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்குகிறார்.


● மகா கவி பாரதியாருக்கு எட்டயபுரத்தில் மண்டபம் கட்டித் திறப்பு விழா நடத்தியபோது விழாவுக்குத் தலைமை தாங்கித் தமிழகக் கவிஞருக்கு அஞ்சலி செலுத்தினார்.











● புது தில்லியில் போப்பாண்டவர் பிரதிநிதியோடு கவர்னர் ஜெனரல்.

● பவநகர் மகாராஜாவுடன் ராஜாஜி வீற்றிருக்கிறார்.

● கவர்னர் ஜெனரல் ராஜாஜி விமானத்திலிருந்து இறங்குகிறார்.

● லண்டனுக்குப் புறப்பட்ட நேருஜியைப் பாலம் விமான நிலையத்தில் வழியனுப்பிய ராஜாஜியும், படேலும் மற்றும் பெருந் தலைவர்களும்.

● ராணுவத்தினர் அளிக்கும் ராணுவ மரியாதையை ஏற்கிறார் ராஜாஜி.

● பாட்டுக்கொரு புலவனைக் கௌரவிக்கும் விழாவில் பேராசிரியர் கல்கியும், தலைவர் ராஜாஜியும்.







58. மயூரமும் குக்குடமும்

பல்லிக்குப் பயந்த ஈ பல இடங்களில் மாறி மாறி உட்காரும்! கடைசியாகப் பல்லியின் வாயிலேயே போய் உட்கார்ந்து விடும். அது போன்று ஆகிவிட்டான் சூரபன்மன். ஆறுமுகப் பெருமானை நேருக்குநேராக நெருங்கி எதிர்த்துத் தன் அழிவைத் தேடிக் கொண்டான்.

சரவணபவன் விடுத்த சக்தி ஆயுதம் சூரனுடைய மார்பைப் பிளந்தது! உடம்பை இரு துண்டாக்கிக் கடலில் வீழ்த்தியது. வேதங்கள் வாழ்த்தின! தேவர்கள் பூமழை சொரிந்தனர். வேற்படை அப்பூமழை நடுவிற் பாய்ந்து சென்று தேவகங்கையில் மூழ்கிப் புனிதம் பெற்று, அங்கிருந்து திரும்பிச் செவ்வேளின் செங்கரத்தில் வந்து அமர்ந்தது.

மார்பு பிளந்து உடல் இரு துண்டான பின்னரும்கூட சூரபன்மன் சாக வில்லை.

கடற்ச லந்தனி லேயொளி சூரனை
உடற்ப குந்திரு கூறென வேயது
கதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில்
விடும்வேலா

சூரபன்மனின் வச்சிர யாக்கை பிளந்தவுடனே ஒரு பாதி சேவலாகவும் மற்றொரு பாதி மயிலாகவும் ஆயின. அந்த நிலையிலும் சூரபன்மன் விடவில்லை. மாணிக்க மரகத மலையொன்று கால்களையும் சிறகுகளையும் பெற்றுப் பறந்து செல்வது போல ஆறுமுக வள்ளலை எதிர்த்துப் போர் செய்யும் செருக்குடன் வந்தான்.

சூரபன்மன் என்பது ஆணவ மலம்; செம்பிற்குக் களிம்பு போலும், அரிசிக்குத் தவிடு போலும் ஆணவ மலம் உயிருக்கு அநாதியேயுண்டு.

நெல்லிற் குமியும் நிகழ்செம்பி
னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே
- வல்லி
மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற்
பொன்வாள்
அலர்சோகஞ் செய்கமலத் தாம்

ஆணவ மலத்தை ஞானத்தால் வலி கெடச் செய்வது சூரசம்ஹாரம். ஆணவ மலம் ஒரு போதும் அழியாது; அதன் ஆற்றல் கெடும். நான் என்ற அகப்பற்று அகங்காரம். எனது என்ற புறப்பற்று மமகாரம்.

"யான் எனதென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்பது திருக்குறள்.

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனும் நீ அல்லேயோ
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா! சுரபூபதியே!

என்பது கந்தரநுபூதி.

நான் எனது என்ற இருவகைப் பற்றும் அற்றபின் பொறிபுலன்களை யொடுக்கி அருளநுபவத்தில் ஒடுங்குதல் வேண்டும்.

ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே—

- திருமந்திரம்

ஆமையைப் போல் ஐம்புலனை அடக்கிய இடத்தில் ஒரு பெரிய சுகம் ஆரம்பமாகின்றது. ஒரு மனிதன் வெளியிலே கண்டவாறு அலைந்து திரிகின்ற போது துன்பம் உண்டாகும். வீட்டிலே போய் நிழலில் சற்று ஆறுதலாக அமர்ந்தவுடன் மகிழ்ச்சியாக இருக்கின்றதல்லவா? அது போல் புலன்கள் வெளிப்பட்டு உழலும்போது கவலை உண்டாகிறது. அவைகளை அகமுகப்படுத்தும் போது ஆறுதல் உண்டாகிறது. இதுவே மோட்சமாகிய பேரானந்தம்.

சூரபன்மனின் ஒரு பாதி 'நான்' என்கிற அகங்காரம். மற்றொரு பாதி 'எனது' என்கிற மமகாரம். இவ்விரு பாதிகளின் வடிவான மயிலும் சேவலுமாகிய சூரபன்மன் முருகவேளை எதிர்த்து வருவதைக் கண்ட தேவர்கள் அஞ்சினர். ஆறுமுகக் கடவுள் சூரபன்மன் மீது அருள் நோக்கம் செய்தார். ஞானிகள் பார்வையால் இரும்பு பொன்னாவது போல, அத்திருவருட் பார்வையால் சூரபன்மன் பகைமை நீங்கி ஞானம் பொருந்திய மனத்தினனாய் நின்றான். அப்பொழுது கந்தவேள் தமது திருவருளால் ஞானம் பெற்ற கோழியை நோக்கி, "நீ நமது தேரில் கொடியாக இருந்து கூவுவாய்" என்று பணித்தருளினார். அவ்வாறே கோழி அவர் தேரில் ஏறிக் கொடியாக நின்று கம்பீரமாகக் கூவியது. பின்பு பெருமான் இந்திரனாகிய மயிலினின்றும் இறங்கி சூரபன்மனாகிய மயிலின் மீது ஏறி உலகெங்கணும் பவனிவருவாராயினார். இந்திரனை ரட்சிக்கவே தோன்றியவர் கந்தன்: சூரனை ரட்சிக்கவே தோன்றியவர் கந்தன். அவ்வாறிருந்தும் அவர் இந்திரன் சூரன் இருவர்க்கும் ஒரு போல் தம் வாகனமா யிருக்கும் அந்தஸ்து தந்த அருமையைப் பாருங்கள்! கல்லார்க்கும், கற்றவர்க்கும், பொல்லார்க்கும் நல்லவர்க்கும் ஒரே பொதுவான பாரபட்சமற்ற பரங்கருணை புரிபவரன்றோ பரமன்? சூரமயில் சுவாமியைத் தாங்கிய பெருமையில் உலகெங்கும் சுற்றி மீண்டும் வீர மகேந்திர புரியின் செருக்களத்தை அடைந்தது. எதிரியாக இருந்த சூரன் இன்று மயூரமாகி முருகனைத் தாங்கியதும், குக்குடமாகி அவனது ஜயக்கொடியாகத் திகழ்ந்ததையும் சுவாமியுடைய பேரருளின் எல்லை என்றே அல்லவா கூற வேண்டும்? அவனுக்கு இந்தப் பெரும் பதவி தந்ததால், யாருடைய துயர் தீரும் பொருட்டு ஐயன் அவதரித்தாரோ அந்த இந்திரனை வாகனப் பதவியிலிருந்து நீக்கினார்!

முன்பு மயில் உருவாயும், சேவல் உருவாயும் நின்ற இந்திரனையும் அக்கினியையும் நோக்கி, பழைய வடிவு கொள்ளும்படி அருளிச் செய்தார் ஆறுமுகசுவாமி. அவர்கள் பழைய உருப்பெற்று, இடைக்காலத்தில் உற்ற தொல்லை எல்லாம் நீங்கி எல்லையிலாதான் இணையடி தொழுது துதித்து நின்றார்கள்.

உயிர்களாகிய நாம் கட்டுண்டு கிடக்கின்றோம். அதனால் பசு எனப்பட்டோம். "பச்" என்றால் கட்டு. கட்டுப்பட்டதனால் பசு. நமக்குத் தலைவன் பசுபதிநாதர்.

பசுவை ஒரு கயிற்றால் கட்டுவார்கள். யானையை இரு சங்கிலிகளால் கட்டுவார்கள். குதிரையை மூன்று கயிறுகளால் கட்டுவார்கள். ஊஞ்சலை நான்கு சங்கிலிகளால் கட்டுவார்கள். ஆன்மாக்களாகிய நாம் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்ற ஐந்து சங்கிலிகளால் கட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறோம்.

உயிர்களாகிய நாம் சுவர்க்கம், பூதலம், நரகம் என்ற மூன்று இடங்களுக்கும் மாறி மாறிச் செல்வதும் வருவதுமாகவே பல்லூழி காலமாக ஆடிக் கொண்டிருக்கிறோம். எண்ணில்லாத காலமாக ஆன்மாக்கள் இறப்பதும் பிறப்பதுமாகவே இருக்கின்றன. இவ்வாறு மாறி மாறிப் பிறந்து இறந்து வருவது பெரிதும் வெட்கப்படக் கூடியது. ஒரு வீட்டுக்கு அடிக்கடி செல்ல வெட்கப்படுவது போல், இந்தப்

வாழ்க்கையின் செல்வம்

குழந்தைகாள், உங்கள் நண்பர்களைப் பற்றிக் கவனமாயிருங்கள். நட்பைப் போல் ஒரு செல்வமுமில்லை. மற்றதெல்லாம் பொய்; காற்றைப்போல் பறந்துபோகும். அன்பும் நட்புமே வாழ்க்கையில் பெருத்த செல்வம். — **ராஜாஜி**

பூமியில் ஓயாது பிறப்பதற்கு வெட்கப் பட வேண்டாமா? ஆகவே, ஆண்டவன் நம் ஆன்மாவைச் சரீரச் சிறையினின்று எப்போது மீட்பான் என்று எண்ண வேண்டும்.

"ஏழையின் இரட்டைவினை யாய
தொருடற் சிறை
யிராமல் விடுவித்தருள் நியாயக்
காரனும்"

என்று அருணைமுனிவரும் திருவகுப்பில் கூறுகிறார்.

இந்த உடம்பாக இருக்கிற சிறையிலிருந்து எம்பெருமான் அருணகிரிநாதரை விடுதலை செய்தாராம். விடுதலை கொடுப்பது யார்? நியாயாதிபதி. நீதிபதிதானே விடுதலை கொடுக்க வேண்டும் ?

சரீரத்தில் சிறைப்பட்டிருக்கும் ஆன்மாவாகிய கொடிக்கு இறைவனுடைய திருவடித் தாமரையே கொழுகொம்பாகும். இறைவனடி சேர்ந்தார்க்கே துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் உண்டாகும். நாம் இறவாமல் இருக்க வேண்டுமென்றால் பிறவாமல் இருக்க வேண்டும். ஆகலால் தான் பெரியவர்கள் பிறவா வரம் வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டிக் கொண்டார்கள்.

உயிர்களுக்கு உறுதுணையாக விளங்குபவன் கந்தன். ஆன்மா பற்றும் கொழுகொம்பும் அவனே. ஆன்மாவைக் கட்டி வைக்க வேண்டிய 'கந்து' அவன் என்பதாலேயே கந்தன் எனப்படுகிறான். அவனது திருவடி சேர்ந்தாரே பிறவிப் பெருங்கடல் நீந்துவர். இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் இடர் எய்தாது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்" —திருக்குறள்

"காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருள்வாய்"
—கந்தர் அலங்காரம்

ஒரு மூங்கிற் கொம்பானது இருபுறமும் தீப்பிடித்து எரிகிறது. அதனிடையில் ஓர் எறும்பு அகப்பட்டுக் கொண்டது. எந்தப் புறமும் போக முடியவில்லை. என் செய்யும்? அது போல், மனை மக்கள் சுற்றம் என்னும் மாயா வலையைக் கடக்க அறியாமல் ஆன்மா துன்புறுகின்றது. இதனை மாணிக்கவாசகர் கூறுகின்றார்.

இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல
னேந்திப் பொலிபவனே.

திருமண வீட்டின்முன் பந்தலிடுவார்கள். அப்பந்தக்காலைப் பிள்ளைகள் பிடித்துச் சுழன்று விளையாடும். குழந்தைகள் ஆளுக்கொரு தூணைப் பற்றிக் கொள்ளும். ஒரு பிள்ளைக்குத் தூண் கிடைக்கவில்லை. தூணைப் பற்றாமல் அது பந்தக் காலைச் சுழன்று சுற்றியது. அதனால் மயக்கமுற்றுக் கீழே விழுந்து காயமுற்றது. தூணைப் பற்றிக்கொண்டு சுற்றுகின்ற குழந்தைகள் மயக்கம் வந்தாலும் தூணைப் பற்றியிருப்பதனால் அதனுடனேயே ஒடுங்கிச் சார்ந்து கீழே விழாமல் உய்வு பெறுகின்றன. அது போல், இறைவன் திருவடியைப் பற்றிக் கொண்ட ஆன்மாக்களுக்கு, உலக வாழ்வில் மாயையால் மயக்கம் ஏற்படினும் உய்வு கிடைக்கும். இறைவனுடைய திருவடியைப் பற்றாமல் திரியும் ஆன்மாக்கட்கு உய்வு இல்லை. குடிமகன் ஒருவன் அரசனிடம் குற்றத்தை ஒப்புக் கொண்டால், அவனுக்கு விடுதலை கிடைக்கும். எல்லோருக்கும் தலைவனாகிய ஆண்டவனிடம் குற்றத்தை ஒப்புக் கொண்டால், இச்சரீரம் என்ற சிறையிலிருந்து நமக்கு விடுதலை தருவார். இறைவனின் ஞானசக்தி ஆன்மாவுக்கு உடற் சிறையிலிருந்து விடுதலை தருகிறது.

இதனைத்தான் ஞான சக்தியான முருகப் பெருமானது வேற்படை சூரபன்மனுடைய உடலை அழித்த திருவரலாறு குறிப்பிடுகிறது. வேலாயுதம் அவுண மன்னனின் அகந்தையை அழித்தது; அகந்தை நிறைந்த அசுர உடலை அழித்தது. அழுக்கு நீர் கங்கையில் கலந்த பிறகு தானும் கங்கையாகவே மாறிவிடுகிறது. அதே போல் முருகனருட் கடல் மூழ்கி அசுர சரீரம் நீங்கியபின் சேவலும் மயிலுமானான் சூரபன்மன். (தொடரும்)

பதட்டத்தின் அறிகுறியே இல்லை இப்பொழுது!





வலிதான் எங்கள் பிரச்சினை... உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை சிறந்த மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பது. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த நோக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பார்முலாதான் என்பதை நாங்கள் இன்று அறிவோம். அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உயிர்ப்பொருள் உடல் சேதத்திற்குப் போனால், மிக விரைவாக நிலைகளில் சேர்ந்து குவிந்து, ஒரு "மாதா முகமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளின் அழுத்தத்தின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டாக வேலை செய்கிறது—வீக்கத்தைச் சீக்கிரம் குறைத்து—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்து விடுகிறது.

இவைகளுக்கு ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: வலி • தலை வலி • உடல் வலி • பல் வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய ஜலதோஷமும் • ஃப்ளூ • பேக்கு.


அளவு!
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் இதே அளவில் உட்கொள்ளலாம்.
குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொல்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A G. 1443 TAM



அவர்கள் குடும்பத்துக்கு நேர்ந்த கஷ்டத்தை எண்ணிச் சீக்கிரமே நண்பர்களும் உறவினர்களும் துக்கம் விசாரிக்க வந்தனர். அவள் சிறிதுகாலத்துக்குள்ளாகவே தன் நிலைமையை உணரலானாள். வந்து போகிறவர்களுடைய கண்ணீரும் கதறலும், அனுதாபப் பார்வைகளும் ஓயாத பேச்சும் தன்னைப் பற்றித்தான், தனக்கு நேர விருக்கும் கஷ்டங்களைப் பற்றித்தான் என்று அவளுக்குப்புரிந்தது. சித்திரவதைக்கொப்பான இத்தகைய அநுதாபத்திலிருந்து சுப்புலக்ஷ்மி காப்பாற்றப்பட்டது போல் பார்வதியின் பெற்றோரால் தங்கள் மகளைக் காப்பாற்ற முடியவில்லை. தினந்தோறும் கூட்டம் கூட்டமாக மனிதர்கள் வந்து ஓயாமல் கண்ணீர் உகுக்குமாறு செய்ததைப் பார்க்கும்போது குழந்தை பார்வதிக்கு, நீர் துளும்பி நிற்காத கண்களையும், புன்னகையையும், சந்தோஷமான பேச்சையும் இனித் தான் காணவோ, கேட்கவோ முடியாதோ என்று தோன்றியது.

இதற்குப் பிறகு, திரும்பப் பள்ளிக்கூடம் போவதைப் பற்றிப் பார்வதியால் சிந்திக்கக்கூட முடியவில்லை. பள்ளி மாணவிகளும், ஆசிரியர்களும் தன்னைப் பரிதாபமாகக் கூர்ந்து பார்ப்பதைத் தன்னால் பொறுக்கவே முடியாது என்று அவள் அறிந்தாள்.

அவள் பெற்றோர்களுக்கும் அவள் மன நிலை புரிந்தது. அவள் மனத்தை மாற்ற அவர்கள் முயலவில்லை. அவளைக் கண் மறைவாகத் தன் மாடியறையில் பகல் பொழுதைக் கழிக்கும்படி அவள் தந்தை சொன்னார். இவ்விதம் பெரியவர்களுடைய பேச்சு வார்த்தைகளைக் கேட்காமல் அவள் தப்பலாம். மேலும் உபாத்தியாயரான அவள் தந்தை தினமும் தாம் பள்ளிக்கூடம் செல்வதற்கு முன்னால் அவளுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுத்து விட்டுப் போவதாகக் கூறினார். மாலை வேளையில் வீடு திரும்பியதும் அவள் படித்ததைச் சரி பார்த்து அவள் கல்வி முன்னேற்றத்துக்கு உதவி புரிவதாக ஏற்பாடு.

பார்வதி நன்றாகப் படித்தாள். அவளைவிட வயதில் சில வருஷங்கள் பெரியவர்களான அவளுடைய இரண்டு அண்ணன்மார்களும் சென்னையில் படித்துக் கொண்டிருந்தார்கள். பார்வதியின் கணவன் இறந்து ஓர் ஆண்டு முடிந்த பிறகு இவர்களில் ஒருவன் சிறுமியான தன் தங்கையை அழைத்துக் கொண்டு வந்து தன் தாயார் ஓரிரண்டு ஆண்டுகள் சென்னையில்

வசிக்க வேண்டும் என்று அபிப்பிராயப் பட்டான். பார்வதியின் சரித்திரம் யாருக்கும் தெரியாத இடமாகிய சென்னையில் அவள் மீண்டும் பள்ளிக் கூடம் போவது எளிதாக இருக்கும். திருவல்லிக்கேணியில் ஒரு சிறு வீட்டை எடுத்துக் கொண்டால், அவர்கள் நான்கு பேர்களும் சிரமமின்றி வாழலாம். பிள்ளைகள் இருவரும் ஹோட்டலில் தங்கி யிருக்க மூத்துசாமி அய்யருக்கு இப்போது ஆகும் செலவைவிடக் கொஞ்சம்தான் அதிகமாகும்; நால்வருக்குமாக ஜாகை வசதி செய்து கொள்வதால்.

ஒரு வீடு கிடைத்தது. மூத்துசாமி ஐயர் தம் மனைவியும் குழந்தைகளும் தம்முடன் வசிக்காத சமயத்தில் வீட்டைக் கவனித்துக் கொள்ள ஓர் உறவினனை வரவழைத்துக் கொண்டார். திருவல்லிக்கேணியில் குடியேறிய பிறகு ஒரு சங்கடம் ஏற்பட்டது. ஏற்கனவே ஓரளவு கல்வி அறிவு பெற்றிருந்த பார்வதிக்கு மேற்கொண்டு பயிற்சி அளிக்கக் கூடிய பெண்கள் பள்ளிக் கூடம் சுற்றுவட்டாரத்தில் ஒன்றுகூட இல்லை என்பதை அவர்கள் அறிந்தனர்.

அவர்கள் மேலும் விசாரித்தார்கள். யாராலும் அவர்களுக்குச் சரியான தகவல் கொடுத்து உதவ முடியவில்லை. சில மாதங்களுக்குப் பிறகு, சென்னையில் உள்ள ஒரே பெண்கள் பள்ளிக்கூடமான பி. டி. ஸ்கூலைப் பற்றி அறிந்தார்கள். பார்வதி தனியாக எழும்பூர் வரை போக இயலாது. அவளைத் தினமும் பள்ளியில் கொண்டு விடவும், திரும்ப அழைத்து வரவும் யாரும் இருக்கவில்லை. ஆகவே, ஒன்று, அவள் கல்வியையே நிறுத்திவிட வேண்டும். இல்லையேல் அவர்கள் வீட்டை மாற்ற வேண்டும்.

அவளுடைய பெற்றோர்களைப் போலவே, அவள் சகோதரர்களுக்கும் அச்சிறுமிக்காகச் செய்யப்படும் தியாகம் ஏதும் பெரிதாகத் தோன்றவில்லை. சீக்கிரமே அவர்கள் எழும்பூருக்கு மாறினார்கள். சுப்புலக்ஷ்மிக்குப் பிறகு அந்த பி. டி. ஸ்கூலின் ஆங்கிலப் பகுதியில் சேர்க்கப்பட்ட இரண்டாவது பிராமண விதவை பார்வதிதான்.

அவள் சிறிது காலம் அங்கு இருப்பதற்குள் சேலத்தில் மூத்துசாமி ஐயரின் வீட்டைக் கவனித்துக் கொண்டிருந்த உறவினன் இறந்து விட்டான். ஆகவே அவர் மனைவி சேலத்துக்குத் திரும்பிப் போகும்படி ஆகி விட்டது. பையன்களும் பழையபடி ஹோட்டல் வாட்ஜுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சித்தியின் பாதுகாப்பின் கீழ் உள்ள

நாஸ்திகர்கள் ஆராய்ந்தால்...

எல்லாவற்றிலும் ஒரு பெரும் சக்தி வியாபித்து இயங்குகிறது என்று ஸயன்ஸின் வழியில் ஒப்புக்கொள்கிறவர்கள் இன்னும் சிறிது சிந்தனை செய்தால், அறிவால் கிரகிக்க முடியாத அந்த சக்தியை இந்த அற்புதமான அழகிய உலகில் உள்ள சகல வஸ்துக்களிலும் வழிபாட்டின் மூலம் கிரகிக்கலாம் என்று காண முடியும். கல்லும் மரமும் சித்திரமும் சிலையும், இவற்றை விட சூக்ஷ்மமான மானஸிகச் சிந்தனை உருவங்களும் சர்வ வியாபகமான சக்தியை வழிபட உதவும் என்பதை நாஸ்திகர்களும் சிறிது ஆராய்ந்தால் உணர முடியும்.

—ராஜாஜி

மூன்று விதவைப் பெண்களுடன் வந்து சேருமாறு பார்வதியை சுப்புலக்ஷ்மி அழைத்தாள். அந்த அழைப்பை சந்தோஷத்தோடு ஏற்றாள் பார்வதி.

வேறு காலத்துக்காக வந்திருந்த பாலமும், சாவித்திரியும் அதே வீட்டில் இருந்தார்கள். அவர்கள் குழந்தை பெற்று, ஐந்து மாதங்கள் வரையில் பிறந்தகத்தில்தானே இருப்பார்கள்? ஆகையால் அவ்விருவரும் சுப்புலக்ஷ்மியும் பார்வதியும் பள்ளிக்கூடம் போயிருக்கையில் அவ்வீட்டில் தங்கி யிருந்த, வயதில் தங்களைவிடப் பெரியவர்களான பெண்களுக்குப் பாடம் சொல்லித் தருவது என்று தீர்மானமாயிற்று.

இந்த ஏற்பாடு நன்றாக நடந்தது. அங்கு வந்து தங்கிய இளம் விதவைகள் தங்கள் கேசத்தை மழித்துவிடவில்லை. அங்கு வருவதற்கு முன்பே அந்தச் செயலுக்கு அவர்கள் உட்பட்டிருந்தாலும் இப்போது மீண்டும் வளர்த்துக் கொள்ளுமாறு தூண்டப்பட்டார்கள். பனிச்சென்று பல நிறப் புடவைகளும் கச்சிதமான ரவிக்கைகளும் அணிந்தார்கள். அவர்கள் அடிக்கடி வெளியே போவதில்லை என்பதைத் தவிர, அவர்கள் வாழ்க்கை அவர்கள் வயதைச் சேர்ந்த சாதாரணமான மற்றப் பெண்களின் வாழ்க்கையிலிருந்து அதிகமாக வித்தியாசப்பட்டு விடவில்லை. அந்த வீட்டில் ஒரே குடும்பமாக அவர்கள் எளிதாக ஒன்றி

ஆண்டவனும் இயற்கை நியதியும்

உலகை இயக்குபவன் ஆண்டவன் எனில் இயற்கை விதிகளுக்கு மேலாக அவன் அற்புதம் செய்ய வேண்டும் என்று எண்ணவேண்டியதில்லை. உலகம் இயற்கை விதிகளால் இயங்குகிறது என்பவர்கள் இந்த விதியே ஆண்டவன் ஆணைதான் என்பதை உணர வேண்டும். உண்மையான அரசுரிமை இல்லாதவன் சிம்மாதனம் ஏறினால் அவனிடம் நாம் சான்று காட்டச் சொல்லலாம். ஆனால் உண்மையான அரசனிடம் சான்று கேட்கலாமா? 'இயற்கை விதிகளை மாற்றி உன்னுடைய சக்தியைக் காட்டு' என்று நாம் கேட்கக்கூடிய போலி மன்னனல்ல ஆண்டவன். 'இயற்கை விதியை மாற்றி உன் சக்தியைக் காட்டு' என்று அவனிடம் கேட்பது, சத்தியத்திடம் சென்று 'அசத்தியத்தின் மூலம் உன் சக்தியை நிரூபணம் செய்' என்று கேட்பதற்கொப்பாகும். ஆண்டவனின் விதிமுறைகள் செம்மையான முழு வடிவம் பெற்றவை. எனவே அவன் அவற்றை மட்டும் காட்டிவிட்டுத் தான் அரங்கிலிருந்து மறைந்தே விடுகிறான். மறைந்து போனாலும் அந்த விதிகளினுள்ளேயே அவன் சாசுவதமாக உறைகிறான்.

— ராஜாஜி

விட்டார்கள். பதினொரு வயதேயான பார்வதி, அவளிடம் மிகவும் அன்பு வைத்திருந்த பெற்றோரும் உற்றாரும் உடையவள். அப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவளாக இருந்தும் பார்வதி தான் பிறந்து வளர்ந்த வீட்டைப் பற்றி ஏங்க மறந்துவிட்டாள். சித்தியின் மேல் அவள் உயிரையே வைத்திருந்தாள். பள்ளிக்கூடம் எப்போது முடியும் என்று காத்திருந்து, சித்தியோடு இருக்க ஓடி வந்து விடுவாள். இரவு நேரங்களில் சித்தியின் பக்கத்தில்தான் அந்தச் சிறுமி படுத்து உறங்குவாள். மற்றப் பெரிய பெண்களும் படிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். சலிக்காமல் படித்தார்கள். 'ஆரம்பத்தில் அவர்கள் படிப்பில் காட்டிய உற்சாகம் தொடர்ந்து நீடித்தால் கடைசியில் அவர்களைப் பி. டி. பள்ளியில் சேர்ப்பதில் ஒன்றும் கஷ்டம் இராது என்று சுப்புலக்ஷ்மி உறுதியாக நம்பினாள்.

பாலத்துக்குப் பிரசவ காலம் நெருங்கி விட்டது. ஏற்கனவே அவள் ஓர் ஆண் மகவைப் பெற்றிருந்தாள். அது பிறந்தவுடனேயே இறந்துவிட்டது. இப்பொழுதாவது குடும்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்து நிலைக்க வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்பட்டார்கள். கோயமுத்தூரிலிருந்து விசாலாட்சி வந்திருந்தாள். வேறு சிந்தனையே இல்லாமல் குடும்பத்தினர் எல்லோரும் கவலையோடு காத்திருந்தனர்.

ஜோதிடத்தில் சிறிது பயிற்சி இருந்த சித்தி மட்டும் நிதானம் காட்டினாள். மற்றவர்கள் ஏதேனும் உபயோகமாகச் செய்ய வேண்டும் என்ற ஆவலில் குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருக்க, சித்தி மட்டும் அமைதியாக ஒரு மூலையில் அமர்ந்து பஞ்சாங்கத்தைப் புரட்டியபடி குழந்தை பிறப்பதற்கு எது மிகவும் சுபமான நேரம் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். ஆங்கில லேடி டாக்டர் வந்து விட்டுப் போனாள். இரண்டு பகல் பொழுதுகளும் இரண்டு இரவுகளும் பிரசவ வேதனைப் பட்ட பிறகு பாலத்தினால் பொறுக்க முடியவில்லை. அப்போதுதான் — இரண்டு நிமிஷங்களுக்கு முன் —டாக்டர் ஓரிரண்டு மணி நேரம் கழித்துத் திரும்பி வருவதாகக் கூறிவிட்டுச் சென்றிருந்தாள்.

பாலம் கேவிக் கொண்டே, ''டாக்டரைத் திரும்பவும் அழையுங்கள். என்னால் இனி ஒரு நிமிஷம் கூடத் தாங்க முடியாது. ஆயுதம் போட்டுக் குழந்தையை எடுக்கச் சொல்லுங்கள்'' என்றாள்.

டாக்டர் திரும்பி வந்தாள். ஆயுதம் போட்டு எடுக்க வேண்டியதுதான் என்று அவளும் ஒத்துக் கொண்டாள்.

சித்தி குறுக்கிட்டாள். ''டாக்டர், குழந்தை பிறப்பதற்கு எது மிகவும் சுபமான வேளை என்று நான் கணித்து விட்டேன். அந்தச் சமயம் இன்னும் வரவில்லை. இன்னும் அரை மணி நேரம் ஆயுதத்தை உபயோகிக்காதீர்கள். நீங்களும் கொஞ்சம் தாமதப்படுத்தி, பாலத்தையும் அதுவரை பொறுத்துக் கொண்டிருக்கும்படி சமாதானப்படுத்தினீர்களானால், இப்பொழுது பிறக்கவிருக்கும் குழந்தை விசேஷமான சந்தோஷத்தோடும் இருக்கும்.''

சித்தி இட்டது சட்டம். டாக்டர் கூடக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. கடைசியில் சித்தியின் ஏற்பாட்டின் படி அவன் சொன்ன அதே நேரத்தில் குழந்தை பிறந்தது. எத்தனையோ வருஷங்களாகக் காத்திருந்து ஒரு வழியாக இப்போது அக் குடும்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்து நல்ல ஆரோக்கியத்துடன் வளர ஆரம்பித்தது

எல்லோருக்கும் சந்தோஷம் சித்தியின் முகத்தில் திருப்தி நிலவியது. தன் தாத்தாவின் பெயரைத் தாங்கிய சின்னஞ்சிறு குழந்தை சுப்பிரமணியன் வருங்காலத்தில் ரொம்பப் பிரசித்தியடைந்து வாழப் போகிறான் என்று சித்தி அறிவித்தாள். அவன் தன் தகப்பனாரைப் போலவே டாக்டராக ஆகலாம். அல்லது வேறு எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும் அவன் அதில் வெற்றி பெற்றே தீருவான். சித்தி, தான் அதற்கு உத்தரவாதம் என்றாள்.

சுப்புலக்ஷ்மி மேற்கண்ட விவரங்களை எனக்குத் தெரியப்படுத்தி விட்டு இவ்வாறு கூறினார். "இதற்குப் பல வருஷங்களுக்குப் பிறகு நான் கடலூரில் இருக்கும்போது. கொல்லங்கோடு மகாராணிகள் இருவர் எனக்குச் சிநேகமாயினர். ஒரு முறை நான் அவர்கள் வீட்டுக்குச் சென்றிருந்த போது கொச்சி ராஜ வம்சத்தின் ஜோசியர் அங்கு இருந்தார். ஒரு குழந்தையின் ஜாதகத்தை எப்பொழுது குறிக்கவேண்டும் என்று நாங்கள் விவாதித்துக்கொண்டிருந்தோம். இதில் இரண்டுவித அபிப்பிராயங்கள் உண்டு என்று நான் அறிவேன். ஒன்று, சிரோதயத்தை ஒட்டிக் கணிக்க வேண்டுமென்பது. மற்றது பிரசவம் முடிந்த கணத்தில் கணிக்கப்பட வேண்டும் என்பது. இந்தப் பெரிய ஜோசியர் இவ்விரண்டு கொள்கைகளும் தவறு, குழந்தையின் ஜாதகம் அது கருத்தரிக்கப்பட்ட வேளையைக் கொண்டுதான் கணிக்கப்பட வேண்டும் என்றார். இதை யார்தான் அறியமுடியும்? அவர் இப்படிச் சொன்னவுடன் நான் சிரித்துக் கொண்டே அந்த அறையை விட்டு வெளியேறினேன். பிறகு என் குடும்பத்தினரிடம் இதைப் பற்றிச் சொல்லும்போது நான், "அந்த ஜோஸியரின் கருத்து உண்மையாக இருக்குமேயானால், பாவம், பாலம் அரை மணி நேரம் அதிகமாகக் கஷ்டப்பட்டிருக்க வேண்டாம்" என்றேன். "கொஞ்சம் முன்னதாகவே பிறந்திருந்தாலும் குழந்தையினுடைய எதிர்கால நலனுக் கா அதிர்ஷ்டத்துக்கோ ஒரு குறையும் நேர்ந்துவிட்டிருக்காது!" (தொடரும்)

பல ஆண்டுகளுக்குமுன் தில்லியில் எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் ஜவாஹர்லால்ஜி, வல்லபாய் பட்டேல், ராஜன் பாபு, டாக்டர் அன்ஸாரி, ஸ்ரீபிரகாசா முதலியோருடன் ராஜாஜி.



இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்

ஜெனரல் கே.எம்.கரியப்பா

எச்சமயத்தினராயினும் சரி, எவ்விடத்தினராயினும் சரி, ராஜாஜியைக் காணச் செல்வதென்பது எனக்கு க்ஷேத்திராடனம் செய்வது போன்ற உணர்ச்சியை உண்டாக்குகிறது. சமீப காலம் கண்ட அரசியல் அறிஞர்களில், தேசத் தலைவர்களில், கல்விமான்களில் தலைசிறந்த ஒருவருடன் நேருக்கு நேராகத் தொடர்பு கொள்ளப் போகிறோம் என்று எண்ணுகையில் இந்த க்ஷேத்திராடன உணர்வு ஏற்படுகிறது. நமது இளம் ஜனநாயகம் பல் முளைக்கும் பாலப் பருவத்திலுள்ள இப்போது அவரை நம்மிடையே பெற்றிருப்பது நமது பெரும் பாக்கியம்.

மக்கள் குறித்தும் பிரச்னைகள் குறித்தும் ராஜாஜி விவேகம் செறிந்த தமது நோக்கத்தைச் செலுத்தி, திட்டங்கள் — அரசியல் கொள்கைகள் இவை பற்றி நடைமுறைக்குரிய திட்டம் வாய்ந்த கருத்துக்களை விடாமலும், சக்தியுடனும் எடுத்தியம்பி வருகிறார். பொதுவிலும், பிரத்தியேகமாகவும் இப்பணியை அவர் சுயநலம் பற்றின்றியும், பொதுமக்களிடம் இதனால் தமது செல்வாக்கு ஓங்குமா ஒடுங்குமா என்பதில் கருத்தின்றியும் புரிந்து வருகிறார். தேச நிர்மாணம் என்ற வாகனத்தின் சக்கரங்கள் தேவை மீறி அவசரமாகச் செல்ல முயன்ற சந்தர்ப்பங்களில் ராஜாஜியின் இக்கருத்துக்களே அந்த அவசரப் போக்கைத் தடுக்கும் நல்ல 'பிரேக்'காக இருந்து வருவதாக நான் உறுதியுடன் நம்புகிறேன். ராஜாஜி தமது வார்த்தைகளைக் குழப்புவதில்லை. தேசத்தின் நலனையொட்டி அரசியல் கொள்கைகளைச் சிறிதேனும் மாற்றிக்கொள்ள முடியும் என்று அவர் கண்டுவிட்டால் தமது கருத்துக்களை ஒளிவுமறைவு இன்றிப் பளிச்சென்று எடுத்துக் கூறுகிறார். காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு அவர்கள் 1948ம் ஆண்டு ஜூலை மாதத்தில் கீழ்க்கண்டவாறு கூறியதாகச் செய்தி வெளியாகியிருந்தது:

"அதிகாரத்தில் உள்ளவர்களைக் கண்டித்து விமரிசிப்பதை மக்கள் நிறுத்திவிடுவாராயின் அது ஒரு துக்க நாள் என்று நான் எண்ணுவேன். ஏனெனில் மக்கள் பலமாகக் கண்டனம் தெரிவித்துத் தவறுகளை எடுத்துக் காட்டினாலொழிய அதிகாரத்திலுள்ளவர்கள் அடிக்கடி பிழை செய்ய நேரிடும். அவர்களுக்கு மண்டைக் கனம் ஏறி, 'எது நடந்தால் என்ன?' என்கிற உதாசீன நோக்கும் ஏற்பட்டுவிடும். தாங்கள் செய்வது ஒன்றே சரி, மற்றவை எல்லாம் தவறானவை என்று கருதத் தொடங்குவார்கள். காங்கிரஸ்காரர்களே அதிகாரத்திலிருப்பினுங்கூட இந்த ஆபத்து இருக்கிறது. எனவே அதிகாரத்திலுள்ளவர்கள் கட்டுப்படுத்தப்பெற வேண்டும். தங்கள் வரம்புக்கு உட்படுத்தப் பெற வேண்டும்."

அதிகாரத்திலுள்ளவர்களைக் கட்டுப்படுத்தி அவர்களை வரம்புக்கு உட்பட்டு நடக்குமாறு செய்யத்தான் இவ்வளவு காலமாக ராஜாஜி தம்மால் இயன்றதவ்வளவையும் செய்து வருகிறார். இருந்தபோதிலும் ஏனோ காலஞ்சென்ற பிரதமரின் சில சகாக்களுக்கு ராஜாஜியின் உண்மையான தேசப் பற்றில் பிறந்த ஒளிவு மறைவற்ற வலுவான இக்கருத்துக்கள் ருசிக்கவில்லை.

ராஜாஜியின் தேர்ந்த கல்வி ஞானமும், தெள்ளிய அறிவும், மக்களின் நலனைப் பாதிக்கும் விஷயங்களிலும் தேசத்தின் நலனுக்கு உகந்த விஷயங்களிலும் அவர் வெளியிடும் தீக்ஷண்யமான கருத்துக்களும் நம் நாட்டின் வளர்ச்சியில் அழுத்தமான விளைவுகளை உண்டாக்கும் மகத்தான சக்திகளாகும். அரசியல் ரீதியில் இன்னும் இளம் பிராயத்திலேயே உள்ள நம் நாட்டுக்கு ராஜாஜியின் யோசனைகள் மிகவும் அவசியமானவை.

நம் நாட்டின் இன்றைய அரசியல் அறிஞர்களில் ராஜாஜியே அனுபவத்தால் முதலிடம் பெற்ற முதியவர். நாட்டு நடப்புக்கள் குறித்த அவரது கருத்துக்களையும், யோசனைகளையும், அறிவுரைகளையும் நாம் மரியாதையுடன் கேட்க வேண்டும். அவற்றில் சில நம்மில் சிலருக்கு ஏற்க முடியாதனவாகவும் இருக்கலாம். எனினும் அவர் ஒருகாலும் தேசத் துரோகி அல்ல, ஒருகாலும் உண்மையான சமதர்மத்தின் விரோதியல்ல என்று உறுதி கொள்வோம். நம் நாட்டை நேசிப்பதில் அவர் வேறெவருக்கும் பின்தங்கியவரல்ல. இந்தியா தனது சுதந்திரத்தை நிரந்தரமாகக் கட்டிக் காக்க வேண்டுமென்பதே அவரது விருப்பம். மனித குலத்தின் நிரந்தர சமாதானத்துக்கு உதவும் பரிபூரண சுதந்திரக் குடியரசாகப் பணியாற்றும் நாடாக — சக்தியும் சுபிட்சமும், சாந்தியும் நிலவும் இந்தியாவாக — இத்தேசத்தை நமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு பாரம்பரியச் சொத்தாக இன்று வாழுகிற நாம் விட்டுச் செல்ல வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

அவரது சில பக்குவமான, சக்தி வாய்ந்த யோசனைகள் தேசத்தின் நலன்களுக்கு விபரீதமானவை என்று சிலர் முகம் கடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் ராஜாஜியோ விளைவுகளை நினையாமல் வாயில் வந்தபடி எளிதில் பேசுபவரல்ல. அவர் தீர்க்கதரிசனம் வாய்ந்தவர். அவரைவிடத் தேசபக்தி உடையவர்களாக உரிமை கொண்டாடிக்கொள்பவர்களைவிடத் தீர்க்கமாகப் பார்க்கும் ஆற்றல் பெற்றவர் அவர். தேச நலனைக் குறித்த பிரச்னைகளில் அவரது கருத்துக்கள் எவ்வளவு சரியானவை என்பதைச் சரித்திரம் எடுத்துச் சொல்லும்.

நகைச்சுவையும் சமத்காரமும் நிறைந்த அவருடன், ஞானமும் புலமையும் நிறைந்த அவருடன், பொறுமையும் அநுதாபமும்

நிறைந்த அவருடன் உட்கார்ந்து சம்பாஷிப்பதென்பது ஆனந்தமும் அதிருஷ்டமும் ஆகும். மற்றவர் சொல்வதை நன்கு காது கொடுத்துக் கேட்கும் பாங்கு படைத்தவர் அவர். நாம் சொல்வது எல்லாவற்றையும் தெள்ளத் தெளிய விளக்குபவர். அவர் சுற்றி வளைத்துப் பேசுபவரல்ல. பொதுமக்களிடம் பெயரெடுக்க வேண்டுமென்பதற்காக, கௌரவமற்ற முறையில், 'ஜனரஞ்சகமாக' அவர் ஒருபோதும் பேசமாட்டார். ஒரு பிரச்னையின் மறுபுறத்தைப் பார்க்கவும், புரிந்துகொள்ளவும் அவர் எப்போதும் தயார். நம்மில் எல்லோருக்கும் இந்தக் குணம் இருப்பதாகச் சொல்வதற்கில்லை.

அவரது வாழ்க்கையில் பன்னெடுங்காலமாக அவர் காட்டியுள்ள அரசியல் தீரத்தையும், தியாகங்களையும் நாம் மறவாதிருப்போமாக. மற்ற பல பெரும் அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து ராஜாஜி காட்டிய இந்தத் தீரமும் தியாகமும்தான் இன்று நாம் பிறப்புரிமையாக அநுபவிக்கும் சுதந்திரத்தை அந்நியராட்சி என்ற நுகத்தடியிலிருந்து விடுவித்துத் தந்தது என்பதை மறவாதிருப்போமாக.

நம் நாட்டின் வருங்காலத் தலைவர்களான இன்றைய இளைஞர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்: நமது மரபுக்கும், தத்துவத்துக்கும், பண்பாட்டுக்கும் மாறுபட்ட கருத்துக்களைத் தொழுகின்ற சிலர் செய்து வரும் ராஜாஜி துவேஷப் பிரசாரத்தால் கவர்ந்திழுக்கப் படாதீர்கள்! நமது மரபும், தத்துவமும், பண்பாடும் யாவை? அவை நமக்கு நாமே தந்துகொண்ட அரசியல் சாஸனத்தின் முகவுரையில் வெளிப்படப் பிரகடனமாயுள்ளன:

> ''இந்திய மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு பரிபூரணமான ஜனநாயகக் குடியரசாக அமைத்துக் கொள்வதெனச் சிரத்தையுடன் பிரதிக்ஞை செய்துகொண்டு, அதன் எல்லா மக்களுக்கும் சமூக — பொருளாதார — அரசியல் நீதியும், சுதந்திரக் கருத்துக்கொள்ளும் உரிமையும் அக்கருத்தை வெளியிடும் சுதந்திரமும், சமய நம்பிக்கை, சமய வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும் அளிக்கிறோம்; அனைவரும் சமமான உரிமைகளும் சம வாய்ப்பும் பெற்று, அவர்களுக்குள் சகோதரத்துவத்தை நிலைநாட்டிக்கொள்வதற்காகவும், தனிநபரின் மாண்பினை உறுதிப்படுத்தவும், தேசத்தின் ஐக்கியத்தை நிலைப்படுத்தவும் இந்த அரசியல் சாஸனத்தை ஏற்று, வகுத்து நமக்கே அளித்துக் கொள்ளுகிறோம்.''

இந்த மகா சாஸனத்தை ஒழுகி நூற்றுக்கு நூறு விகிதம் வாழ்பவர் நமது ராஜாஜி. எனவே இளைஞர்கள் ராஜாஜித் துவேஷப் பிரசாரத்தில் பங்கு கொள்ளக் கூடாதென்றும், அவரது ஒவ்வொரு வாக்கையும் எடைபோட்டுப் பார்த்து அது குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அனைவருக்கும் அவர் சொல்லுகிற அனைத்தும் ஏற்கத் தக்கதாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனாலும் இன்று சிலர் சொல்வதைப் போலன்றி, அவர் சொல்வதில் பலவற்றை எவருமே சிந்தித்துப் பார்த்தால் ஏற்றுக்கொள்வர்.

இப்போது ராஜாஜி எத்தகைய, 'சீரான, தெளிவான, கூர்மையான' அறிவைப் பெற்றுள்ளாரோ, அதே நிலையில், அவர் ஆரோக்கிய திடகாத்திரராக மேலும் பல்லாண்டு, பல்லாண்டு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்; இந்திய சுதந்திரத்தை அதன் பூரண உருவில், அதனுடைய பவித்திரம் குலையாத நிலையில் என்றென்றும் காப்பதற்குக் கோடானு கோடியாக உள்ள நம் அனைவருக்கும் வழிகாட்டியாகவும் உபதேசகராகவும் அவர் நீண்ட காலம் விளங்குவதற்கு ஆண்டவன் அருள்வாராக!



இது போன்ற காபியை நீங்கள் குடித்திருக்க மாட்டீர்கள்



நெஸ்கா:பே

மட்டுமே காபியின் தனிச் சிறப்பை முற்றிலும் பெற்றுள்ளது

IS: 2791

நெஸ்கா:பே உயர்ந்த ரக காபிக்கொட்டையிலிருந்து தயாரானது. அது தனிப்பட்ட முறையில் வறுக்கப்பட்டு, நவீன வழியில் திறம்பட தயாரிக்கப்படுகிறது. டின்னைத் திறந்தவுடன் புத்தம் புதிய காபியின் நறு மணம் உங்கள் மனதைக் கவரும். சுவைத்தால் தான் தெரியும், அதன் தனி ருசியும், மணமும். இன்றே வாங்கிப் பருகுங்கள்!.



5 விநாடிகளில் காபி தயார்

நெஸ்கா:பே உடனே கரையக் கூடிய தூய்மையான காபி. அது, கொதிக்கவைத்துக் முதலிய வழி முறைகளுக்கு முன்னதாகவே உன்னதமாகிவிட்டது. ஒரு ஸ்பூன் நெஸ்கா:பே யை கோப்பையில் போட்டு வெந்நீர் ஊற்றுங்கள். அருமையான காபி உடனே தயார்! கொதிக்க வைப்பது, வடிகட்டுவது போன்ற எவ்வித கஷ்டமும் இல்லை. ஆகா, எத்தனை எளிமை—எவ்வளவு இனிமை!

நெஸ்கா:பே* இந்தியாவின் இணையற்ற காபி ... 100% தூய்மையானது

NESTLÉ
ஒரு நெஸ்லே தயாரிப்பு

*நெஸ்கா:பே, நெஸ்லே இன்ஸ்டன்ட் காபியைக் குறிக்கும் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்



எவ்விடமும் சம இடமே!

ராஜாஜியை நான் நன்றாக அறிந்தவன். அப்படியிருந்தும் அவருடன் சிறைவாசம் செய்தது எனக்கு ஒரு புதுப் படிப்பு. நுட்பமும் கூர்மை நிறைந்ததுமான அவருடைய புத்தி எனக்கு முன்பே தெரியும். அப்படியிருந்தாலும் அவருடன் தினமும் கூடவே இருந்ததால் அநேக விஷயங்களை நான் தெரிந்து கொண்டேன். திருக்குறள் அவருடன் கூட வாசித்ததே ஒரு பெரிய அதிருஷ்டம். ராஜாஜி திருக்குறளை நன்றாய் அறிந்திருக்கிறார். அநேக நுட்பமான விஷயங்களை அதிலிருந்து அவர் ரசித்திருக்கிறார். பகவத்கீதையிலும் சமஸ்கிருதத்திலும் எனக்கு ஒருவாறு ஆசை ஏற்பட்டிருப்பதற்கு அவர்தான் காரணம். ஒரு நாளாவது அவர் கோபித்ததை இந்த ஐந்து மாதத்தில் நான் கண்டதேயில்லை. சிறைவாசத்தில் இப்படி இருப்பது மிகவும் அபூர்வம்.

--காலம் சென்ற டாக்டர் சுப்பராயன்

(திருச்சி ஜெயில் என்ற புத்தகத்தின் முகவுரையில்)

●

இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக ராஜாஜி புதுடில்லி அரசாங்க மாளிகையில் சுமார் ஒரு வருஷம் வீற்றிருந்து அரசாங்க நிர்வாகம் நடத்தியபோது அதற்குமுன் நூற்றைம்பது ஆண்டுகளாக அப்பதவிக்கு ஏற்படாத கௌரவம் ஏற்பட்டது...... பிரிட்டிஷார் புதுடில்லியில் நிலையாக இருந்து இந்தியாவை ஆட்சி புரியப் போவதாக எண்ணி நூற்றைம்பது கோடி ரூபாய் செலவிட்டுப் புதுடில்லி நகரை நிர்மாணித்தார்கள். அதில் கவர்னர் ஜெனரல் மாளிகை நடுநாயகமாக விளங்கியது. கீழ் நாடுகளில் உள்ள மாளிகைகளிலே மிகப் பெரியது என்று கருதப்படும் அந்த மகத்தான அரண்மனையில் ராஜாஜி தமக்கென்று ஒரு சிறு பகுதியை ஒதுக்கிக் கொண்டு திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் குடிசையில் வாழ்ந்த முறையிலேயே எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். அதே சமயத்தில் உலகின் பல முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து அடிக்கடி வந்து கொண்டிருந்த ராஜதந்திரிகளை உரிய முறையில் வரவேற்று உபசரித்து அனுப்புவதும் அவருக்குச் சாத்தியமாக இருந்தது.

--பேராசிரியர் கல்கி (நாட்டுக்கு ஒரு புதல்வர்)

கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

ராஜாஜி முதன் முதலில் கைது செய்யப்பட்டது 1921ம் வருஷம் டிசம்பர் மாதம். ஜெயிலில் கைதியின் சரித்திரத்தைக் குறித்து விளக்கும் அட்டைக்கு ஹிஸ்டரி போர்டு என்று பெயர். ராஜாஜியின் ஹிஸ்டரி போர்டில் அதிகாரிகள் என்ன எழுதி வைத்திருக்கிறார்கள் தெரியுமா?

ரிஜிஸ்டர் நம்பர்	5398
அனுமதித்த தேதி	21 - 12 - 21
அப்பீல் செய்ய மறுத்த தேதி	24 - 12 - 21

பெயர்: சி. ராஜகோபாலாச்சாரி, இந்திய தேசியக் காங்கிரஸ், பொதுக் காரியதரிசி

படிப்பு: சி.

சி என்றால் எழுதப் படிக்கத் தெரியாது என்று அர்த்தம்!

இந்தியாவில் மிகவும் முக்கியமான அரை டஜன் மனிதர்களில் ராஜாஜியும் ஒருவர் என்கிறார் ஜான் குந்தர் என்ற புகழ்பெற்ற பத்திரிகை நிருபர். இதே ராஜாஜியைத்தான் எழுதப் படிக்கத் தெரியாத கைதி என்கிறார் வேலூர் சிறை அதிகாரி! நமக்கு என்ன தோன்றுகிறது? அந்த வேலூர்ச் சிறை அதிகாரியைப் பார்த்து ராஜாஜி எழுதியுள்ள 'தம்பீ வா! இதையும் படி' என்ற புத்தகங்களைப் படிக்கச் சொல்லலாம் போல் தோன்றுகிறதல்லவா?


எஸ். எஸ். கரையாளர்

(திருச்சி ஜெயில் என்னும் புத்தகம்)

உதவியும் - பதவியும் ஒன்றுதான்!

வேலை மிகுதியால் அவர் (ராஜாஜி) களைப் படைந்து விடுவார் என்று நினைப்பது சகஜந்தானே! அதுதான் இல்லை. அவர் தம்முடைய சொந்த வேலைகள் அனைத்தையும் தாமே செய்து வருகிறார். பிளேட்டுகளைக் கழுவுகிறார். படுக்கை தட்டிப் போட்டுக் கொள்கிறார். ஒரு நாள் இரவு படுக்கை தட்டிப் போடும் பொழுது மட்டப்பாறை அய்யர் 'நான் போடட்டுமா?' என்றுபோனார். 'வேண்டாமே! என்னுடைய வேலைகளை நான் செய்யக்கூடிய சக்தியை இன்னும் இழந்துவிடவில்லை!' என்று சொன்னார் ராஜாஜி.

(திருச்சி ஜெயில்)





இருபது வயதுகூட நிரம்பப்படாத இளைஞன், அவன். பூட்டுத் தொழில் இரகசியத்தைத் ''திறந்து'' பார்ப்பதில் அளவிலா ஆர்வம் கொண்டான். கையிலே காசில்லை; ஆனால் துணிவு நிரம்ப இருந்தது. ஆதரிப்போர் யாருமில்லை. எனினும் உறுதி இருந்தது. புறப்பட்டான் மேற்கு ஜெர்மனியை நோக்கி. ''வருக'' என்று அவனை யாரும் அழைக்கவில்லை; ''சென்று வருக'' என்று யாரும் அவனை வழியனுப்பவில்லை. எனினும் துணிவு, உறுதி இவற்றைத் துணையாகக் கொண்டு புறப்பட்டான். தொழில் கற்றுக் கொள்ளும் ஆர்வம், அவனை உந்தித் தள்ளியது. வழி நெடுக, அவன் வேலை செய்தான்; பணம் சம்பாதித்துப் பயணச் செலவுக்கு வைத்துக் கொண்டான்.

இது நடந்தது, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு. சோலங்கி ஹிம்மத்பாய் — இதுதான் இளைஞனின் பெயர் — இன்று மேற்கு ஜெர்மனியில் பூட்டுத் தொழிற்சாலையில் வேலை கற்று வருகிறான். குஜராத் மாநிலத்திலுள்ள பரோடாவைச் சேர்ந்தவன் இவன்.



இம்மாதிரி துணிவுடன் புறப்பட்டு வந்துவிடுகிற இளைஞர்கள், முன்பின் தெரியாத 'பூமி'யில் அவதிப்பட நேரிடுவதுண்டு. ஆனால் இவ்வித இளைஞர்களுக்குக் 'கை கொடுத்து' உதவும் ஸ்தாபனம் ஒன்று, மேற்கு ஜெர்மனியில் இருக்கிறது. ''உலக நட்புறவுக் கழகம்'' என்பது இதன் பெயர். பழக்கமில்லாத நாட்டில், ஆதரிப்பார் யாருமின்றித் திண்டாடுகிற இளைஞர்களுக்கு, உதவி செய்வதே, இதன் தலையாய நோக்கம். மேற்கு பெர்லின் பொருளாதார மன்றம் மற்றும் பல மேற்கு ஜெர்மன் தொழிற் சங்கங்கள், பிரபல தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் இந்தக் கழகத்தை நடத்துகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வருகிற இளைஞர்களில், யாருக்கு அரசின் ஆதரவு கிடைக்கவில்லையோ, அவ்வித இளைஞர்களுக்கு எல்லா விதங்களிலும் இக் கழகம் உதவி செய்து வருகிறது.

ஆரம்பத்தில் ஹிம்மத்பாய் பலவிதங்களில் சங்கடப்பட்டார். மொழி தெரியாதது அதற்கு முக்கிய காரணம். முதலில் இவருக்கு ஜெர்மனி மொழி கற்றுக் கொடுக்கவும், பின்னர் பூட்டுத் தொழிற்சாலை ஒன்றில் தொழில் கற்றுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய இளைஞரின் பூட்டுத் தொழில் பயிற்சி அடுத்த ஆண்டு முடிவடைகிறது. தாயகத்துக்குத் திரும்ப அவர் துடியாய்த் துடிக்கிறார்!

(யூ.பி.எஸ்.)

இருபத்தொரு வயதான ஜெர்மானிய இளைஞர் தமது சைக்கிளில் உலகைச் சுற்றி வருகிறார். ஜூலை 13ந் தேதி அவர் தமது நாட்டை விட்டுக் கிளம்பினார். சைக்கிளில் ஒரு டெண்ட் உள்பட அவருக்குத் தேவையான பொருள்களைக் கட்டிச் சுமந்து போகிறார். ஆஸ்திரியா, யூகோஸ்லேவியா, பல்கேரியா, துருக்கி, ஸிரியா, ஈராக் முதலான தேசங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கப்பலேறிக் கோவாவுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து மீண்டும் தமது சைக்கிளில் தார்வார், ஹுப்ளி, பங்களூர், காஞ்சீபுரம் முதலான பல நகரங்கள் வழியே சென்னை வந்தடைந்தார்.

இங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போய்த் தமது சகோதரனைச் சந்தித்து விட்டுப் பின்னர் எட்டு மாதங்கள் கழித்துத் தமது பிறந்த நாட்டைச் சென்றடைவது அவர் நோக்கமாம்!

●

கென்னடி

இரவு சீக்கிரம் படுக்கப் போய் அதிகாலையில் துயிலெழ வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார் — வேறு விதமாகத் தமது அன்றாட அலுவல்களின் நிகழ்ச்சி நிரலை மாற்றி அமைத்துக் கொள்ள முடியாத போதெல்லாம்!

தமக்கிருக்கும் கடமைகள், பொறுப்புகள் குறித்து நிரம்பவும் கவலைப்படுவார், ஆனால் தம்மைப் பற்றி அவர் என்றென்றும் கவலைப்பட்டதில்லை!

கல்லூரியில் படிக்கும் போது காலேஜுக்கு டாக்ஸியில் வந்து இறங்குவார்; மீட்டரைப் பார்த்துப் பணம் தர மாட்டார்; — செக் புத்தகத்தைப் பாக்கெட்டிலிருந்து உருவிக் கையெழுத்துப் போட்டு ஒரு செக் வெட்டிக் கொடுப்பார். ★





உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
HAIR OIL
எகானமி சைஸ்
வாங்கி பணத்தை
மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்ஃப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்

நாரதர் தீர்ப்பு



இராமலிங்கையர் பிராமணர்; பிதுரார்ஜிதச் சொத்து கொஞ்சம் உண்டு. ஆயினும் வியாபாரத்தில் இறங்கினார். பிதுரார்ஜிதமான புத்தியும், சாமர்த்தியமும் இருந்தபடியால் வெற்றியுடன் வியாபாரம் நடந்தது. வியாபாரத் துறையிலும் அந்தப் பிராமணப் பிதுரார்ஜிதம் பயன்பட்டது. ஆனால் இப்படி வழிமாறிப் பயன்பட்ட தனம் செலவழிந்து போய் ஒன்றும் மிச்சம் இராது. பிறகு ஆள் அடையாளமே தெரியாது. அதர்மத்தில் செலவழிந்த புத்தியும் சாமர்த்தியமும் பெருகும்;- குறையாது; அழியாது. அது கிடக்கட்டும். இராமலிங்கையர் ஊரில் பெரிய வியாபாரியாகப் போய்விட்டார். பலர் அவருடைய உதவியினால் நன்மை அடைந்தார்கள். சிலரை மிகவும் கடுமையாக நடத்தினார். ஆனபடியால் இராமலிங்கையரைப் போற்றுபவர்களும் உண்டு; திட்டுகிறவர்களும் இருந்தார்கள்.

அவரைப் பற்றி ஒரு சர்ச்சை, இரண்டு பெரிய அத்துவைத வித்துவான்களிடையே நடந்தது—அவர் ராட்சசரா, தெய்வ ஜாதியா என்று. அவர் ராட்சசர் என்பதற்கு வித்துவான் கிருஷ்ணையர் நல்ல சான்றுகளும் வாதங்களும் சமர்ப்பித்தார். கிருஷ்ணையருடைய சீடர்கள் கரகோஷம் செய்தார்கள். இதற்கு மாறாகச் சாம்பசிவ சாஸ்திரிகள் மிக நல்ல வாதங்கள் எடுத்துச் சொல்லித் தம்முடைய சீடர்களின் கரகோஷங்களைப் பெற்றார்.

இந்திரன் தவறு செய்தான் அல்லவா? அதனால் அவன் தேவஜாதி அல்லாமல் போனானா? வாயு பகவான் ரிஷியின் புத்திரிகளை அவமதித்தும் தேவனாகவே இருந்தான். இப்படியே சூரியனும் மற்றவர்களும்; இராமலிங்கையர் தேவ ஜாதிதான் என்று வன்மையாகச் சாம்பசிவ சாஸ்திரிகள் வாதித்தார். நாரதர் வந்து சேர்ந்தார். ''கொல்'' என்று சபை நடுவில் குதித்துச் சிரித்தார். ''பண்டித மூடர்களே! இராமலிங்கையர் தேவ ஜாதியுமல்ல, ராட்சச குலமுமல்ல. இவருடைய தாய் தகப்பன்மாரை எனக்கு நன்றாகத் தெரியும்.. இவர் மனித ஜாதி'' என்று சாட்சியம் சொல்லிவிட்டு வீணையுடன் மறைந்துவிட்டார்:

சாம்பசிவ சாஸ்திரிகளும் வித்துவான் கிருஷ்ணையரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு மயக்கமாகப் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள்: நாரத

முனிவருடைய தேஜஸின் பிரபாவமே அந்த மயக்கத்துக்கும் பிரமைக்கும் காரணம்.

''இந்தச் சர்ச்சை முனிவருக்குப் பிடிக்க வில்லை போல் இருக்கிறது'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''அப்படித்தான் தோன்றுகிறது'' என்றார் கிருஷ்ணையர்.

''என்ன ஆயிற்று சாஸ்திரவிசாரம்?'' என்று இராமலிங்கையர் சாஸ்திரிகளைக் கேட்டார்.


''அது என்ன என்கிறீர்? தங்களுடைய குணாதிசயங்களைப் பற்றித் தர்க்கம் நடந்து வருவதை அறிந்து நாரத முனிவரே — சாட் சாத் முனிவரே — வந்து தீர்ப்புச் சொல்லி விட்டுப் போய்விட்டார்'' என்றார் சாஸ்திரிகள்.

பக்தி ஒன்று போதும் நமக்கு. கலிகாலத்துக்கு இது சாஸ்திரம்'' என்றார் சாஸ்திரிகள்.

''ஆனபடியால் என்னைப் போன்ற பிராமணனுக்கும் கதி உண்டு.''

''உண்டு! உண்டு! அதற்கு என்ன சந்தேகம்?'' என்றார் சாஸ்திரிகள், கதையில் பேசிய கிளியைப் போல். ''அது என்ன கிளிக் கதை?'' என்று கேட்கா தீர்கள். அது ஓர் சுசாப் கதை. யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



[தேனாம்பேட்டை பால சுப்பிரமணிய சுவாமி கும் பாபிஷேக மலரிலிருந்து]

''என்ன சொன்னார்? என்ன சொன்னார்?'' என்று வெகு ஆசையுடன் கேட்டார் இராம லிங்கையர்.

'' 'நீங்கள் மனித ஜாதி. தேவ ஜாதியும் அல்ல, ராட்சச ஜாதியும் அல்ல' என்று விவா தத்தைத் தடை செய்து விட்டு மறைந்து போனார்'' என்று விஷயத்தை விளக்கினார் சாஸ்திரிகள்.

''இப்படித்தான் இந்த முனிவருடைய காரி யங்கள். அத்துவைத துவைத வாதங்களையும் இவர் நிறுத்தி விடுவார் போலிருக்கிறது. இனிமேல் படிப்பு ஏது. வேதாந்தப் பயிற்சி ஏது? எல்லாம் சூனியமாய்ப் போய்விடும்'' என்றார் இராமலிங்கையர்.

''அப்படி அல்ல, ஐயர்வாள்! பக்தி ஒன்று இருந்தால் போதும். துவைதமும் தவறு அல்ல; அத்துவைதமும் தவறு அல்ல. பக் தியே ஞானம், பக்தியே கர்மமும்.


Cadbury's
MILK
CHOCOLATE
ஒவ்வொரு சாக்கலேட்டும் ... பாலின் குணங்கள் அடங்கியது!
இஷ்டம்போல் தேர்ந்தெடுக்க எண்ணற்ற
இன்பரகங்கள். காட்பரீஸ் சாக்கலேட்
சத்துச் செறிந்தது. சுவைமிக்கது
— ஊட்டமளிப்பதும்கூட.
Cadbury's CRACKLE
Cadbury's Snack
Cadbury's ORANGE MILK CHOCOLATE
Cadbury's Fruit & Nut MILK CHOCOLATE
Cadbury's BOURNVILLE PLAIN CHOCOLATE
Cadbury's CANDY NUT MILK CHOCOLATE
Cadbury's Roasted Almond PLAIN CHOCOLATE
Cadbury's Hazel Nut MILK CHOCOLATE
Cadbury's Fruit & Nut PLAIN CHOCOLATE
Cadbury's NUT MILK CHOCOLATE
Cadbury's
காட்பரீஸ் சாக்கலேட்
மிட்டாய் மட்டுமல்ல.... ஒரு உணவும்கூட



குழந்தையும் தெய்வமும்

கதை அசடு வழிகிறது. படத்தின் ஆரம்பத்தில் வரும் கல்லூரி மாணவர்கள், மாணவிகளிடம் செய்யும் குறும்புத்தனங்கள் எல்லை மீறிப் போய்விடுவதுடன் நன்றாகவும் இல்லை. அப்போது அவர்கள் பாடும் பாட்டின் ஒலிப்பதிவு பயங்கரம். ஜமுனாவைக் கல்லூரி மாணவியாகப் பார்க்க வேதனையாக இருக்கிறது. என்ன செய்யலாம்!

கலாட்டாப் பண்ணின மாணவன் சேகரையே அந்தக் கல்லூரி மாணவி பாமா காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளுகிறாள். உடனே மக்கட் பேறும் கிடைத்து விடுகிறது. அதுவும் இரட்டைக் குழந்தை. இரண்டும் பெண்கள். அதையடுத்துப் பெண்ணின் பணக்காரத் தாயாரின் திமிர் காரணமாக மாப்பிள்ளை சேகர் குழந்தையுடன் வெளியேறிச் சிங்கப்பூருக்குப் போய்விடுகிறான். உடனே ஒரு வெள்ளைக்காரப் பிரபுவின் தயவில் பெரும் பணக்காரனாகித் தாய்நாடு திரும்பிவிடுகிறான். இரட்டைக் குழந்தைகளில் மூத்தவளான லஷ்மி தாயாரிடம் தங்கிவிடுகிறாள். இளைய பெண் பப்பி தகப்பனாரிடம் வளருகிறாள். இரண்டு பெண்களும் ஒரே பள்ளிக்கூடத்தில் படிக்கின்றனர். முதலில் விரோதிகளாயிருந்து ஒரு 'பிக்னிக்' போன போது தாங்கள் ஒரு தாய் வயிற்றுச் சகோதரிகள் என்று அறிந்து சிநேகமாகிப் பிறகு தாய் தந்தையர்களை ஒன்று சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெறுகின்றனர். காரணம், பிரசித்தி பெற்ற வால்ட் டிஸ்னியின் (Parent trap) என்னும் படத்தின் தமிழாக்கமே இது.

கல்லூரி மாணவி பாமாவாக வந்து நடிப்பில் தோல்வியுற்ற ஜமுனா கணவனைப் பிரிந்த பின்பு கண்ணீர் விட்டு எல்லோரையும் கவர்ந்து விடுகிறார். கோவிலுக்குச் செல்லும் வழியில் பெருமழை பிடித்துக் கொள்ளவே பாமா ஒரு வீட்டில் ஒதுங்குகிறாள்; அந்த வீட்டுப் பெண் பாமாவின் கணவன் செய்த உதவியால் மண வாழ்வை அடைந்தவள். ஆகவே, அவள் அவனது புகைப் படத்தை வைத்துக் கொண்டு தெய்வமாக வழிபட்டு வருகிறாள். அந்தப் படத்தைப் பார்த்த பாமாவின் மனம் நெகிழ்ந்து விடுகிறது: இறைவனுக்கு எடுத்துச் சென்ற மலரையும், பழத்தையும் தன் கணவனின் படத்தின் முன்பு வைத்து வழிபடுகிறாள். ஜமுனா இந்த இடத்தில் எல்லோருடைய உள்ளங்களையும் தொட்டு விடுகிறார்.

இரட்டைக் குழந்தைகளில் ஒன்று தன் பாட்டியைப் போல் கர்வி. இன்னொன்று மிகவும் சாத்விகம். இந்த இருவேறு இயல்புகளையும் ஒருவரே ஏற்று நடிப்பது மிகவும் சிரமசாத்தியமானது. பேபி பத்மினி மிகவும் திறமையுடன் நடித்திருக்கிறாள். படத்திலுள்ள குறைகளை மறந்து விடுவதற்குக் குழந்தையின் நடிப்பு உதவி புரிகிறது. டைரக்ஷனுக்கு ஒரு சபாஷ் போடவும் வைக்கிறது.

ஜெயசங்கருக்குக் காதலிக்க நேரம் இருக்கிறது: குடி போதையில் மயங்கி நாட்டியக்காரியின் அழகில் கிறங்க நேரம் இருக்கிறது: ஆனால் ஏற்ற பாத்திரத்தை உணர்ந்து நடிப்பதற்கு...?

சுந்தரராஜன் சினிமா உலகின் அப்பா ஸ்தானத்தை அருமையாகப் பிடித்துக் கொண்டுவிட்டார்!

ஜி. வரலட்சுமி அகம்பாவம் பிடித்த பணக்காரியாக வந்து தம் பாகத்தைத் திருப்தியாகச் செய்திருக்கிறார்.

நாகேஷ் ஜோடியில்லாமல் தனியாக நடிப்பதே அவர் பாத்திரத்துக்குப் புதுமையைத் தருகிறது. பேச்சுக்குப் பேச்சு ஹாஸ்யங்களை உதிர்த்துத் தியேட்டரைக் கலகலப்பாகச் செய்கிறார்.

கதாநாயகனின் குடி போதையும், நாட்டியக்காரியின் மோசடிகளும் மிகப் பழைய சம்பவங்கள். அவை படத்தின் தரத்தைக் குறைப்பதுடன், திரைக் கதையையும் பாழாக்கி விடுகின்றனவே!

''குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று'' என்ற பாட்டும் ''கோழி ஒரு கூட்டிலே'' என்ற பாட்டும் நன்றாயிருக்கின்றன.

இது ஏ.வி.எம். தயாரிப்பு — ஆனால் அந்தப் புகழ் பெற்ற முத்திரை எங்கே?



காரா....கல்யாணமா?

எஸ். பத்மாவதி

"இலோ! நீ ஒன்று கார் ஓட்டக் கற்றுக் கொள்......... அல்லது கல்யாணம் செய்து கொள்......"

"என்னப்பா....? நான் கார் 'டிரைவிங்' கற்றுக் கொள்வதற்கும் கலியாணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தம் நிறைய இருக்கு அம்மா,...உன் அத்தான் 'மகிபால்' டில்லிக்குப் போகப் போறானாம்......"

"போகட்டுமே! யார் இங்கே பிடித்து வைத்தார்கள்....?"

"இலோ,.....! இலோத் தமா.....! என்னம்மா, இப்படிச் சொல்றே? நீ அவனைக் கல்யாணம் செய்துகொள்ளுவா யென்ற எண்ணத்தில்தானே மகிபால் இங்கே இவ்வளவு நாட்கள் காத்திருக்கிறான்...."

"நல்லாயிருக்கே... நான் எப்போ அப்பா, மகிபால் அத்தானைக் கல்யாணம் பண்ணிக் கிறேன்னு சொன்னேன்?"

"என்னம்மா இலோ, இப்போ இப்படி?"

"என்னப்பா நீங்க. எனக்கு இஷ்டமில்லே."

"சரி! உனக்குப் பிடிக்கா விட்டால் வேண்டாம்மா...!"

"சமர்த்து அப்பா!"

"உம்.... சரி! அப்போ கார் டிரைவிங் கற்றுக்கொள்."


"ஏம்பா,...எதுக்கு?"

"நீ மகிபாலைக் கல்யாணம் செய்துக்கிறதில்லே என்று தீர்மானம் செய்து விட்டாய். இது நிச்சயமாகத் தெரிந்த பிறகு, மகிபால் இங்கு இருப்பதில் அர்த்தம் இல்லேயாம்.... டில்லியில் பெரிய அண்ணா விட்டுக்குப் போறானாம்."

"எங்கே பெரியப்பா விட்டுக்கா? உம்.... அங்கே சுகந்தி இருக்கிறதே.... அவளை வலை வீசவா?......"

"அப்படித்தான்னு வைச்சுக்கோயேன். எங்க இரண்டு பேருக்கும் ஒரே தங்கச்சி பிள்ளை மகிபால். உனக்கும் அத்தான் முறை. சுகந்திக்கும் அதே முறை. நீ அவனைக் கட்டிக்க வேண்டாட்டே.... சுகந்திக்கு அவன் மேலே எப்பவுமே தனிப் பிரியம். மகிபால் உன் மேலே அதிக ஆசை வைச்சிருக்கான்னு தெரிந்து ஒதுங்கி யிருக்கா. இப்போ உன் முடிவைச் சொல்லிட்டே... பெரிய அண்ணாபெண் சுகந்தி பாக்கியசாலி."

"சரிப்பா.... அந்த அதிருஷ்டம் சுகந்திக்கே கிடைக்கட்டும். ஆமாம்.... இப்போ என்னை எதுக்கு டிரைவிங் கத்துக்கச் சொன்னீங்க ?"



"பின்னே.... என்னம்மா? நான்தான் என் காரை டிரைவர் கையிலே கொடுக்கமாட்டேன்னு உனக்குத் தெரியும். என்னையும் 'டிரைவ்' பண்ணக் கூடாதென்று உத்தரவுபோட்டு விட்டாய். மகிபால் இவ்வளவு நாட்கள் நம் கம்பெனியிலேயே வேலை செய்து கொண்டு, என் காரையும் ஓட்டிக் கொண்டிருந்தான்.... அவன் டில்லிக்குப் போயிட்டா..... பிறகு யார் ஓட்டுவாங்க....? நான்தான் ஓட்டவேண்டும்."

"ஐயோ ..... கூடவே கூடாது....! நீங்க காரை 'டிரைவ்' செய்யறதில்லேன்னு 'பிராமிஸ்' செய்திருக்கிறீங்க....."

"அப்போ.... நீ டிரைவிங் கற்றுக் கொள்......"

"உம்... உம்... சரிப்பா.."

இந்தச் சமயத்தில் இலோத்தமாவும், அவள் தகப்பனார் லோகநாதனும் பேசிக் கொண்டிருந்த அறையுள் இலோவின் அத்தான்மகிபால்நுழைந்தான்.

"என்ன மாமா! இலோ.... என்ன சொல்றா.... என்னைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதம் கொடுத்து விட்டாளா?"

"ஐயோ....! போதுமே. இந்தத் இலோ அதுக்குச் சரின்னு சொல்லலே... கார் டிரைவிங் கத்துக்கிறேன்னு தான் சொல்றாள்......"

மகிபால் முகம் தொங்க, "சரி, மாமா! அப்போ.... நான் நாளைக்கே டில்லிக்குக் கிளம்பறேன்...." என்றான்.

மாமா பரபரப்புடன், "டேய், டேய் மகிபால்! என்னடா.... அதற்குள் என்ன அவசரம்? உன்னைத்தான் நம்பியிருக்கேன். இலோவுக்கு நீதான் டிரைவிங் கத்துக் கொடுக்கணும்....." என்றார்.

"வேண்டாம், மாமா! கலியாணமே கட்டிக்கப் பிடிக்காத

வங்களுக்கு, 'டிரைவிங்' மட்டும் கத்துக்கப் பிடிக்குமா.......? வேறே யாராவது ஆள் பாருங்கள்......!''

''என்ன இலோ... சொல்லும்மா.... அத்தான்கிட்டே கத்துக்கறேன்னு.....''

இலோத்தமா கன்னத்தில் கை வைத்துக் கொண்டு ஏதோ யோசித்தாள்.

''உம்..... சரி.... நாளையிலிருந்து நானே காரை எடுக்க வேண்டியதுதான்.'' — லோகநாதன் சோர்வுடன் சூள் கொட்டினார்.

இலோ பரபரப்புடன், ''வேண்டாம்பா! டாக்டர் நீங்கள் டிரைவ் பண்ணவே கூடாதென்று சொல்லியிருக்காரே..... உம்..... அத்தான்..... மயிபால் அத்தான்! உங்கள் கோப முகத்தை இப்படிக் கொஞ்சம் திருப்பிக் காட்டுங்கள், பார்க்கலாம்....'' என்றாள்.

மயிபால் வெடுக்கென்று திரும்பி, வாயைக் கோணித் இலோத்தமாவுக்கு அழகு காட்டினான். இலோத்தமாவும் பதிலுக்குத் தன் பல்லைக் காட்டினாள். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொன்னாள்:

''சரி, ஒரு நிபந்தனை... கார் டிரைவிங் சம்பந்தமில்லாமல் வேறு எதுவும் என்னிடம் பேசக் கூடாது. நான் 'டிரைவிங்' கற்றுக் கொள்ளும் போது..... அப்பா.. நீங்களும் என்னுடனேயே இருக்க வேண்டும். சம்மதமா?'' என்று கேட்டாள்.

லோகநாதன் தன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு யோசித்தார். ''சரிம்மா, இருக்கேன்...!''

மயிபால் கோபத்துடன் சீறினான்... ''என்ன மாமா! என் சம்மதத்தைக் கேட்காமலேயே நீங்கள் ஏதோ தீர்மானம் செய்து விட்டீங்களே.....! எனக்குத் இலோவுக்கு 'டிரைவிங்' சொல்லிக் கொடுக்கத் துளியும் இஷ்டமில்லே......''

லோகநாதன் பெருமூச்சு விட்டார். ''சரிதான், இந்த வேதாளம் இப்போமுருங்கை மரம் ஏறி விட்டதா? சரி, சரி... நீங்க இரண்டுபேரும்.. உங்க... உங்க இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள். நான் என் இஷ்டப்படி நாளையிலிருந்து காரை ஓட்டப் போகிறேன்'' என்றார்.

இலோத்தமா பதறியடி... மயிபால் முன்னே நின்றாள். ''அத்தான்.....! மயிபால் அத்தான்.....! தயவுசெய்து எனக்கு நீங்கள் டிரைவிங் கற்றுத் தர வேண்டும். கருணை கூர்ந்து 'சரி' என்று வாய் திறந்து சொல்லுங்கள்.''



மயிபால் அசைய வில்லை.

லோகநாதன் முன்னால் வந்து.... ''என்னப்பா.... மயிபால்! சரி.... என்று சொல்லேன்....'' என்று வேண்டினார்.

மயிபால் ஓர் உறுமலுடன் திரும்பினான். ''ஏதோ உங்கள் வார்த்தைக்காக ஒப்புக் கொள்கிறேன், மாமா!'' என்று சொன்ன போது அவன் கண்கள் இலோவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

'அத்தானை அழ அழ விரட்டி ஊருக்கு ஓட்ட வேண்டும்' என்று இலோத்தமா தன் மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டாள்.

அடுத்த நாள் மாலை..... மணி ஐந்து. போர்டிகோவில் கார் நின்று கொண்டிருந்தது. டிரைவர் சீட்டில் மயிபாலும், பின்னால் லோகநாதனும் உட்கார்ந்து கொண்டு, அரை மணி நேரமாகத் இலோத்தமாவுக்காகக் காத்திருந்தனர்.

போர்டிகோவுக்குப் பக்க வாட்டிலுள்ள மாடி அறையின் பால்கனிக் கதவு 'பட்'டென்று திறந்தது. நீல ஜார்ஜெட் புடவையுடன் இலோத்தமாவின் அழகு உருவம் அங்கு வந்து நின்றது. இடை குனிந்து, ''அப்பா! அப்பா! எனக்கு ஒரே வயிற்று வலியப்பா... இன்னைக்கு வேண்டாம்'' என்று மொழிந்தது. உடனே மின்வெட்டுப் போல் கதவினுள் சென்று மறைந்தது.

லோகநாதன் பர பரப்புடன் காரிலிருந்து இறங்கி உள்ளே போனார். ''மாமா! நான் டாக்டரைக் கூட்டி வருகிறேன்.....'' என்று மயிபால் பறந்தான்.

அவன் டாக்டருடன் திரும்பி வந்து பார்த்த போது, இலோத்தமா தன் தோழியுடன் 'லேடீஸ் கிளப்'புக்குச் சென்றிருந்தாள். லோகநாதன் பரிதாபமாக மயிபாலின் முகத்தைப் பார்த்தபடி தம் கையை டாக்டரிடம் நீட்டினார்.

அடுத்த நாள் அதே நேரம்.... அதே காட்சியில் சிறிது மாறுதல். இன்று சிவப்பு காஷ்மீர் சில்க் புடவையுடன் இலோத்தமா பால்கனியிலிருந்து எட்டிப் பார்த்தாள். ''அப்பா! அப்பா! ஒரே தலைவலி பொறுக்க முடிய வில்லை. இன்று வேண்டாமப்பா...'' என்று மிழற்றிவிட்டு மின்னல் போல் கதவினுள் சென்று மறைந்தாள்.

பாரத தேசமா? பரிதாப தேசமா?

பிறருடைய சொத்தைப் பறித்துப் பெரும்பாலோருக்கு அதைப் பங்கு செய்து தந்தால், ஆள் ஒருவனுக்கு மிக அற்பச் சொத்தும் கிடைக்காது. ஆயினும் இந்த உண்மைக் கணக்கு மக்கள் அறிவில் ஏறுவ தில்லை. பொறாமையும் ஆசையும் புத்தியைக் குழப்பி விடுகின்றன. சொத்தைப் பறிக்கும் காரியத்தில் ஈடுபடும் அரசாங்கத்துக்கு, பறித்த சொத்தைப் பகிர்ந்துகொடுக்க உத்தேசம் கிடையாது. இதை மக்கள் அறிய மாட்டார்கள் என்றெல்லாம் மேதாவி பர்க் வெகுகாலத்துக்கு முன்னமேயே விளக்கிச் சொன்னது தற்போது நடை பெறும் அராஜகச் சட்டங்களைப் பற்றியே சொன்னாரோ என்று தோன்றுகிறது!

ஆயினும் எச்சரிக்கையைக் கவனிப்பாரில்லை. ஆடுகள் பலிபீடத்துக்கு மாலை அணிந்து செல்லுவதுபோல் கொள்ளை முறைக்கு ஆதரவு சேர்த்துத் தரப் பணக்காரர்கள் உதவுகிறார்கள்.

தனித் தனியாக விமரிசனம் செய்ய வேண்டியதில்லை. மூலம் நாஸ்திகம். தருமமும் தருமத்தின் மூலமான ஆஸ்திகமும் சிம்மாசனம் ஏற வேண்டும். இல்லாவிடில் பாரத தேசம் பரிதாப தேசமாகும்.

—ராஜாஜி

அடுத்த நாள் மஞ்சள் ஷிபான்.... காரணம் பல்வலி. அடுத்த நாள் பச்சைப் பட்டு... காரணம்... தொண்டை வலி.

ஐந்தாம் நாள் மாலை ஐந்து மணி. இலோத்தமாவின் அறையில் புயல்போல் நுழைந்தான் மஹிபால். அவன் கைநிறைய 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் இருந்தன.

"இன்று என்ன? தலைவலியா, பல் வலியா, இடுப்பு வலியா, வயிற்று வலியா? ஆஸ்ப்ரோ சாப்பிடு. ஒரு நொடியில் பறந்து விடும்" என்று கூறி அவள் கைநிறைய மாத்திரைகளைத் திணித்தான்.

இலோத்தமா சிறிது நேரம் திகைத்து நின்றாள். பிறகு முகம் சிவக்க..... கீழே 'தட தட'வென்று இறங்கி ஓடி வந்து காரின் கதவைத் திறந்து ஏறி அமர்ந்தாள்.

கார் மெதுவாக ஊர்ந்து காம்பவுண்டைத் தாண்டி வெளியில் வந்தது.

"உம்.... இந்தா, இலோ! முதலில் பக்கத்தில் உட்கார்ந்தபடியே ஸ்டியரிங்கைப்பிடிக்கக் கற்றுக் கொண்டால்தான் மற்றவை வரும்" என்று கூறி மஹிபால் இலோவைப் பார்த்துச் சிரித்தான்.

இலோத்தமா வேண்டா வெறுப்பாகத் தன்னிடமிருந்தபடியே கைகளை நீட்டி — ஸ்டியரிங்கைப் பிடித்தாள். கார் பத்தடி முன்னேறி நேராக ஒரு பெரிய மரத்துடன் உறவு கொண்டாட விரைந்தது.

'ஐயையோ!' என்று இலோ கத்த, அவசரமாக மஹிபால் ஸ்டியரிங்கைப் பிடித்துத் திருப்பினான். 'சை.....' என்று கோபத்துடன் கைகளை இழுத்து.... அவன் கைபட்ட இடத்தைத் தன் கைக்குட்டையால் அழுந்தத் துடைத்துக் கொண்டாள் இலோ.

"போதும்.... நானிக்கும் பார்த்துக் கொள்ளலாம்" என்று நகர்ந்து கதவிலருகில் ஒட்டிக் கொண்டாள்.

மஹிபால் அவள் அருகில் இருக்கும் ஆனந்தத்தில் ஒரு மணி நேரம் ஊரைச் சுற்றி விட்டு வீட்டுக்குத் திருப்பினான் வண்டியை.

அடுத்த நாள் இலோ ஸ்டியரிங்கைப் பிடித்து, இருபதடி வண்டி முன்னேறுமுன் அங்கிருந்த குப்பைத் தொட்டிக்கு ஆபத்து!

"ஐயையோ.....!" என்று இலோ கத்த, முன் தினம் போலவே அவன் கையைப் பிடித்து ஸ்டியரிங்கை ஒழுங்காகத் திருப்பி வண்டியை நிறுத்தினான் மஹிபால்.

அடுத்த நாள் மாலை ஐந்தரை மணிக்குக் கார் வீட்டுக் காம்பவுண்டைத் தாண்டும் போது மாலை போஸ்ட்மேன் "மிஸ்டர் மஹி பால்!" என்று ஒரு ரோஜா வர்ணக் கவரைக் காரினுள் நீட்டினான்.

மஹிபால் அதை வாங்கித் திருப்பித் திருப் பிப் பார்த்துவிட்டு, "ஆ...டெல்லி...!" என்று கூவினான். பிறகு அவசரமாகக் காரைப் பின்னால்செலுத்தி, போர்டிகோவில் கொண்டு போய் நிறுத்திவிட்டு, கடிதத்துடன் கீழே இறங்கி உள்ளே ஓடினான்.

பெரியவர் பெருமூச்சுடன் கீழே இறங்கிச் செல்ல, இலோத்தமா மட்டும் ஆத்திரத் துடன் காரினுள் உட்கார்ந்திருந்தாள்

இலோவின் ஆத்திரம் சிறிது அடங்கி, அவள் எழுந்து உள்ளே சென்றபோது மஹி பாலின் அறைக் கதவு தாளிடப்பட்டிருந்தது. இலோ ஏதோ ஆவலில் உந்தப்பட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது மஹிபால் இரண்டு மூன்று தாள்கள் கொண்ட ரோஜா வர்ணக் கடிதத்தைத் தன் உதட்டில் ஒற்றி எடுத்துக் கொண்டிருந்தான்.

இலோ பரபரப்புடன் திரும்பி உள்ளே நடந்தாள். இரவு சாப்பாட்டின்போது மஹி பால் உற்சாகத்துடன் "மாமா! சுசுந்தி கடிதம் எழுதியிருக்கிறாள். இந்தக் கோடைக்குக் காஷ்மீர் போகத் திட்டமாம். பெரிய மாமா வினால் வரமுடியாதாம். நான்தான் அவளை அழைத்துக் கொண்டு போக வேண்டுமாம். நான் எப்பொழுது மாமா கிளம்பட்டும்?" என்றான் துடிப்பாக.

இலோத்தமா அவன் சொல்வதைக் கவனி யாதவள் போல இருந்தாலும், அவள் காதுகள் விஷயத்தைக் கிரகித்துக்கொண்டன.

"ஏண்டா, மஹிபால்! இன்னும் இலோத் தமாவுக்கு ஸ்டீயரிங்கே பிடிக்க வரவில்லை. நீ அவளுக்கு டிரைவிங் கற்றுக் கொடுக்காமல் டில்லிக்குக் கிளம்பினாயோ அப்புறம் நான் தான் கார் ஓட்ட வேண்டிவரும்" என்று கூறித் இலோவின் முகத்தை உற்றுப் பார்த் தார் லோகநாதன்.

இலோவுக்கு ஒரே ஆத்திரம். தன் அறைக் குச் சென்று படுக்கையில் விழுந்த இலோ வுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. ஏன் இந்தத் துக்கம்? யார் மேல் இந்தக் கோபம்? அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.


இலோ தலையணையைத் தூக்கிக் கீழே வீசி எறிந்துவிட்டுப் படுக்கையில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுதாள். எதற்காக இந்த அழுகை?

அஞ்சலி



ஆண்டுகள் பலவானாலும் அன்பின் வலிமை என்றும் குறைந்து விடுவதில்லை. அதற்குப் பதிலாக அன்பின் உறுதி ஆண்டுகள் செல்ல செல்ல அதிகமாகும். டிசம்பர் 13-ந் தேதியுடன் ஸ்ரீமதி **சுந்தரம்மாள்** மறைந்து ஆண்டுகள் ஐந்தாகின்றன. இன்றும் அவரது அன்புக் கணவர் திரு வி. தியாகராஜன் (முன்னாள் 'அபீஷியல் அஸைனி) அவர்களும் அவரது குடும்பத்தினரும் சுந்தரம்மாளின் நல்லியல்புகளையும் பண்பையும் பரிவையும் நினைவு கூராத நாளில்லை. கனிவும், கசிவும் கொண்ட இதயபூர்வமான அவர்களது நினைவு ஸ்ரீமதி சுந்தரம்மாளின் ஆன்மாவுக்குச் சாந்தியளிக்கட்டும்.




LIFEBUOY
for health

சுகந்தி — மகிபால் கடிதப் போக்கு வரத்து இலோவின் மனத்தைக் குடைய ஆரம்பித்த போது...அவளுக்கு ஓர் உண்மை தெரிய வந்தது. போட்டிக்கு ஆள் வந்தபோதுதான் அவளுக்குத் தனக்கு அத்தான் மேலுள்ள ஆசை தெரிய வந்தது. முன்போல் அவன் 'இலோ...இலோ...!' என்று தன்னைச் சுற்றி வரவேண்டும் என்று அவள் மனம் ஏங்க ஆரம்பித்தது.

செநெகிதி தந்த ஒரு நாவலைப் படித்து முடித்த இலோவுக்குத் திடீரென்று ஞானோதயம் உண்டாயிற்று.

"நல்ல காலம்... செநெகிதி தந்த நாவலில் கதாநாயகன் இப்படித்தான் கதாநாயகியின் காதலைச் சம்பாதிக்கிறான். இனிமேல் சுகந்தியிடமிருந்து எவ்வளவு கடிதங்கள் வந்தாலும் வரட்டுமே!" இலோ சிரித்துக் கொண்டாள்.'

'ஐயோ... அசட்டு அத்தானே! அப்போது நான் உங்களைப் புரிந்துகொள்ளவில்லை. இப்பொழுது நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. இப்பொழுது இந்த இலோ உங்களை விரும்ப ஆரம்பித்துவிட்டாள் என்பதை உங்களுக்கு எப்படி உணர்த்துவது?' இந்த எண்ணம் மனத்தில் தோன்றிய துமே அவள் முகம் நாணத்தினால் சிவந்தது.

அன்றிரவு சாப்பாட்டின்போது "மாமா! இன்னும் ஒரு வாரத்தில் நான் டெல்லிக்குப் போகத் தீர்மானித்துவிட்டேன். வருகிற ஞாயிறன்று பிளேனில் டிக்கெட் ரிசர்வேஷன் செய்துவிட்டேன். இலோவுக்கு இந்த ஜன்மத்தில் டிரைவிங் வராது. நீங்கள் நல்ல டிரைவரை ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்" என்று சொல்லி மகிபால் இலோவை உற்றுப் பார்த்தான்.

ஒரு நிமிடம் திடுக்கிட்ட இலோ உடனே சமாளித்துக் கொண்டாள். இதுவும் இவர்கள் திட்டத்தில் ஒரு படியாக இருக்கும்.

சாப்பாடு முடிந்தவுடன் படபடப்புடன் தன் அறைக்குச் சென்று டெலிபோனில் ஏதோ நம்பர்களைச் சுழற்றிச் சுழற்றித் துடி துடிப்புடன் விசாரித்த இலோ, ஞாயிறன்று மகிபால் என்ற பெயரில் டில்லி போகும் எந்த விமானத்துக்கும் டிக்கட் ரிசர்வேஷன் செய்யப்படவில்லை என்ற விஷயம் தெரிந்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அத்தான் ஊர் போவதற்கு நாட்கள் நெருங்க நெருங்க வீட்டில் லோகநாதனும் மகிபாலும் கூடிக் கூடிப் பேசுவது இலோவுக்கு வேடிக்கையாக இருந்தது. தினம் ஒரு ரோஜா வர்ணக் கவர் சுகந்தியிடமிருந்து வந்திருப்பதாக மகிபாலினால் காட்டப்பட்டு, அவன் பாக்கெட்டினுள் அடக்கமாயிற்று.

ஞாயிறன்று காலை. "எங்கே அத்தான்! ஒரு பெட்டிகூடக் காணவில்லை. நீங்கள் ஊருக்குப் புறப்பட வில்லையா.....?" என்று இலோ கிண்டலாகக் கேட்டாள்.

"இதோ.....! இந்தத் தோல் பை ஒன்று தான் நான் விமானத்தில் எடுத்துச் செல்லுகிறேன். என் மற்ற நான்கு பெட்டிகளும், என் நண்பனுடன் ரயிலில் வரும்" என்று மகிபால் கூறியதைக் கேட்டு இலோ கேலியாகச் சிரித்தாள். விமான நிலையம் வரை அவனை விரட்டி, ஏங்க வைத்துப் பிறகு தன்

கல்கி

வெள்ளிவிழா சிறுகதைப் போட்டி

முடிவுத் தேதி மாற்றம்

நாலும் மற்றும் அநேகர்களும் வெவ்வேறு துறைகளில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தும் கதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பவர்கள். அன்றாட ஆபீஸ் வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டுப் பிறகு கிடைக்கும் சிறு அவகாசத்தில் கதை எழுத முனையும் எங்களுக்கு வெள்ளி விழாப் போட்டியின் முடிவுத் தேதி வெகு அண்மையில் வந்து விட்டது என்பதை நினைக்கவே மலைப்பாக உள்ளது. தள்ளிப் போடுவதும் பிறகு பரபரப்படைவதுமான மனித இயல்புகளுக்கு நான் விலக்கல்ல. அத்துடன் இத் தருணத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பு இயக்கமும், அண்டை நாட்டவரோடு யுத்தமும் யாரும் எதிர்பாராதவை. ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வையும் இவை பாதித்தன. இவைகளை யெல்லாம் முன்னிட்டு வெள்ளி விழாப் போட்டி முடிவுத் தேதியைத் தள்ளிப் போட வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

— ஸ்ரீ வேணுகோபாலன்

இதைப்போல் இன்னும் பல எழுத்தாளர்களிடமிருந்து போட்டி முடிவுத் தேதியை ஒத்தி வைக்குமாறு பல கடிதங்கள் வந்துள்ளன. ஆகவே கடைசி முறையாக வெள்ளிவிழாப் போட்டி முடிவுத் தேதியை 28—2—1966க்குத் தள்ளி வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்

வோட்டின் பயன்

அநாதிகாலமாக இந்த நாட்டு மக்கள் அனைவர் மனத்திலும் பதிந்து வேர் ஊன்றி வந்த தருமமானது அழிந்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது நம் முடைய கடமை. பணம் போனாலும் தருமத்தை அழிக்கும்போது அதை உதாசீனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் வீரியமற்ற வாழ்க்கை நமக்கு வேண்டாம். தரும விரோதமான ஒரு கூட்டம் நம்முடைய புனிதம் பண்பாடுகளை நாசம் செய்து வருகிறது என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்டபின் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? 'அவர்கள் எப்படியாவது போகட்டும். என்னைப் பொறுத்த மட்டும் தருமத்துக்கே வோட்டுப் போடுவேன்' என்று ஒவ்வொருவரும் முடிவு செய்து கொள்ள வேண்டும். அறத் துக்கும், ஆன்ம விடுதலைக்கும் உங்கள் வோட்டுரிமை பயன்படட்டும். —ராஜாஜி

மனத்தை வெளியிட வேண்டும் என்று இலோ திட்டமிட்டாள்.

"புறப்படுங்கள், புறப்படுங்கள்! நேரமாகிறது" என்று அவசரப்படுத்திய இலோ எல்லாருக்கும் முன்னால் காரில் அமர்ந்தாள்.

அவர்கள் கிளம்பும் சமயம் மகிபாலுக்குத் தபாலில் ஒரு ரோஜா வர்ணக் கடிதம் வந்தது. மகிபால் முகம் மலர அந்தப் பிரித்துப் பார்த்த போது, லோகநாதன் ஏக்கத்துடன் இலோவின் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் விமான நிலையத்தை அடைந்த போது 'காரவில்' விமானம் டெல்லி புறப் படத் தயாராக நின்று கொண்டிருந்தது. விமான நிலையத்தில் அசாத்தியக் கூட்டம்.

மகிபால் ஒரே துடிப்புடன் காணப்பட்டான். இலோவின் அருகிலேயே நின்று கொண்டிருந்தான். லோகநாதன் கண்களால் ஏதோ ஜாடை காட்டிவிட்டு, அங்கிருந்து நகர்ந்தார்.

இதோ! விமானம் கிளம்பப் போவதாக ஒலிபெருக்கியில் அறிவிப்பு வந்து விட்டது. பிரயாணிகள் கம்பீர நடை நடந்து விமானத்தை நோக்கிச் சென்று உள்ளே ஏற ஆரம்பித்து விட்டனர்.

மகிபால் முகம் சிவக்க, இலோவின் அருகில் நெருங்கி நின்றான். "இலோ....! உன்னிடம்..... ஒன்று.... சொல்ல வேண்டும்...... நானும்.... மாமாவும்......"

அவனுடைய தவிப்பை உணர்ந்து இலோ 'கல கல'வென்று சிரித்தாள். அவனுடைய பரிதாபகரமான முகத்தைப் பார்த்துவிட்டு: "ஐயோ..... அத்தான்! நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்....... இந்த விமானத்தில் நீங்கள் டில்லி போகப் போவதில்லை......" என்றாள்.

"என்ன?.... என்ன இலோ! இதோ, விமானம் புறப்படப் போகிறது. நீ என்ன சொல்லுகிறாய்?"

"உங்கள் பெயரில் 'டிக்கெட்' இன்று 'ரிசர்வ்' செய்யப்படவில்லை என்று தெரிந்து தான் சொல்லுகிறேன்......"

"என்னது? என் பெயரில் 'ரிசர்வ்' செய்யப் பட்டிருப்பதாக யார் சொன்னார்கள்? நம் கம்பெனி பெயரில் அல்லவா ரிசர்வேஷன் செய்யப்பட்டிருந்தது. இங்கு வந்துதான் என் பெயருக்கு டிக்கெட் வாங்கினேன்."

தான் விளையாட்டென்று எண்ணியது வினையாகப் போகிறதா.....? அப்படியென்றால் சுகந்தியின் கடிதங்கள்......? அவள் உள்ளம் ஓலமிட்டது.

"இலோ! நான் என்ன சொல்ல வந்தேன் என்றால்..... நீ உன் பிடிவாதத்தை விட்டு விட்டு.... நான் மாமாவிடம் சிபாரிசு செய்திருக்கும் என் நண்பன் 'மோகனை' மணந்து கொள்ள வேண்டும் என்றுதான்.... கல்யாணம் என்றாலே..... கடுகடுப்பாயென்று நானும், மாமாவும் உன்னிடம் பேசப் பயப் பட்டுக் கொண்டே இவ்வளவு நாட்கள் இருந்து விட்டோம்." இலோவின் முகம் அடைந்துள்ள மாறுதலைப் பார்த்துவிட்டு மகிபால் தன் பேச்சை நிறுத்தினான்.

"என்னப்பா..... மகிபால்! சீக்கிரம் போ.... விமானத்தில் எல்லோரும் ஏறியாகி விட்டது...." சற்றுத் தள்ளித் தம் நண்பரை வழியனுப்பிக் கொண்டிருந்த லோகநாதன் அருகில் வந்து படபடத்தார்.

மகிபால் அவசரமாகத் தோல் பையை எடுத்துத் தன் தோளில் மாட்டிக் கொண்டே, "வருகிறேன் இலோ....! வருகிறேன் மாமா! இலோவிடம் எல்லாம் சொல்லி விட்டேன். இலோ இப்பொழுது ரொம்ப மாறி விட்டாள் மாமா! இனிமேல் நீங்கள் சொன்னால் கேட்பாள்" என்று கூறிக் கொண்டு கைக்குட்டையைப் பாக்கெட்டிலிருந்து உருவி முகத்தைத் துடைத்துக் கொண்டே விமானத்தை நோக்கி ஓடினான்.

கைக்குட்டையை எடுத்த போது உடன் வெளியில் வந்த ரோஜா வர்ணக் கவர் இலோவின் காலடியில் பறந்து வந்து விழுந்தது. சட்டென்று குனிந்து கவரை எடுத்துக் கடிதத்தை வெளியில் இழுத்துப் பிரித்தாள் இலோ.....

"மை டார்லிங் அத்தான்!....." ஆம்! சுகந்தியின் குண்டு குண்டான கையெழுத்தே தான். நிமிர்ந்து பார்த்த போது விமானத்தின் படியில் நின்று கைக்குட்டையை ஆட்டும் மகிபாலின் உருவம் இலோவின் கண்களில் மங்கலாகத் தெரிந்தது.

"உம்..... சுகந்தி அதிருஷ்டசாலி.....!" என்று லோகநாதன் பெருமூச்சுடன் கூறினார்.

கண்களில் துளித்த கண்ணீரைக் கண்டு விட்டபடியே, "ஆமாம், அப்பா....! சுகந்தி மிக மிக அதிர்ஷ்டசாலிதான்......" என்று கூறிய இலோவின் வார்த்தைகள் காரவில் விமானம் செய்த சத்தத்தில் லோகநாதனுக்குக் கேட்கவே இல்லை.



ஊக்கமும் உற்சாகமும் ஒருங்கே பெற
அருந்துங்கள்

ஆல்விடோன்

ALVITONE

ஆல்விடோன் லாபரட்ரீஸ், சென்னை-43


Criterion-AL-752 T



ஏயர்-இந்தியா

பி.ஓ.ஏ.ஸி. மற்றும் கண்டாஸுடன்
சேர்ந்து செயலாற்றுகிறது

JWT-AI-4198



அறிவும் சீலமும் ஐக்கியமானவர்

டி. வி. குண்டப்பா

பல ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜி பொது வாழ்க்கையிலிருந்து ஓராண்டு 'விடுமுறை' எடுத்துக் கொண்டார். தேசத்தின் நிலை குறித்து உணர்ச்சிவசப்படாமல்—அல்லது பற்றில்லாமல் – சிந்தனை செய்வதற்காகவே இவ்வாறு 'விடுமுறை' எடுத்துக் கொண்டதாக அப்போது அவர் விளக்கினார். இப்போதும் அவர் ஏதேனும் ஒரு காரணத்துக்காக, காலம் குறிப்பிடாமல் பொது வாழ்விலிருந்து ஓய்வுகொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனால் நமக்கு ஏற்படக் கூடிய விளைவு என்னவாயிருக்கும் ?

இரு விதமான விளைவுகள் நிச்சயமாக ஏற்படும் என்பது என் கருத்து. முதலாவதாக உலகம் முழுவதிலும் இந்தியாவைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடும்; அதாவது காங்கிரஸின் சிந்தனைப் போக்கைத் தவிர இந்தேச மக்களுக்கு எவ்வித மாறுபட்ட கருத்துமில்லை என்று உலகம் எண்ணும். அல்லது காங்கிரஸுக்கு மாறாக ஏதாவது சுதந்திரக் கருத்து இருந்தாலும் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் நேர்மையைப் பெற்றிருக்கவில்லை என்றோ, பயத்தினால் ஊமையாக்கப் பட்டிருக்கிறது என்றோ வெளி உலகம் நினைக்கும். இம்மாதிரி அனுமானங்களை-எவையேனும் வெளி உலகில் பரவ நாம் அனுமதித்தால் அது ஒருகாலும் நாட்டின்-உண்மை நிலையைப் பிரதிபலிக்காது.

ராஜாஜி பொது வாழ்விலிருந்து விலக நேர்ந்தால் ஏற்படக் கூடிய இரண்டாவது விளைவு: ஒரே அரசியல் கொள்கையின் கதியில் தான் செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கடந்து செயலாற்றும் மனத் திண்மையை நாடு இழந்து பலவீனமுறும். ஏனெனில், இன்று ஒரு குறிப்பிட்ட கொள்கையில் மட்டும் நாட்டின் அரசியல் அறிவு முற்றிலும் பிடிப்புக் கொண்டுவிடவில்லை என்பதற்கு முக்கியமான காரணம், அகில உலக அந்தஸ்து பெற்ற ராஜாஜி மாற்று வழியில் தலைமை தாங்கி நடத்துவதுதான். அவருடைய குரலை உலகின் எல்லா மூலைகளும் கேட்டுக் குறித்துக்கொள்கின்றன. இதனாலேயே ராஜாஜியின் குரலானது இந்திய சர்க்காரின் கவனத்தைப் பெற வேண்டிய பெரும் சக்தியாக உள்ளது.

கோகலே தமது ஜீவிய காலத்தில் தனியொரு மனிதரே ஓர் எதிர்க் கட்சியாக இருக்க முடியும் என்று காட்டினார். ராஜாஜியும் இன்று அதே போல் ஏகாங்கி – எதிர்க் கட்சியாக இருக்கிறார். இவ்வாறு கூறுவதால் சுதந்திரக் கட்சியின் மற்றத் துணைவர்களைக் குறைத்துப் பேசுவதாக ஒரு போதும் எண்ணிவிடக் கூடாது. ராஜாஜியே அவர்களிலெல்லாம் முதிர்ந்தவர்; அவர்களுக்கு வழி தேடி அமைத்துத் தருபவரும், அவர்களுடைய எதிர்ப்பு என்கிற ஈட்டியின் நுண்ணிய முனையாக இருப்பவரும் அவரே என்பதால் இவ்வாறு கூறினேன். மேலும், சுதந்திரக் கட்சி தோன்றுவதற்கு முன்பிருந்தே அவர் எதிர்ப்பாளராகத் தமது அரசியல் வாழ்வைத் தொடங்கி விட்டார். பொதுவாக எல்லா அலுவல்களிலிருந்தும் ஓய்வு பெற விரும்புகிற வயோதிகப் பருவத்தில் அவர் இந்தப் பணியை ஏற்றார். பதவி, அதிகாரம் இவற்றை யெல்லாம் பல உயர் மட்டங்களில் நீண்ட காலம் அநுபவித்துவிட்ட அவர் இவற்றில் சிறிதும் ஈடுபாடில்லாத முதுமையில் எதிர்ப்புப் பணியைத் தொடங்கினார். கடமையைப் புரிய அறைகூவல் விடுக்கும் அந்தராத்மாவின் குரலுக்கு அவர் தந்த நிறைவான உருவமே சுதந்திரக் கட்சி.

ராஜாஜி எந்தச் சிரேஷ்டர்களின் கணத்தைச் சேர்ந்தவரோ அதில் வந்தனைக்குரிய மற்றொருவர் ஸோக்ரதர். 'அறிவு என்பதே

சீலம்" என்று ஸோக்ரதர் கூறியதாகச் சொல்வதுண்டு. இங்கு 'அறிவு' என்பது பற்பல விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது மட்டுமன்று. அவ்விஷயங்களில் இதய உணர்வைச் செலுத்தி உள்ளவாறு புரிந்து கொள்வதே 'அறிவு' எனப்படுகிறது. அறிவென்பது ஒரு விஷயத்தின் வெளியமைப்பைக் குறிப்பது மட்டுமல்ல. நீதி மன்றத்தில் 'இவர் இன்னார்' என்று ஸ்தூலமாகச் சாட்சி சொல்வது போல், தகவல்களை வெளிப்படக் காட்டிக் கொடுப்பது மட்டும் அறிவாகாது. விஷயங்களின் உள்ளுக்குள் பிரவேசித்து, அவற்றைக் குறித்துத் தனது அந்தராத்மாவின் ஆணைகளைத் தெளிந்து பிரயோகிப்பதே அறிவு. அந்தராத்மா ஆணையிட்டபின், ஒரு விஷயத்தைக் குறித்து ஒருவர் எடுக்கும் நடவடிக்கையால் என்ன விளைவு நேரிடும் என்பதை அவர் பொருட்படுத்தவே மாட்டார். ஆனால் விஷயங்களைக் குறித்துச் சுயச்சார்பில்லாத அந்தராத்மாவின் ஆணையைத்தான் கேட்கிறோம் என்பதையும், மறைந்துள்ள நமது சுயச் சார்புள்ள பட்சபாதங்களின் குரலைக் கேட்டு அதையே அந்தராத்மாவின் ஆணையாகத் தவறாக எடுத்துக் கொண்டுவிடவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வது அவசியம். இதுதான் உணர்ச்சிவசப்படாத சிந்தனை என்பது. இவ்வாறு தனது சுயம்பிரகாசத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் அந்தராத்மா, அதற்குரியவரைக் காரியத்தில் நிச்சயமாகத் தூண்டிவிடும். உள்நோக்கு என்கிற அறிவு குணசீலமாகக் காரியத்தில் பரிணமிக்கும் இந்நிலையே ஸோக்ரதர் கண்ட முடிவின் சாரம்.

அந்தராத்மா என்பது தானே இயங்கும் ஓர் இயந்திரம் என்று கருதுவது பொதுவாக எல்லோரும் கொண்டுள்ள ஒரு தவறான எண்ணம். விஷயஞானமுள்ள சிந்தனையும், உயிரினங்களிடம் அனுதாபம் காட்டும் உந்துதலும் துணை புரியாமலே அந்தராத்மா தானாகச் செயல்படும் என்று கருதுவது சரியல்ல. அது ஒரு நீதிபதி போன்றது. இரு தரப்பிலுள்ள வழக்கறிஞர்கள் இரு வேறு சார்புடைய எல்லா விஷயங்களையும் கூறி விவாதித்த பின்புதான் அவற்றின் மீது நீதிபதி உண்மையாக நீதி வழங்க முடியும். அந்தராத்மாவும் அதே நிலையில் உள்ளது. நுண்ணிய புத்தி சக்தியின் உதவியை ஒரு புறமும், நன்மை புரிய வேண்டும் என்ற நிரந்தரமான இதய தாபத்தின் உதவியை மறுபுறமும் எதிர்பார்க்கும் நீதிபதியே அந்தராத்மா. திரியின் அளவையும், தைலத்தின் தன்மையையும் பொறுத்துத் தீபம் பிரகாசிப்பது போல் புத்தி — இதய தாபம் இரண்டையும் பொறுத்தே அந்தராத்ம தீபத்தின் பிரகாசம் அமைகிறது. மற்றெல்லாவற்றையும்விட, இவ்வாறு அந்தராத்ம ஒளியைக் கண்டதாலேயே ராஜாஜி இணையற்ற ஒருவராக நிற்கிறார். புத்தியின் அசாதாரண சக்தியும், வாழ்வின் உண்மையான நலன்களைக் குறித்த தருமத்தில் தளராத இதய நாட்டமும் அவரிடம் ஒருங்கிணைந்திருக்கின்றன. இதனாலேயே அந்தராத்மாவின் ஆணைக் குரலை அவரால் தட்டி எழுப்ப முடிகிறது. அந்தராத்மாவின் ஆணை மீது பிறக்கும் திட நிச்சயத்தைப் பெற்ற ஒருவர் செயலில் இறங்கித்தான் தீருவார். இங்குதான் அறிவு என்பது சீலமாகி விடுகிறது.

எது நல்லது என்பது குறித்துப் பகுத்தறிவுள்ள அனைவருக்கும் மங்கலாகவேனும் ஒரு கருத்து இருக்கும். ஆனால் அந்தக் கருத்து மட்டும் ஒருவரைக் காரியத்தில் ஈடுபடுத்தப் போதுமானதாகாது. ஆதர்ச நன்மையை நமது மக்களின் பிரத்தியட்ச வாழ்வில் ஏற்படுத்த வேண்டுமாயின், பொது உண்மைகளிலிருந்து தனித் தன்மைகளுக்கு நமது ஈடுபாட்டைத் திருப்ப வேண்டும்; சூக்ஷமத்திலிருந்து ஸ்தூலத்துக்குச் செல்லுதல் வேண்டும். பொதுவாக எல்லோருக்கும் சுபிட்சம் என்கிற சர்வோதயத்திலிருந்து, விவசாயிகள் என்ற தனிப்பட்ட வர்க்கத்தினருக்குச் சுபிட்சம் காணும் 'கிருஷிகோதய' இலட்சியம், தொழிலாளிகள் என்ற தனிப்பட்ட வர்க்கத்தினருக்குச் சுபிட்சம் காணும் 'யந்திரோதய' இலட்சியம் இவற்றில் ஈடுபாட்டைச் செலுத்த வேண்டும். ஆனால் நீண்ட காலச் சித்தாந்த ரீதியில் பார்த்தாலன்றி, இவ்விரு வர்க்கத்தினரின் நலன்கள் ஒன்றுக்கொன்று முற்றிலும் ஒவ்வியதாக இருக்காது. இதே போல் விவசாயத்திலேயே உரிமையாளர் — நிலமற்ற உழைப்பாளர் இருவரின் நலன்கள் ஒன்றுக்கொன்று ஒவ்வாதிருக்கும். இவ்வாறு மாறுபட்ட எல்லா வர்க்கத்தினரின் நலன்களையும் பேணி அவர்களிடையே உள்ள தொடர்பு நியாயமான முறையில் அமைய வேண்டுமாயின் ஒவ்வொரு சாராருமே தமது உரிமையில் சிறிதைத் தியாகம் செய்யத்தான் வேண்டும். யார் எந்த அளவுக்குத் தனது சுயநலனைத் தியாகம் செய்யலாம் என்பது அந்தந்தத் துறையின் தனிப்பட்ட சூழ்நிலையை ஒட்டியே நிர்ணயம் செய்ய வேண்டிய விஷயம். இதுதான் சமூகத்துக்குப் பொதுவாக நன்மை ஏற்படுத்துவதில் உள்ள சிரமங்களுக்கு மூல காரணம். தெளிவில்லாமலும் பொதுப்படையாகவும் சமூக நலன் என்பதைப் பற்றி யாரும் கொள்கை வகுத்துவிடலாம். இந்தக் கொள்கை அலுத்துப்போன சொற்றொடராகத்தானிருக்கும். பல வர்க்கத்தின் நலன்களும் பழுதுறாமல் அவற்றை இசைத்துப் பொதுவாகச் சமூகம் முழுவதன் நலனுக்கும் உகந்தபடி அதற்குச் செயலுருவம் தரும் தகுதி சிலருக்கே உரியது. இங்குதான் அரசியல் தலைமை தனது உண்மைச் சக்தியை வெளிப்படுத்துகிறது. இவ்விஷயத்திலேயே நமக்கு ராஜாஜியின் வழித்துணை தேவைப்படுகிறது.

ஒரு பிரச்னையை உள்ளபடியும் பூரணமாகவும் புரிந்து கொண்டாலே போதும், அதைத் தீர்க்கும் வழியும் தெரிந்து விடும். ஒரு முறுக்குக் கயிற்றின் இழைகள் இன்னின்ன என்று கண்டுபிடிக்கும் திறனே அதிலுள்ள முடிச்சுக்களையும், முறுக்கல்களையும் அவிழ்ப்பதற்குரிய வழியையும் காட்டிவிடுமல்லவா? இவ்வாறு பிரச்னையை நோக்கும்போதே தீர்வும் காண்பவர் ராஜாஜி. இதன் மூலம் தான் பொது நலனின் முன்னேற்றத்துக்கு அவர் பேருதவி புரிந்திருக்கிறார். ஒரு பிரச்னை



அப்பாவின் சூட்டுகள்
டிராவுசர்கள்...என்றாலே
எனக்கு அதிகப் பிரியம்
TERENE
Castle Mills
AVAILABLE IN BOMBAY FROM
CASTLE MILLS' RETAIL SHOP
23 B, Sir P.M. Road
Beauforts Vir Nariman Road
Hall Mark Eros Cinema - Churchgate

நான்கு சகடைகளும் ஒரு பெட்டியும் கொண்டதல்ல

இக்காலத்திய நவீன மோட்டார் வாகனம் மிகவும் சிக்கலானதும் நுட்பமான பல உறுப்புகளாலான ஓர் யந்திர சாதனம். சாதாரண ஓர் மோட்டார் 4000 அல்லது 5000 உறுப்புக்களைக் கொண்டது. இவற்றில் பல நுட்பம் மிகுந்தவை. மிகவும் நுண்ணிய பொறியியல் திறமையுடன் நிர்ணய அளவுகளுக்குச் சிறிதும் மாறுபடாது செய்யப்பட்டவை. கேவலம் நான்கு சகடைகளும் ஒரு பெட்டியை மட்டும் கொண்டதல்ல.

ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பெனி இந்தியாவில் மோட்டார் உற்பத்தியில் வழிகாட்டியாக இருப்பவர்கள்- கடந்த பத்தாண்டுகளில் மட்டும், லாண்ட்மாஸ்டர் ஹிந்துஸ்தான் அம்பாஸடர் மார்க் II ஆகிய மூன்று ரக மோட்டார்களைத் தயாரித்தளித்திருப்பதுடன் இரண்டு ரக என்ஜின்களையும் உருவாக்கியிருக்கிறோம். இவை சக்தி மிகுந்த உழைப்புக்கும், எரிபொருள் உபயோகத்தில் சிக்கனத்துக்கும் புகழ் பெற்றவை. சென்ற ஆண்டில் மட்டும் நாட்டில் மொத்த உற்பத்தியான 24,000 மோட்டார்களில் 16,000 மோட்டார்கள் எங்கள் தொழிற்சாலையில் செய்யப்பட்டவை. இந்த சாதனை சாமானியமா என்பதை எண்ணிப்பாருங்கள்.

நமது நாட்டைச் சக்கரங்களின் மீது பொருத்தி செலுத்தவே நாங்கள் விரும்புகிறோம். எங்களால் ஆனதையும் செய்கிறோம்- இது ஒரு பெரும் பணி. முதிர்ச்சி மிகுந்த பொறியியல் திறமையும் தொழில் நுட்பமும் இதற்கு பெருமளவில் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்ய முழு மூச்சுடன் பாடுபடுகிறோம்.



ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், கல்கத்தா

இந்தியா முழுவதும் விற்பனையாளர்கள் உள்ளனர்

யின் அம்சங்களை அடி ஆழம்வரையில் நுணுகிப் பரிசீலிப்பது. இந்த அம்சங்கள் ஒவ்வொன்றுள்ளும் அடங்கியுள்ள உட் சக்திகளை இசைத்துப் பார்ப்பது. இதன் மீது எத்தகைய தீர்வு சாத்தியமானது என்பதைக் கண்டு அத் தீர்வு எப்படி அமைய வேண்டும், எவ்வளவில் அமுலாக வேண்டும் என நிர்ணயிப்பது — இம்மூன்றுமே தலைவனின் முப்பணிகள். தலைமை தாங்குபவர்க்குரிய இந்த முப்பணிகளில் ராஜாஜியின் அறிவு ஏனைய பெரும்பாலோரின் அறிவைவிட விரைவாகச் செல்கிறது; தீர்க்கமாக நோக்குகிறது. இத்திறனில் அவரைக் காட்டிலும் பின்தங்கியவர்கள் இது காரணமாகவே அவரை ஏற்றுக் கொள்வதில் மந்தமாக இருக்கின்றனர். நல்லெண்ணம் கொண்ட சிலர் கூட அவரைத் தப்பாகப் புரிந்து கொள்வதற்கும் இதுவே காரணமாகும். ஆனால் இவையொன்றும் அவரை அவரது மார்க்கத்தினின்று பிறழச் செய்யாது. 'சத்தியம்' என்கிற பெயரே அது உள்ளுறை அழியாத்தன்மை பெற்றது என்பதைக் குறிப்பிடுவதாகும். எனவே சத்திய மார்க்கத்தைக் கண்டவர் அதை விட்டு விலகமாட்டார். அவர் கூறுவதை ஏற்க இன்று மறுப்பவர்கள், 'இதோ ஒரு மனிதர் உள்ளபடி கண்டு அதனைத் தைரியத்துடன் முன்பே கூறினாரே' என்று சொல்லப் போகிற காலம் தொலைவில் இல்லை.

சிந்தனைத் தெளிவும், சீரிய நடத்தையும் பொது வாழ்வுக்குப் பொன்னே போன்றவை. இவற்றைக் குறைவறப் பெற்ற ராஜாஜி பொது வாழ்வில் ஈடுபடாமல், விதி அவரை வேறெதேனும் துறைக்கு அழைத்திருந்தால் எப்படி இருக்கும் என்று நான் கற்பனை செய்து பார்ப்பதுண்டு. பேராசிரியர் டேவிட்டுக்குப் பதிலாக வித்வான் நக்கெறல்லி திருமலாசாரியாரிடம் அவர் மாணவராயிருந்திருந்தால் இன்று நியாய சாஸ்திரம் என்ற நதித்து மத தரிசனத்தில் நிபுணராகி விருப்பார். சட்டப் படிப்புக்குச் செல்லாமல் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் அவர் சேர்ந்திருப்பின் ஷேக்ஸ்பியர், தாக்கரே ஆகியவர்களை விளக்குவதில் விற்பன்னராகப் புகழிடம் பெற்றிருப்பார். வாக்கின் நூதனமான நயங்களை நுணுக்கமாக உணர்வதென்பதே நுட்பமான சிந்தனையோடு இணைந்து ஒன்றாகும். நமது தேச மக்களின் செவிப் புலனைத் தேடும் பேச்சாளர் (—எழுத்தாளர்) கூட்டத்தில் ராஜாஜி சிறப்பாகத் தனியிடம் பெற்றிருப்பது இவ்வாறு நுட்பமான சிந்தனையையும் அதற்குரிய நுட்பமான சொல்லையும் அவர் தக்கபடி இணைப்பதாலேயே ஆகும். எத்தனை எத்தனையோ பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் இருக்கிறார்கள்; ராஜாஜியும் இருக்கிறார். என்ன வித்தியாசம்? பெங்களூரில் எத்தனையோ குதிரை வண்டி லாயங்கள் இருக்கத்தான் செய்கின்றன; ஆனால் குதிரைப் பந்தய மைதானம் ஒன்று தானே இருக்கிறது?

சமய உணர்வைச் சமூக நலனுக்கு மணம் செய்விப்பதே உண்மையான அரசியல். உயிர்களிடத்துள்ள அன்புதான் சமயம்; அவற்றின் பௌதிக அபிவிருத்தி சமூக நலன். உயிர்களிடம் உள்ள அன்பையும், அவற்றின் பௌதிகமான வளர்ச்சியில் கொண்டுள்ள நாட்டத்தையும் இணைப்பதே அரசியல். இத்தாலியப் பெரியார் மாஜினியிடம் சமய நம்பிக்கையே தேசப் பற்றாகக் கொழுந்து விட்டெரிந்தது. பிரிட்டனில் க்ளாட்ஸ்டனும், அமெரிக்காவில் லிங்கனும் சமய உணர்வைப் பூர்த்தி செய்து கொள்வதற்கே தேசப் பணி புரிந்தனர். உடன் வாழும் மாந்தரின் வாழ்க்கையில் சமய சத்தியத்தை நுகர வேண்டுமென்ற நோக்கத்திலேயே பொருளாதார அறிஞர் டோயின்பீ லண்டனில் கிழக்குக் கோடி (East End)யில் ஏழைகளிடையே வாழ முற்பட்டார். நமது தேசத்தில் யுக யுகமாக இது ஒரு மரபாக வந்திருக்கிறது. முனிவர்கள் அரசனுக்கு அறிவுரை கூறி அறத்தை வளர்த்தது இந்த உணர்வு காரணமாகத்தான். சமீப காலத்தில் கோகலேயும், காந்திஜியும் இந்த மரபுக்குப் புத்துயிர் தந்தனர். இன்று ராஜாஜி இதே மரபை நீடித்து வருகிறார். அரசியல் என்பது வயிற்றுப் பாட்டுக்காக நடத்துகிற சண்டையாக இருக்கக்கூடாதெனில், ஜனநாயகம் என்பது எளிதில் ஏமாறக்கூடிய கபடமற்ற மக்களின் உணவைப் பறிப்பதற்காகச் சில கோஷ்டிகள் இடும் பூசலாக இருக்கக் கூடாதெனில், உண்மையான அரசியலும், உண்மையான ஜனநாயகமும் ஏற்பட வேண்டுமெனில் நாம் எங்கு நம்பிக்கை வைக்க வேண்டும்? அசாமானியமான புத்தி சக்தி படைத்த ராஜாஜி போன்ற ஒரு தீரர் நமது சமூகத்துக்கு எவ்வளவு முக்கியமானவர் என்பதை நிரந்தரமான விழிப்புடன் இதயபூர்வமாக உணர்வதில் தான் நம்பிக்கை இருக்கிறது.

ஆண்டவன் அவரை என்றென்றும் நம்மிடையில் வைத்துக் காப்பாராக!

நாஸ்திக ஆட்சி

கம்யூனிஸ சமுதாய முறையே லாபகரமானது என்று நம்பும் காங்கிரஸ் கட்சி ராஜாங்க பலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு மக்கள் அனைவரையும் மாக்களாக எண்ணி, தான் வகுத்ததே வாய்க்கால் என்று நாட்டில் சர்வாதிகார அகங்கார ஆட்சி நடத்தி வருகிறது. இந்த ஆட்சிக்கு வேரே நாஸ்திகம். அவர்களுடைய கணக்கிலும் திட்டங்களிலும் ஆண்டவன் இல்லை. கடனும், வரியும், விலைவாசிகளும் தரும் பணமே அவர்களுடைய ஈசுவரன். வேரிலிருந்து முளைத்து வளர்ந்த மரமும் அதன் பூவும் பழமும் வேரின் குணத்துக்கு வேறுபடாது. மூலத்தைப் பொறுத்துத்தான் இருக்கும் பலனும். நாஸ்திக வேரிலிருந்து நீதியும் நியாயமும் உண்டாகா. நீதியைப் புறக்கணித்துச் சட்டசபையில் சட்டங்கள் செய்யப்படுகின்றன. நியாயத்தைப் புறக்கணித்து நிர்வாகம் நடைபெறுகிறது. துவேஷம், பொறாமை, லோபம் இந்த அடிப்படையில் சர்வாதிகாரம் நடைபெறுகிறது. — ராஜாஜி


நளினமான மற்றும் சிரமமின்றி உபயோ
கிக்கத்தக்க பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள்
பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
BB.G. 82 TAM.

அத்தியாயம் 8

வைராக்கியம் விளைந்தது

பொதுவாக எல்லா ஆண்களுக்குமே இருக்கக் கூடிய ஒரு பலவீனம் தங்கப்பனிடமும் குடி கொண்டிருந்தது. கொஞ்சம் தாராளமாக ஒரு பெண் தன்னிடம் நெருங்கிப் பழகி, அன்புடன் நடந்து கொண்டு தங்கு தடையின்றி அளவளாவ முற்பட்டதும் அவன், அவள் தன்மீது காதல் கொண்டிருக்கிறாள் என்று நம்ப ஆரம்பித்தான். அதை வெளிப்படையாகக் கூற முடியாமல் தான் மிருணாளினி இவ்விதமெல்லாம் தன்னிடம் நெளிந்து குழைந்து இழைகிறாள் என்று கருதத் தொடங்கினான். 'போலீஸில் என்னைப் பிடித்துக்-கொடுக்காததற்கு வேறு ஏதேனும் காரணம் இருக்குமோ என்று நினைத்தேன்!' இப்படி மிருணாளினி அவனிடம் பேசியதும் அவள் காதலைத்தான் குறிப்பிடுகிறாள் என்று கற்பனை செய்து கொண்டு பெருமிதமுறவும் செய்தான். ஆண்மை மிக்க தன் அழகிலும் அறிவாற்றலிலும் அவள் தன் மனத்தைப் பறி கொடுத்து விட்டாள் என்பதாக ஓரளவு கர்வத்துடனேயே கூட எண்ணிப் பார்த்து அதன் இனிமையையும் சுவைக்க முற்பட்டான்.

'என்ன காரண' மென்று பதிலுக்கு அவளையே அவன் கேட்டபோது அடுத்த விநாடி அவள் தன்னிடம் மனம் திறந்து பேசி அவள் உள்ளத்தைத் தன்னிடம் சரண் புகுமாறு செய்து விடுவாள் என்று எதிர் பார்த்தான்.

'அதை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?' என்று கேட்டு அவன் ஆவலை வளர்த்தாள் அவள். ஆனால் கடைசியில் 'கம்யூனிஸ சித்தாந்தத்தை உங்கள் மனம் ஏற்றுக் கொண்டு விட்டதாகக் கூற இவ்வளவு தூரம் யோசிப்பானேன்?' என்று அவள் வினவியபோது தான் உலுக்கி எழுப்பப்பட்டவனாகத் தன் நிலைக்கு மீண்டான்.

மிருணாளினியைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டதற்காகத் தன்னைத்தானே நொந்து கொண்ட அதே சமயத்தில் அவளிடம் மதிப்பு முன்னைக் காட்டிலும் பன்மடங்காகப் பெருகியது அவனுக்கு. அவள் தான் தன்னுடைய ஒரே குறிக்கோளில், லட்சியத்தில் எத்துணை உறுதியாக இருக்கிறாள்? அந்நிலையிலிருந்து அவளை அசைக்க யாராலும் எதாலும் முடியாது! செயலையும் சிந்தனையையும் அவள் இவ்விதம் ஒருமுகப்படுத்தியிருப்பது எப்பேர்ப்பட்ட ஓர் அரிய சாதனை! முதலில் உண்டான அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தொடர்ந்து அவனுக்கு ஆச்சர்யமும் அவளிடம் மரியாதையும் உருவாயின. தன்னுடைய எண்ணத்திலே உயர்ந்து உயர்ந்து விசுவரூபமெடுத்த மிருணாளினியை நினைத்துக் கொண்டே உறங்கிப் போனான் தங்கப்பன்.

மறு நாள் காலை வழக்கம் போல் அவன் தோளைச் செல்லத்தின் தளிர்க் கரங்கள் லேசாக அழுத்தி அசைத்து எழுப்பவில்லை. மணம் மிகுந்த காப்பியும் விழித்தெழுந்த அவனை வரவேற்கவில்லை. மாறாக, ''மிஸ்டர்! மிஸ்டர் தங்கப்பன்!'' என்ற அதிகார ஆணைக் குரல்தான் அவனைத் தூக்கிவாரிப் போட எழுந்து உட்காரச் செய்தது. இன்ஸ்பெக்டர் ஒருவரும் இரண்டு கான்ஸ்டேபிள்களும் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். வலக்கரத்திலிருந்த கைத்தடியை நாடக பாணியில் இடக்கர உள்ளங் கையில் தட்டிக் கொண்டே அவர், ''மிஸ்டர் தங்கப்பன்! உங்கள் வீட்டைச் சோதனை போட வேண்டும். 'ஸர்ச் வாரண்ட்' இருக்கிறதா என்று கேட்டு மிரட்டப் பார்க்காதீங்க. ஏனென்றால் அது எங்களிடம் இருக்கிறது!'' என்று கூறிவிட்டுப் போலீஸ்காரர்களைத் திரும்பிப் பார்த்துத் தலையசைத்தார்.



'எங்கே, வாரண்டைக் காட்டுங்க' என்று தங்கப்பனுக்குக் கேட்கத் தோன்றவில்லை. அவன் பிரமை பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்தான்.

போலீஸார் இங்குமங்குமாக அவன் அறையைக் குடைந்து தேடினார்கள். இன்ஸ்பெக்டரும் சுற்றுமுற்றும் நோட்டம் பார்த்தார். மேஜையின் மீதிருந்த சில புத்தகங்களைப் புரட்டினார்.

தங்கப்பனுக்கு வயிற்றைக் கலக்கியது. 'ஐயோ! மிருணாளினிக்கு ஆபத்து ஏதும் நேராதிருக்க வேண்டுமே' என்று மிகுந்த கவலையுற்றான். 'உங்களைப் போலீஸில் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று எனக்கு இப்போது தோன்றுவதாகச் சொன்னால் நீங்கள் என்ன செய்வீர்கள்?' என்று முதல் நாள் மாலைதான் அவளைத் தான் கேட்டிருந்தது அவனுக்குச் சிவப்புத் தலைப்பாகைகளைக் கண்ட மறு கணமே நினைவுக்கு வந்திருந்தது. நல்ல வேளையாக இந்தப் புத்தகங்கள் எதிலும் அவள் பெயர் எழுதப்பட்டிருக்கவில்லை!

''ஏன் ஸார்? இந்தப் புத்தகங்களெல்லாம் உங்களுடையவைதானா?'' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'' ஆமாம் ; என்னுடையவையேதான் '' என்றான் தங்கப்பன் அலட்சியமாகப் பேசுவது போல் நடித்து.

தம்மிடம் வந்து 'சல்யூட்' அடித்து நின்ற போலீஸாரிடம், ''கீழே போய்த் தேடுங்க'' என்று உத்தரவு போட்டார் இன்ஸ்பெக்டர். ''கலாட்டா ஒன்றும் செய்யப்படாது ; பெண்கள் காபரா அடைஞ்சுடப் போறாங்க '' என்றும் கூறி அனுப்பினார்.

பின்னர், தங்கப்பனின் மேஜை மேல் ஒரு துடையை மட்டும் தூக்கிப் போட்டு உட்கார்ந்து கொண்டார். கைத்தடியைச் செங்குத்தாக இருக்குமாறு மேஜை மீது தமது இரு கால்களுக்கும் இடையில் ஊன்றினார். கரங்கள் இரண்டையும் மடக்கி ஒன்றன் மீது ஒன்றாகத் தடியின் மேல் வைத்தார். அப்புறம் அவற்றின் மேல் தமது முகவாயையும் பதித்தார். தங்கப்பனைக் கூர்ந்து நோக்கினார் சற்று நேரம். சட்டென்று, ''எனக்கு அந்தப் பெண்ணோட விலாசம் வேண்டும்'' என்றார்.

கட்டிலில் அமர்ந்திருந்த தங்கப்பன், ஒரு துள்ளலுடன் முதுகை நிமிர்த்தி அவரைக் கலவரத்துடன் ஏறிட்டுப் பார்த்தான். அடுத்த கணம்தான், தான் அப்படி அதிர்ச்சியுற்றது போல் காண்பித்துக் கொண்டதே தவறு என்று அவனுக்குப் புரிந்தது. இன்ஸ்பெக்டர் புன்னகை செய்தார்.

'எந்தப் பெண்? யாரைச் சொல்கிறீர்கள்?' என்று இனி ஒன்றும் தெரியாதது போல் மழுப்பிப் பயனில்லை என்று உணர்ந்தான் தங்கப்பன். உண்மையைக் கூறிவிட வேண்டியதுதான். ஒரு பெருமூச்சுடன் அவன் எழுந்தான்.

இன்ஸ்பெக்டரை நேருக்கு நேராகப் பாராமல் வேறுபுறம் திரும்பி ஜன்னல்வழியே வானில் மிதக்கும் மேகக் கூட்டங்களை நோக்கியபடி பேசினான். மிருணாளினியைப் பற்றித் தனக்குத் தெரிந்த ஒருசில விவரங்களைத் தன் வாயாலேயே போலீஸாரிடம் கூற





வேண்டியிருக்கிறதே என்ற விசனத்திலும் கண்களில் நீர் ததும்பி நிற்கத் தழுதழுத்த குரலில் கூறினான்.

''இன்ஸ்பெக்டர் ஸார்! உண்மை இதுதான். மிருணாளினியும் நானும் தூய்மையான நட்புறவு கொண்டு பழகி வந்திருக்கிறோம். அவன் ஒரு கம்யூனிஸ்ட். அவனும் நானும் விளையாட்டாகத் தினம் மாலை நேரங்களில் அரசியல் தர்க்கங்களில் ஈடுபடுவதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தோம். பல மாதங்களாகவே இங்கே சந்தித்துப் பேசி வருகிறோம். ஆனால்..... இதை நீங்க நம்பினால் நம்புங்க; நம்பாவிட்டால் போங்க. அவன் விலாசம் எனக்குத் தெரியாது. முதன் முதலில் பொன்னகரத்தில் அவனை நான் சந்திச்சேன். இப்போ அவன் எங்கே தங்கியிருக்கிறானோ?''

''மிஸ்டர் தங்கப்பன்! நான் இப்போது சொல்லப் போவது உங்களுக்கு அதிசயமாகத் தோன்றலாம்! ஆனால் நான் உங்களை முழுமையாக நம்புகிறேன்! ஏனென்றால், கம்யூனிஸ்டுகள் எவ்வளவு சாமர்த்தியமாகச் செயல்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும்! ஆனால் ஒன்று! அவன் மறுபடியும் இங்கே வந்தால்.....'' இன்ஸ்பெக்டர் தமது கைத்தடியால் டெலிபோனைக் கட்டிக் காண்பித்தார். ''அவனை ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இங்கேயே பிடித்து வைத்துக் கொள்ளுங்க. அவனுக்குத் தெரியாதவாறு எங்களுக்குத் தகவல் கொடுங்க; சரிதானு ?''

தங்கப்பன் மனமின்றி மிக மிக இலேசாகத் தலையசைத்தான், அவர் எப்படியோ அங்கிருந்து போய்ச் சேர்ந்தால் போதும் என்பதற்காக.

அறையின் நிலைப்படியைச் சென்றடைந்த அவர் நின்று திரும்பினார். ''ஏன் ஸார்? நீங்கதானே 'ஆனரபிள் மினிஸ்டர்'ருக்கு விரோதமா தேர்தல் சமயத்திலே தீவிரமா வேலை செய்தது?'' என்று கேட்டார்.

தங்கப்பனுக்குக் குபுக்கென்று கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ''ஏன், அதுகூடத் தவறு என்று கூறி என்னை 'புக்' பண்ணப் போறீங்களா? இங்கே, நம் நாட்டில் இன்னமும் ஜனநாயகம் நடப்பதாகத் தானே சொல்லிக்கிடுறாங்க?''

இன்ஸ்பெக்டர் அமைதி இழக்காமல் சிரித்தார். ''அதைக் குற்றமென்று நான் சொல்லவில்லை ஸார்! அதற்காக உங்க மீது நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவும் முடியாது! ஆனால் தேசத் துரோகமான காரியங்கள் எதிலேனும் நீங்க ஈடுபடுவதாக இலேசான சந்தேகம் எங்களுக்குத் தோன்றினால் போதும்.....'' என்று கூறியவாறு தமது கால்சராய்ப் பையிலிருந்து கைவிலங்கினை ஓரளவு வெளியே தெரியுமாறு உருவி எடுத்துக் காட்டிவிட்டு மறுபடியும் அதைஉள்ளேயே திணித்துக்

கொண்டார். ''நீங்க படிச்சவங்க. உங்களுக்கு ரொம்ப சொல்லணுமென்கிறதில்லே. நாங்க உங்களை 'வாட்ச்' பண்ணிக்கிட்டேதான் இருப்போம்'' என்று கூறி விட்டு மாடிப் படிகளில் இறங்கிச் சென்றார்.

அவர் என்ன சொல்கிறார் என்பது தங்கப்பனுக்கு நன்றாக விளங்கியது. ஏதாவது ஒரு சாக்குப் போக்கு, ஒரு சிறு சாட்சியம் அவர்களுக்கு அகப்பட்டால் போதும். தன் மீது பழி வாங்குவது போல், நடவடிக்கை எடுக்க அவர்கள் தயங்கமாட்டார்கள். ஏதோ ஒருவித வைராக்கியத்துடனும் ஆட்கொள்ளப் பட்டவனாகப் பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டான் தங்கப்பன்.

அத்தியாயம் 9

செல்லத்தின் கண்ணீர்

அன்று மாலை வாசற் கதவை யாரோ பரபரப்புடன் தட்டுவது போல் தோன்றவே, செல்லம் சமையலறையில் கைக் காரியத்தை விட்டு விட்டு முன்கட்டுக்கு விரைந்தாள். தாழ்ப்பாளை இழுத்துத் திறக்கப் போனவள் ஒரு விநாடி ஏதோ சந்தேகிப்பவள் போல் தயங்கினாள். மீண்டும் படபடவென்று துரிதமாகக் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. செல்லம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டவளைப் போலத் தலையை ஒரு முறை ஆட்டிக் கொண்டு பிறகு அவசரம் அவசரமாகக் கதவைத் திறந்தாள்.

வாசலில் தலையிலிருந்து கால் வரை மூடி மறைத்துக் கொண்டு நின்ற கோஷா ஸ்திரீயைப் பார்த்ததும் திகைத்து வாய் திறந்தவளாக ஓரடி பின்னுக்கு நகர்ந்தாள் செல்லம். அந்த ஒருவிநாடியைப் பயன்படுத்திக்கொண்டு அந்தக் கோஷா ஸ்திரீ உள்ளே நுழைந்து சட்டென்று கதவைச் சாத்தித் தாளிட்டாள். ''அப்பாடா! எத்தனை நேரம்தான் இந்தக் கனத்தைத் தாங்குவது?'' என்று கேட்டுக் கொண்டே கோஷாவைக் கழற்றி ஒருபுறமாகத் தரையில் போட்ட மிருணாளினி 'உஷ்' என்று காற்றை ஊதி வெளிப்படுத்தியபடியே கலைந்திருந்த கேசத்தை இரு கரங்களாலும் ஒதுக்கித் தடவிச் சரி செய்து கொண்டாள். ''நம் நாட்டில் எத்தனையோ ஸ்திரீகள் இதைப் போட்டுக் கொண்டு நடமாடுவதைத் தினந்தோறும் பார்க்கிறோம்; இருந்தாலும் பழக்கமில்லாதவர்களுக்கு இதை அணிந்து கொண்டு நடப்பதென்றால் சிரமமாகத்தான் இருக்கிறது. இல்லையா செல்லம்?'' என்று கேட்டாள். பிறகு அவள் கலக்கத்திலிருந்து இன்னும் விடுபடாததைக் கண்டு மெல்லச் சிரித்தபடியே, ''பயந்து விட்டாயா செல்லம்? நான் என்ன பண்ணுகிறது? இந்தப் பாழாய்ப் போன ஸி. ஐ. டி.கள் என்னை நேற்று ராத்திரியிலிருந்தே பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். கொஞ்ச நேரம் ஆண் பிள்ளையாக வேஷம் போட்டுக் கொண்டு அலைந்தேன். அப்புறம் இந்தக் கோஷாவுக்குள்ளே புகுந்து கொண்டேன்'' என்றார்.

''அப்படி நீங்கள் என்ன தப்பு செய்தீங்க? போலீஸ்காரங்க இன்னைக்குக் காலையிலே அத்தானிடம்கூடப் பேசிக்கிட்டிருந்தாங்க! இப்போ உங்களை ஸி. ஐ. டி.கள் பின்தொடருகிறதா சொல்லுகிறீங்க. எனக்குப் பயமா இருக்குதே?'' என்றாள் செல்லம்.

''என்ன குற்றம் செய்தேன் என்றுதான் எனக்கும் புரியவில்லை, செல்லம்! யாரோ இல்லாததையும் பொல்லாததையும் என்னைப் பற்றிப் போலீஸாரிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள்.''

''நீங்க ஒன்றும் தப்பு பண்ணலேன்னு அதை தெளிவாகப் போலீஸில் சொல்லி விடுகிறதுதானே, அக்கா? இப்படி வேஷம் போட்டுக்கிட்டுக் கண் மறைவாகத் திரிவானேன்?''

மிருணாளினி புன்முறுவல் செய்தாள். ''பொல்லாத பெண் நீ! சாமர்த்தியமாக என்னை மடக்கப் பார்க்கிறாயே! போலீஸாரை என்ன இளைப்பட்டவர்கள் என்று நினைத்தாயா? என்னைப் பற்றி யாரேனும், தப்போ தவறோ ஏதேனும் தகவல் கொடுத்திருந்தால் அது வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தாற் போல என்று ஒரு பழமொழி உண்டே அப்படித் தானாகி விடும். என்னைப் பிடித்துக் கொண்டு போய் 'லாக்-அப்'பில் வைத்து விடுவார்கள். அவர்கள் சுமத்துகிற குற்றத்தை யெல்லாம் ஒப்புக் கொண்டு கையெழுத்துப் போட்டுத் தருகிற வரை விடமாட்டார்கள். பெண்ணாயிற்றே என்பதால் ஒரு வேளை அடித்து நொறுக்காமல் விடலாம். அதுவும் நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை.....'' மிருணாளினி ஓரக் கண்களால் செல்லத்தின் பதற்றத்தைக் கவனித்துக் கொண்டாள். ஆனால் அதைப் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்தாள்: ''அவர்கள் கூறியபடி செய்யாத குற்றத்தைக்கூடச் செய்ததாக ஒப்புக் கொண்டு எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தர வேண்டும். அப்புறம் அதையே கோர்ட்டில் சாட்சியமாகக் காட்டிக் கடுமையான தண்டனை எனக்கு வாங்கிக் கொடுத்து ஜெயிலிலே தள்ளி விடுவார்கள்! ஏன் செல்லம்? ஜெயில் வாசம் என்றால் எப்படி இருக்கும் என்று உனக்குத் தெரியுமா? நரக வேதனைகூடத் தேவலாம் என்று தோன்றும்! இரவில் எலிகள் என் மேலே எல்லாம் ஊர்ந்து கடிக்கும்! பத்து நாளைக்கு ஒரு தரம் கூடக் குளிக்க முடியாது! மேலே யெல்லாம் அழுக்கேறி அரித்தெடுக்கச் சொறிந்து பிடித்துத் தவிக்க வேண்டும்.... அது சரி, நீ ஏன் இதற்கு மிரண்டு நடுங்குகிறாய் செல்லம்? கஷ்டப்படப் போகிறவள் நான்தானே? எனக்கு நேரக் கூடிய துன்பத்தைக் கேட்டாலே உன் உடல் இப்படி உதறலெடுக்கிறதே! அத்தனை அன்பா உனக்கு என் மீது?'' என்று கேட்டபடியே செல்லத்தைச் சுற்றி வளைத்து அணைத்துக் கொண்டாள்

மிருணாளினி. "தைரியமா இரு, செல்லம்! நான் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளப் போவதில்லை. அப்படியே சிக்கி விடுவதானாலும் அதற்கு முன்னால் என்னைப் பற்றி யார் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்து கொண்டு விடுவேன். அவர்கள் வீண் பழி சுமத்தியிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கத் தக்க சாட்சியங்களையும் தயாரித்து வைத்துக் கொள்வேன்....."

மிருணாளினி தன்னைக் கட்டி அணைத்துக் கனிவு காட்டுவதையும் அவள் பேசி வருவதன் கருத்தையும் ஒரே சமயத்தில் உணர்ந்த செல்லம் நிதானித்து நிற்கவும் முடியாமல் வெலவெலத்துப் போனாள். அப்படியே அவள் காலடிகளில் சரிந்து விம்மி அழ ஆரம்பித்தாள். பக்கத்தில் அமர்ந்து அவள் தலையை மடியில் எடுத்து வைத்துக் கொண்ட மிருணாளினி, "என்ன அசட்டுத்தனம் இது?... என்னமோ நீயேதான் போலீஸாரிடம் என்னைப் பற்றி அவதூறாக ஏதோ கூறிவிட்டது போலல்லவா கிடந்து துடித்துத் தவிக்கிறாய்?" என்றாள்.

"அக்கா! என்னை மன்னிச்சுடுங்க. நீங்க எல்லாத்தையும் தெரிஞ்சு வைச்சுக்கிட்டு என்னை ஆழம் பார்க்கிறீங்க. உங்களுடைய வாசாலகத்துக்கு நான் ஈடுகட்ட முடியுமா? ஒன்றும் தெரியாத நிர்மூடம் நான். ஏதோ அசட்டுத்தனமா நெனைச்சுக்கிட்டுப் பயங்கரமான தப்பு பண்ணிட்டேன் அக்கா! என்னை மன்னிக்க மனசு வருமா உங்களுக்கு?" என்று கதறியபடி மிருணாளினியின் உள்ளங் கைகளில் முகத்தைப் பதித்துக் கண்ணீரால் அந்த மென் கரங்களைக் கழுவினாள் செல்லம்.

"செல்லம்! நீ சொல்வது போல் எனக்கு எல்லாம் தெரியும் என்பது மட்டுமல்ல; போலீஸ் ஸ்டேஷனுக்கு நேற்று உன்னைப் போக வைத்தது எது என்ற விவரத்தையும் நான் அறிவேன்!....... எழுந்திரு. சொல்கிறேன்" என்றாள் மிருணாளினி. செல்லத்தை ஆதரவாகப் பற்றி எழுப்பிக் கொண்டு ஊஞ்சலை நோக்கி நடந்தாள். "உன் மாமி எங்கே? வெளியே போயிருக்கிறாளா? நீ இப்படி அழுது புலம்பிக் கொண்டிருக்கும் போது உன் அத்தானோ மாமியோ வந்து விட்டால் ஏக ரகளையாகி விடும். இந்தா, கண்ணைத் துடைத்துக் கொள்" என்று இடையிலிருந்த கைக்குட்டையை நீட்டினாள். அதை அவள் வாங்கிக் கொள்ளாது போகவே தானே அவள் கண்ணீரைத் துடைக்கவும் செய்தாள்.

ஊஞ்சலில் தன் பக்கத்தில் அவளை உட்கார வைத்துக் கொண்டாள் மிருணாளினி. அவளது இடது கன்னத்தில் தனது வலது உள்ளங்கையை முழுமையாகப் பதித்து முகத்தைத் தன் பக்கமாக மெல்லத் திருப்பினாள். "இதோ பார்! உனக்கும் உன் அத்தானுக்கும் இடையில் நான் ஒருத்தி வந்து புகுந்து கொண்டிருப்பதாக எண்ணித் தானே இப்படித் தகாத காரியத்தில் இறங்கினாய்? ஆனால் நீ தப்புக் கணக்குப் போட்டு விட்டாய், செல்லம்! இதை என்னிடமே நீ நேரடியாகக் கேட்டிருந்தால் நான் உனக்குச் சொல்லியிருப்பேன். ஆனால் நானாகவே உன் அத்தானைப் பற்றி ஏதோ குறை கூறுவது போல் உன்னிடம் வலிய வந்து பேச முடியுமா?" என்ற மிருணாளினி ஒரு நீண்ட பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

"அக்கா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று துயரை மறந்து சற்றுக் கோபத்துடன் அதட்டலாகக் கேட்டாள் செல்லம்.

"செல்லம்! உன் அத்தானுக்கு உன்னிடம் இருந்த அன்பை நான் பறித்துக் கொண்டு விட்டதாய் நீ நினைக்கிறாய்! ஆனால் உண்மையில் உன் அத்தானுக்கு என்னிடமோ அல்லது உன்னிடமோ கூடக் காதல் கிடையாது. அவர் தம் மனம் முழுவதையும் உஷாவிடம் பறிகொடுத்து ரொம்பநாட்கள்.. இல்லை வருஷங்கள் ஆகிவிட்டன!"

"இருக்காது! இருக்கவே முடியாது!" என்று இந்தப் பேரதிர்ச்சியைத் தாங்க முடியாமல் துடித்தாள் செல்லம். துயரக்கண்ணீர் வழிந்த முகத்தில் கலவரமும் பீதியும் துயரத்துடன் போட்டி போட்டுக் கொண்டு பிரதிபலித்தன.

(தொடரும்)



வட்டமேஜை

தமிழகத்தில் ஜாதி வகுப்புவாத வித்தியாசங்களை அறவே குழி தோண்டிப் புதைக்கப் பாடுபட்டவர்களில் ராஜாஜி தலைசிறந்தவர் என்பது 1908ம் ஆண்டிலேயே திருச்சியில் நடந்த தாழ்ந்த வகுப்பினர் மகாநாட்டுக்கு இவரைத் தலைமை தாங்கும்படி செய்ததிலிருந்தே தெரிய வரும். காந்திஜி இந்தியாவில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிப்பதற்கு வெகுநாட்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் தாழ்ந்த வகுப்பாருக்கும் ஹரிஜனங்களுக்கும் அவர்கள் சமுதாய, பொருளாதார நிலை உயர வேண்டும் என்பதற்காக அரும் பாடுபட்டவர் ராஜாஜிதான். தற்பொழுது அவரைத் தங்கள் அரசியல் எதிரியாகக் கருதும் மேடைப் பேச்சாளிகள் இந்தச் சரித்திர உண்மையை மனத்தில் வைத்துக் கொண்டால் நலமாயிருக்கும். பின்தங்கிய வகுப்பாருக்காக இவர் கொண்ட ஈடுபாட்டால் பட்ட சிரமமும் வேதனையும் வேறு ஒரு தலைவரும் படவில்லை என்பதைத் திட்ட வட்டமாகச் சொல்ல முடியும். அதனால் தான் ராஜாஜி அவர்களைச் 'சீர்திருத்தவாதிகளின் சக்கரவர்த்தி' என்று காந்திஜியே வாழ்த்தியிருக்கிறார்.

காந்திஜி சகாப்தத்தில் தேசப் பற்றுக்கும் நாணயத்துக்கும், தலைமை தாங்கும் திறனுக்கும், தியாகத்துக்கும் ராஜாஜிக்குத்தான் முதலிடம் என்பதை பாபுஜியே சொல்லியிருக்கிறார். தம்முடைய 'மறு ஆத்மா' 'மனசாட்சியின் காவலர்' என்றெல்லாம் மனதார காந்திஜி அவரைப் பற்றிக் கூறியிருக்கிறார். தமக்குச் சமமாகவே காந்திஜி ராஜாஜியைப் பாவித்து வந்ததினாலேயே தமது வாரிசு என்று அவரை அழைக்கவில்லை போலும்.

தற்போதைய இந்திய — பாகிஸ்தான் தகராறில் சிலர் ராஜாஜிதான் பாகிஸ்தானுக்குக் காரணம் என்று தூற்றுகிறார்களாம். அரசியல் வாழ்க்கையில் ராஜாஜி பெற்றிருக்கும் தூற்றுதல்களுக்கு அளவே கிடையாது. அது அவர் 'ராசி' போலிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டுதல்களையெல்லாம் அவர் பொருட்படுத்துவதே கிடையாது. 1939ல் இந்திய அரசியல் நிலைமை ஆராய்ந்து பார்த்து, தேசம் பிரிவுபடக் கூடாது என்பதற்காக எத்தனையோ யோசனைகளைக் காங்கிரஸ் தலைவர்களுக்கு அடிக்கடி எடுத்துக் கூறியிருக்கிறார் அவர். துரதிர்ஷ்டவசமாக ராஜாஜியின் யோசனைகளைக் காந்திஜி உள்படப் பெரும்பாலான தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 1942ல் காங்கிரஸை விட்டு வெளியே வந்து பாகிஸ்தான் கொடுத்து விடலாம் என்று ராஜாஜி பிரசாரம் செய்ததற்குக் காரணங்கள்: (1) காங்கிரஸ் தலைவர்களுடைய தவறுகளால் பாகிஸ்தான் ஏற்பட்டே தீரும் என்பது. (2) அப்படி விளைந்தே தீரும் என்கிற நிலைமையைக் கூடிய வரைக்கும் சுமுகமாகவே, ரத்தக் களரி ஏற்படாமல் பிரித்துக் கொடுத்து விடலாம் என்பது. நோயாளியின் உடல் நிலைமை நன்கு கவனித்த டாக்டர் ஒருவர் தாம் உணர்ந்த ஆபத்தான நிலைமை எடுத்துச் சொல்லுகிறார் என்றால், டாக்டர்தான் நோயாளியைக் கொன்றார் என்று சொல்வது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பைத்தியக்காரத்தனம்தான் ராஜாஜி அவர்களே பாகிஸ்தானுக்குக் காரணம் என்று சொல்லுவதும். காந்திஜி தம் தவற்றை வெகு சீக்கிரத்தில் உணர்ந்து பகிரங்கமாகவே ஒரு தடவை, ''ராஜாஜி என்னிடம் குறைந்தபட்சம் ஆறு மாதமாவது முன்னதாகவே நினைத்திருக்கிறார்'' என்று சொல்லியிருக்கிறார். நம் தனிப்பட்டவர் வாழ்க்கையில் 'விதி' — என்பது எப்படிச் சில சமயம் விளையாடுகிறதைக் காண்கிறோமோ அப்படித் தேசங்களுக்கும் 'தலைவிதி' என்று இருக்கும் போலிருக்கிறது. இல்லாவிடில் எல்லாவற்றுக்கும் ராஜாஜியின் யோசனைகளையே கேட்டு வந்த தலைவர்கள் 1939-42ல் ஏன் கேட்காமல் இருக்க வேண்டும்?

பெங்களூர்
13—11—65 கே. வேதமூர்த்தி

தேசத்தில் தற்சமயம் நிலவி வரும் உணவுப் பற்றாக்குறையை உத்தேசித்துத் திங்கட்கிழமை இரவு உணவைத் தியாகம் செய்யும்படிதான் நமது பிரதம மந்திரி அவர்கள் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டாரே தவிர 'கட்டாயம் ஹோட்டல்களை மூட வேண்டும்' என்று அரசாங்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கூறியதாகத் தெரியவில்லை. ஆனால், இவ்விஷயத்தில் ராஜ்ய அரசாங்கம் நடந்து கொள்ளும் விதமானது யதேச்சாதிகாரமான போக்கைத்தான் காட்டுகிறது. தியாக உணர்ச்சியை வளர்க்கப் பக்குவமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமே தவிர, நிர்ப்பந்த முறைகளைக் கையாளக்கூடாது.

சென்னையைத் தவிர வேறு எந்த ராஜ்யத்திலும் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

கேரள கவர்னரைப் போல், தியாக உணர்ச்சி இருந்தும் உடல்நிலை காரணமாக எத்தனையோ பேர் உபவாசம் இருக்க முடியாமல் போகலாம். இவர்களையெல்லாம் கட்டாயப்படுத்த முடியுமா?

விழுப்புரம்
9—11—65 வி. கிருஷ்ணமூர்த்தி



அத்தியாயம் ஐம்பது

இருளில் இருவர்

நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிக் கண்ணீரும் கம்பலையுமாக இருந்த வேதா சபேசனை நிமிர்ந்து பார்க்காமலே தலைகுனிந்து கொண்டிருந்தாள்.

''என்ன, டீச்சரம்மா! இனி என்ன செய்வதாக உத்தேசம்?''

வேதா தலை நிமிராமலே இருந்தாள்.

''என்னோடு பேசக்கூடப் பிடிக்கவில்லையா? சரி; பரவாயில்லை...''

அவள் இப்போதும் மௌனமானாள்.

''நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். அதையாவது சொல்லலாமா?''

வேதா சட்டென்று அவனை வெறித்து நோக்கினாள்.

''இந்த ஊருக்கு நீ அவர்களோடு இவ்விடத்தில் வந்திருப்பதற்கும் உன் மனச்சாட்சிக்கும் சம்பந்தமில்லை என்றால், நிஜமாகவே இங்கு நீ ஆபத்தில் சிக்கியிருக்கிறாய் என்பது உண்மையானால் — இப்போதே என்னுடன் புறப்பட்டு வரவேண்டும்; வருவாயா?''

தெய்வத்தின் குரல் கேட்ட பக்தையைப் போல் பேரானந்தப் பதறலுடன் அவனைப் பார்த்தாள் வேதா.

''இதற்கு மேல் விளக்கிக் கொண்டிருக்க இப்போது நேரமில்லை!..... இங்கு காவலாக இருந்த கறுப்பண்ணனுக்கு நான்தான் போன் பண்ணி, மருதமுத்து பேசுவது போல் பேசி, அவனை வெளியே செல்ல வைத்திருக்கிறேன். அவர்கள் திரும்பி வருவதற்குள்... நீ என்னோடு புறப்படுவதானால் உடனே புறப்படு !''

சரேலெனப் பாய்ந்தோடி வந்த வேதா, சபேசனின் காலடியில் பூங்கொடியெனத் துவண்டு சாய்ந்தாள். அமைதியாகக் குனிந்து அவளைத் தூக்கி நிறுத்திய அவனது கண்கள் கலங்கின. மறுகணமே, அறை விளக்கையும், வாசல் விளக்கையும் அணைத்து விட்டு, 'மெஸ்' பகுதிக்கென்று தனியாக இருந்த சிறிய படிக்கட்டை நோக்கி விரைந்து நடந்தான் அவன். வேதா அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

மிகவும் சாமர்த்தியமாகவே யார் கண்ணிலும் படாமல் வேதாவை அழைத்துக் கொண்டு அந்த ஹோட்டலை விட்டு வெளியேறிய சபேசன், அங்கிருந்து ஏழெட்டுக் கட்டடங்கள் தள்ளியிருந்த ஒரு மருந்துக் கடைக்கு ஓடி, ''இந்தாங்க, சார்! போன் பண்ணினதுக்கு இருபது பைசா!'' என்று கடை முதலாளியிடம் காசைக் கொடுத்து விட்டுத் திரும்பி வந்தான். அந்தக் கடையிலிருந்துதான் அவன் மருதமுத்து பேசுவது போல் சற்றுமுன் கறுப்பண்ணனுக்குப் போன் பண்ணினான் போலும்.

இருவரும் ஸிம்ஸ் பார்க்கை நோக்கி நடக்கலாயினர்.

இருட்டுகிற வரையில் மழை வரும் என்பதற்கான அறிகுறிகளே இல்லாமலிருந்தும், திடீரென மேகங்கள் திரண்டு தூறல் போட ஆரம்பித்தது. சபேசன் இதுபற்றிக் கவலைப் படவில்லை. இன்னும் சொல்லப் போனால், 'தூறலோடு நில்லாமல் நன்றாக மழை பெய்ய வேண்டும்' என்றும் அவன் விரும்பினான். காரணம், மருதமுத்துவும் அவரது காரியதரிசியும் ரேஸ் கோர்ஸிலிருந்து அந்த வழியாகத்தான் திரும்பி வருவார்கள்; அப்படி வருகிறவர்களின் கண்ணில் படாமல் இருக்க அப்போது மழை பெய்வது ஒரு நல்ல பாதுகாப்பு அல்லவா ?

எங்கும் ஒதுங்கி நிற்காமல் விரைந்து நடந்தான் சபேசன். இவ்வளவு நேரம் அவனுக்கு நாலடி பின்னாலேயே வந்துகொண்டிருந்த வேதா, முந்தானையால் தலைக்கு முக்காடு போட்டுக்கொண்டு அவனோடு பக்கவாட்டில் சேர்ந்து நடந்தாள்.

தூறல் நிலவரம் மாறி, மழை வலுக்க ஆரம்பித்தது. ''என்ன செய்வது? இப்படி இந்த மரத்தடியில் கொஞ்ச நேரம் நிற்கலாமா?'' என்று தயங்கியே கேட்டுக் கொள்கிறவன் மாதிரி மெல்ல முணுமுணுத்தான் சபேசன். ''வேண்டாம். இன்னும் சற்றுத் தூரம் போன பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்றாள் வேதா, பதற்றம் நீங்காத பீதிக் குரலில். ''அதுவும் சரிதான்'' என்றவாறு மேலே நடந்தான் அவன்.

அந்தச் சாலையின் வலதுபுறத்தே மிகப் பெரிய மைதானம் ஒன்று இருந்தது. அதன் நடுவில் பிரும்மாண்டமானதொரு விளையாட்டுச் சக்கரம் (ஜயண்ட் வீல்) நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு இப்பால் சாலையைப் பார்த்தாற்போல் பொன் முலாம் பூசப்பெற்று அமைத்திருந்த காந்திஜி சிலை மழையில் பளபளத்துக் கொண்டு நின்றது. மழை நீர்ப் பொழிவுக்கிடையே அந்த மகானின் திருவுருவைப் பார்ப்பதிலேதான் எத்தனை இனிய அர்த்தானுபவ உணர்வுகள் சிலிர்த்தெழுகின்றன !

'அநீதிக்கு ஒரு நாளும் அடிபணியாதே ! சத்தியத்தைக் காக்க எத்தகைய சோதனையையும் ஏற்கத் தயாராக இரு!' — சபேசனின் நடையில் ஒரு புதிய தெம்பும் உற்சாகமும் ஏறின. அவன் முன்னிலும் வேகமாக நடந்தான். அவனுடைய வேகத்துக்கு ஈடு கொடுக்க மாட்டாதவளாய் ஓட்டமும் நடையுமாகச் சென்றாள் வேதா.

மழை மேலும் வலுத்தது. எதிர்வாட்டில் வீசிய சாரல் சபேசனின் முகத்தில் சாட்டை போல் சுரீர் சுரீரெனத் தாக்கியது. தன் கான்வாஸ் பையை வலது கையில் பிடித்துக் கொண்டு இடது கையால் நெற்றிப் பொட்டை மறைத்தவாறு தலைகுனிந்தபடி நடந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் அவன் தெப்பமாக நனைந்து விடுவான்.

அவனுக்கு இடது புறமாகச் சற்றுத் தள்ளியே வந்து கொண்டிருந்த வேதா இதைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தாள். ''பையையாவது தலைக்கு மறைப்பாக வைத்துக் கொள்ளுங்களேன்!'' என்று கூறினாள் அவள். 'வேண்டாம்' என்பதுபோல் அவன் மௌனமாக நடந்தான். அவளுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. நடந்துகொண்டே அவனருகில் நெருங்கித் தான் முக்காடிட்டிருந்த முந்தானையை இழுத்து அவனுடைய தலைக்கு மேல் குடையாக விரித்துப் பிடித்தாள். இதனால் சபேசனின் தலை மட்டும் மழைத் தாக்குதலிலிருந்து கொஞ்சம் தப்பியது. இதை அவன் வேண்டாம் என்று தடுக்கவில்லை. தடுக்கும்படியாக மழை அப்போது அவனை விடவில்லை ! இந்த நிலையிலேயே அவர்கள் இருவரும் நடந்து கொண்டிருந்தனர்.

ஆனால் அப்படியே அதிக நேரம் தன் முந்தானையை அவனது தலைக்கு மேல் விரித்துப் பிடித்துக்கொண்டு நடக்க அவளால் முடியவில்லை. கை வலித்தது. கால்கள் நனைந்த புடவையில் சிக்கித் தடுமாறின. அதனால் அவனோடு சேர்ந்து நடக்கவும் அவளுக்குக் கஷ்டமாயிற்று. ஆகவே தன் முந்தானையை அவன் தலையில் முக்காடிட்டாற்போல் விட்டுவிட்டுக் கையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நடக்கலானாள். சபேசனுக்கு இது சற்றுச் சங்கடமாக இருந்திருக்க வேண்டும்; தலையிலிருந்து சேலைத் தலைப்பு நழுவி விடாமல் இருக்க, வேதாவின் அருகில்


மக்ளீன்ஸ் பற்பசையின் புதிய புல்லரிக்கும் ருசியே சொல்லும் உங்களுக்கு, அது செயலாற்றுகிறதென்று!
சுத்தமாக்க
உங்கள் பற்களிலிருந்து அந்த மங்கிய மஞ்சள் திரையைப் போக்குகிறது
வெண்மையாக்க
– அவைகளுக்கு அந்த அதிகபட்ச வெண்மையைத் தருகிறது
காக்க
– சொத்தைக்குக் காரணமான கிருமிகளை நீக்கி உங்கள் வாயைப் புத்துணர்ச்சியுடன் சுத்தமாக வைக்கிறது.
Macleans
tooth paste
மக்ளீன்ஸ்–அதிவெண்மையான பற்களுக்கு

அவளே இன்னும் நெருங்கி வர வேண்டியதாயிற்று. அத்துடன் அந்த முந்தானை முனையை இழுத்துப் பிடித்தும் கொண்டாள்.

இடியும் மின்னலுமாக மழை சதுராட்டம் போட ஆரம்பித்து விட்டது. சாலை விளக்குகளின் ஒளியில் மழைத் தாரைகள் தங்கக் கம்பிகளாகப் பளபளத்தன. ஒரே சேலைத் தலைப்பின் அடியில் ஒடுங்கி இணைந்து நடந்து கொண்டிருந்த அவ்விருவரையும், நெஞ்சின் குருத்து எலும்புவரையே நடுங்க வைக்கும் படியான குளிர் மேலும் மேலும் நெருக்கிப் பிணைத்தது. அவளையறியாமலே அவன் கையை இறுகப் பற்றிக்கொண்டாள் அவள். அவனும் அவளது கரத்தைத் தன் விலாவில் அணைத்துக் கொண்டான். அதனால் அவர்களின் புஜங்கள் ஒன்றோடொன்று ஒட்டி உராய்ந்து பனிமை நிலையைத் தவிர்த்தன. அதில்தான் என்ன சுகமான கதகதப்பு!

முக்காடிட்டிருந்த சேலைத் தலைப்பால் இனி அவர்களுக்கு எள்ளத்தனை பயனுமில்லை. காரணம், அது சொட்டச் சொட்ட நனைந்து அவர்கள் தலை மீதே ஒட்டிக் கொண்டு விட்டது. ஆயினும், அதை நீக்கிவிடாமல் நடந்து கொண்டிருந்தார்கள்.

தபால் தந்தி இலாகா ஊழியர்களுக்கென அமைந்த ஷெட் ஒன்றின் அருகில் அவர்கள் நெருங்கியபோது மழையும் நின்றது. சட்டென்று தன் சேலைத் தலைப்பை இழுத்துப் பிழிந்துவிட்டு உடம்பை நன்றாகப் போர்த்திக் கொண்டு முகத்தை வேறு பக்கம் திருப்பித் தலை குனிந்து நின்றாள் வேதா. கனவிலிருந்து உசுப்பி எழுப்பப்பட்டவன் போல் சுற்றுமுற்றும் பார்த்துத் திருதிருவென விழித்த சபேசனும், "ஓ.... மழை நின்று விட்டதா?" என்று முனகினான்.

"ஆமாம்; இப்போது எங்கே போகிறோம்?" என்று மெல்லிய குரலில் வினவினாள் வேதா.

"அதைப் பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்!" என்று சொன்ன சபேசன், "சரி, வா!" என்றவாறு லின்ஸ் பார்க்கினுள் நுழைந்து நடந்தான். அவளும் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஏற்கனவே பழக்கமாயிருந்த ஒரு சிறிய குடை மண்டபத்தின் அருகில் போய் நின்றான் சபேசன். வேதா அந்தப் பிரும்மாண்டமான பூங்காவைப் பிரமிப்போடு பார்த்தாள். விளக்குகளுக்கு அங்கு பஞ்சமேயில்லை. எங்கும் ஒளி மயமாகக் காட்சியளித்தது. மரத்தடிகளிலும் மண்டபங்களிலும் இவ்வளவு நேரமாக மழைக்கு ஒதுங்கி நின்றுகொண்டிருந்த ஜனங்கள் அப்போதுதான் கலைந்து சென்றனர்.

"இன்றிரவை நாம் இந்தப் பார்க்கிலிருந்துதான் கழித்தாக வேண்டும்" என்று கரகரத்த குரலில் சொன்ன சபேசன், தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்த தன் சட்டையைக் கழற்றிப் பிழிந்துகொண்டே, "முதலில் ஸிடி ஸ்டேஷனுக்கோ, கன்ட்டோன்மென்ட் ஸ்டேஷனுக்கோ போய்விடலாம் என்று திட்டமிட்டேன். பிறகு, அப்படிப் போவது சரியல்ல என்று தோன்றியது. ஏனென்றால் அவர்கள் தோட்டத்துக்குத் திரும்பி வந்ததுமே அங்கு நீயும் நானும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் நேரே அவ்விரு ஸ்டேஷன்களுக்குத்தான் போய்ப் பார்ப்பார்கள். அதுவுமின்றி, இந்த நேரத்தில் நாம் சென்னைக்குப் போக ரயிலும் கிடையாது. பெங்களூரிலிருந்து மதராஸ் மெயில் இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட்டு விடுகிறது. இப்போது மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும்" என்றான். "இதிலே உனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லையே?..... அதாவது, இன்றைய இரவுப் பொழுதை இங்கிருந்து கழிக்கப் பயப்பட மாட்டாயே? எனக்கு இதெல்லாம் நிரம்பப் பழக்கம்!.... நாளைக் காலை முதல் வண்டியைப் பிடித்துச் சென்னைக்குப் போய் விடுவோம்."

மத உணர்வும் தனி மதமும்

ஒருவருக்கு நாம் அழகை ரசிக்கும் உணர்ச்சியை ஊட்ட வேண்டுமானால் 'அழகு' என்ற பொதுவான ஒரு தத்துவத்தைக் காட்டி அவரை அதில் ஈடுபடுத்த முடியுமா? அந்த அழகைத் தேக்கி வைத்திருக்கும் தாமரையையும் மல்லிகையையும் கோபுரங்களையும் மங்களமான பெண்களையும் அவர் போற்றுமாறு செய்வதே அழகுணர்ச்சிக்குப் போதனையாகும். 'தாமரையும், மல்லிகையும், கோபுரமும், சுமங்கலியும் வேண்டாம்; அவை அழகைத் தனித் தனி அம்சங்களாகப் பிரிப்பவை; அவற்றை வெறுத்து, அழகுத் தத்துவம் என்ற பொது உண்மையை ரசியுங்கள்' என்று நாம் சொல்வோமா? தனித் தனிச் சமய வழிபாடுகள் கூடாது. பொதுவான சமய உணர்ச்சியையே ஊட்ட வேண்டும் என்று கூறுவதும் இது போன்றதுதான்.

—ராஜாஜி

அவனுடைய இந்தப் பேச்சைக் காதில் வாங்காதவள் போல் மௌனமாக நின்ற வேதா, பக்கத்தில் கண்கொள்ளா அழகுடன் பூத்துக் குலுங்கியிருந்த மஞ்சள்ரோஜா செடியொன்றின் மலரைத் தன் மெல்லிய விரல்களால் ஏந்தி வருடிப் பார்ப்பதில் முனைந்திருந்தாள். அவளது இந்தச் செயல், 'இனி எங்கிருந்தாலும் எனக்குத் துளியும் பயமில்லை' என்று அவனிடம் சொல்லாமல் சொல்வதுபோல் இருந்தது.

பார்க்கில் ஜனநடமாட்டம் ஓய்ந்து அமைதி கவிய ஆரம்பித்தது. பிழிந்த ஈரச் சட்டையை உதறி அதையே மீண்டும் அணிந்து கொண்ட சபேசன், அப்போதுதான் நினைவு வரப் பெற்றவன் போல் அவசரமாகத் தன் பையைத் திறந்து காகிதப் பொட்டலம் ஒன்றை எடுத்தான்.

சிறிது நேரச் சிந்தனைக்குப் பின் அந்தப் பொட்டலத்தை மெல்லப் பிரித்தான். அது அவளுடைய தாய்க்காகச் சென்னையிலிருந்து வாங்கிச் சென்ற புதுப் புடவை! அதைப் பார்த்ததுமே அவள் உடலில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. கண்கள் பனித்துப் பார்வையை மறைத்தன. வேறு பக்கம் திரும்பி நின்று அந்தப் புடவையின் ஒரு முனையாலேயே கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து, ''நன்றாக நனைந்து விட்டு அப்படியே ஈரப் புடவையோடு நிற்கிறாயே! இந்தா, இதை உடுத்திக் கொள்!'' என்று ஓர் உரிமைக் குறும்புடன் நீட்டினான்.

வியப்பால் வேதாவின் கருவிழிகள் வைர மணிகளென மின்னின. பிரமிப்புடன் அவனையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்த அவள், ''இது, இது...?'' என்று தயங்கினாள்.

''முதலில் போய் உடுத்திக் கொண்டு வா! பிறகு பேசிக் கொள்வோம்.''

இந்தச் சில விநாடிகளில் அவளுடைய மனம் என்னென்ன இனிய கற்பனைகளில் நிலைத்ததோ தெரியவில்லை — ஆனால் அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரே குறிப்பில் வெளிப்படுத்துவது போல் ஓர் எழில் வார்ந்த புன்னகை பூத்தாள். 'இத்தனை கஷ்ட நிலையிலும் இவர் எனக்காக இந்தப் புதுப் புடவையை விலை கொடுத்து வாங்கியிருக்கிறாரே! இவருக்குத்தான் என்மீது எவ்வளவு அன்பு, நம்பிக்கை! ஆனால் அவற்றை என்னளவும் வெளியில் காட்டிக் கொள்வதில்லை! நான் தெரிந்து கொள்ளவும் விடுவதில்லை! என்ன அழுத்தமான மனிதர் இவர்!' —இவ்வாறு எண்ணி உளம் புளகித்த அவள், 'இந்தப் புடவையை இவர் எங்கே, எப்போது வாங்கியிருப்பார்?' என்ற இனிய ஆராய்ச்சியில் இறங்கித் திளைக்கலானாள். அந்த எளிய, விலை மலிவான புடவையை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டவளுக்கு தன் வாழ்நாளில் இதுவரை பெற்றிராததும், இனிப் பெற முடியாததுமான விலைமதிப்பற்ற பொருள் ஒன்றைப் பார்ப்பது போன்றிருந்தது. அதை இரு கைகளாலும் ஏந்திப் பிடித்துச் சிறிது நேரம் கண்ணிமைக்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு பேரானந்தப் பரவசத்தோடு அதை நெஞ்சில் வைத்து அணைத்தபடி, சற்றுத் தொலைவிலே அரை ஆள் உயரத்துக்குப் புதராக வளர்ந்திருந்த 'வெட்டுக் கோனு' செடிகளின் இருண்ட பகுதியை நாடி நடந்தாள்.

அவள் காதில் விழும்படியாக, ''இந்தச் சேலை ஏது என்று கேட்டாய்?'' என்று ஆரம்பித்த சபேசன், தான் ஊருக்குப் போனதிலிருந்து நடந்த சம்பவங்களையும், பிறகு அங்கிருந்து திரும்பி இந்த நகருக்கு வர நேர்ந்த விவரங்களையும் — சந்தியா பற்றின விஷயம் நீங்கலாக — சுருக்கமாய்ச் சொல்லி முடித்தான்.

அருகிலிருந்த 'அட்டார கச்சேரி'யிலிருந்து மணி பத்து என்பதைத் தண்டவாள மணி யோசை அறிவித்து ஓய்ந்தது.

இலக்கியத் தரமான நல்ல சிறுகதை யொன்றை 'நேபா' காகிதத்தில் அச்சிட்டாலும் அந்த 'மட்டி'க் காகிதத்துக்கே அதனால் ஒரு மதிப்பும் அழகும் வந்துவிடுகின்றன அல்லவா? அப்படித்தான் வேதா உடுத்திக் கொண்டு வந்த அவ்விலை மலிவான புடவையும் அப்போது கொள்ளை யெழில் பெற்று விளங்கியது. ஆயினும் அவள் முகத்தில் சற்று முன்னிருந்த மகிழ்ச்சிக் களை இப்போது சிறிதும் தென்படவில்லை. அந்தப் புடவையைப் பற்றிய அவளது கற்பனைகளெல்லாம் தவிடுபொடியாகி விட்ட தளர்ச்சி அது!

குளிர் தாள முடியாமல் இரு கைகளையும் நெஞ்சில் வைத்துப் புதைத்துக்கொண்டு மண்டபப் படியில் கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த சபேசன் அவளைக் கடைக் கண்ணால் நோக்கினான். அவனையறியாமலே அவன் முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகையொன்று மலர்ந்தது. ''நன்றாகத்தான் இருக்கிறது'' என்று முணுமுணுத்தான். (தொடரும்)

விக்கிரகம் வெறும் சின்னமா?

உருவ வழிபாட்டைக் கேலி செய்பவர்கள் அதன் பொருளை மனத்தில் வாங்கிக்கொள்ள வேண்டும்; எவ்வாறு நாஸ்திகம் பேசுபவர்களும் தங்கள் தலைவர்களின் படங்களை வைத்து மரியாதை செய்வது அந்தப் படம் எழுதப்பட்ட காகிதத்துக்கல்ல, தலைவரையே சேரும் என்று நினைக்கிறார்களோ, அவ்வாறே ஆஸ்திகர்கள் விக்கிரகத்துக்குச் செய்யும் வழிபாடு அந்த விக்கிரகம் குறிப்பிடும் பரம்பொருளுக்கே உரியது.

விக்கிரகம் பரம்பொருளின் சின்னம் என்கிற வாதம் ஒருபுறம் இருக்கட்டும். விக்கிரகத்தை வெறும் சின்னம் என்று மட்டுமே ஏன் எண்ண வேண்டும்? எங்கும் நிறைந்த சர்வ வியாபகமான சக்தியானது பக்தன் வழிபடும் விக்கிரகத்தில் மட்டும் இல்லையா? நாம் காண்கிற பௌதிக உலகில் உள்ள சின்னஞ் சிறு அணுவிலும் உறையும் பரம்பொருளின் பராசக்தியானது, ரிஷிகள் தந்துள்ள வருணனைகளின்படி நம் மனத்தில் நாம் உருவாக்கும் திவ்வியமான நாம ரூபங்களிலும் நிச்சயமாக உறைகிறது. எனவே, 'இதெல்லாம் சின்னம்' என்று சொல்வதால் முழு உண்மையும் சொன்னதாகாது.

— ராஜாஜி



வயது ஆக ஆக உடல் கனம் கூடாது

உங்களுக்கு நாற்பது வயதுதானே இருக்கும். ஆனால் பார்ப்பவர்கள் அதற்கும் மேலாகத்தானே மதிப்பிடுகிறார்கள்? உங்களுக்கும் வயதுக்கு மீறிய களைப்பு மேலிடுகின்றதல்லவா?
உங்களுடைய உடல் கனம் சமீபத்தில் அதிகரித்து விட்டதுதான் இதற்குக் காரணம். எடையை எப்படிக் குறைப்பது என்று கவலைப்பட வேண்டாம். அபாயமற்ற முறையில் எடையைக் குறைத்து ஆரோக்கியமுடன் திகழ யுமிகால் அருந்துங்கள்.

போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

யுமிகால் உடலுக்கு அத்தியாவசியமான போஷாக்குச் சத்துக்கள் — கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச் சத்துக்கள், புரோட்டீன்கள், விட்டமின்கள், மினரல்கள்—சரியான அளவில் சாஸ்திரீய முறையில் கொண்டது. யுமிகால் பசியைச் சமனம் செய்து, எடையைக் குறைத்து, ஆரோக்கியமாக வாழ வழிகாட்டும் மாக்கறி உணவு. ஒரு வேளை அளவு யுமிகால் (4 மேசைக்கரண்டி பவுடர் அல்லது 6 பிஸ்கட்டுகள்) ஒரு பரிபூர்ண பதிலுணவு; ஆனால் குறைந்த காலோரிகள் கொண்டது.

சுறுசுறுப்புடன் சுகமாய் வாழுங்கள்

உங்கள் எடை அளவுக்கு அதிகமாய் இருந்தால் (உங்கள் எடை என்ன என்று சோதித்துப் பாருங்கள்) உணவுக்குப் பதிலாக யுமிகால் மட்டுமே அருந்தி விரைவில் எடையைக் குறையுங்கள்—இந்த முறையில் ஒரே வாரத்தில் 3 லிருந்து 4 பவுண்டுகள் வரை குறைக்கலாம்! உங்கள் தற்போதைய எடை சரியான அளவிலிருந்து ஆனால் இனிமேலும் அதிகரிக்காமல் பார்த்துக்கொள்ள விரும்பினால் தினம் ஒரு வேளை மட்டுமே யுமிகால் அருந்தி உடல் கனம் ஏறாமல் ஆரோக்கியமுடன் திகழலாம்.

யுமிகால் பவுடர் சாக்லேட், வாழைப்பழம், ஆரஞ்சு ஆகிய மூன்று இன்சுவைகளில், 225 கிராம்கள் மற்றும் 1.6 கிலோகிராம் ஆகிய இரு சைஸ் டின்களில் கிடைக்கிறது. யுமிகால் பிஸ்கட்டுகள் 27 கொண்ட டின்னில் கிடைக்கின்றன.

எடை குறைந்து எடுப்பாய் விளங்க யுமிகால்—போஷாக்குள்ள பரிபூர்ண பதிலுணவு

ஸாராபாய் கெமிகல்ஸ், P.B 1088, பம்பாய்-1





ஸ்வஸ்திக்
பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்
படியாத கேசத்தையும் படியச் செய்கிறது—நாள் முழுவதும் மழமழப்பாய் வைக்கிறது
நேர்த்தியாக வாரிவிடப்பட்ட கவர்ச்சி மிக்க கேசம்... கண்ணைக் கவரும் பளபளப் புள்ள கரும் கேசம்—நாள் முழுவதும் மழமழப்புடன் திகழச் செய்வது ஸ்வஸ்திக் பர்ஃப்யூம்டு காஸ்டர் ஆயில்.
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்
Shilpi SOM 34 Tam

[இந்த ராஜாஜி இதழில் பிரபலஸ்தர்கள், பிரமுகர்கள் பலரின் கட்டுரைகள், கவிதைகளுக்கு இடையில் ''ஒரு சாதாரண இந்தியப் பிரஜை'' என்று தம்மைத் தாமே குறிப்பிட்டுக் கொள்கின்ற இந்த ராஜாஜி பக்தரின் கட்டுரையையும் பிரசுரிப்பதில் மட்டில்லாத மகிழ்ச்சியுறுகிறோம். - ஆசிரியர்]

வியாசர் வாழ்கின்றார்

வி ச. வாசுதேவன்

1962ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26ந் தேதி திங்கட்கிழமை காலையில் ராஜாஜி அவர்களை நேரில் சந்திக்கும் பாக்கியம் சிறியேனுக்குக் கிடைத்தது. ராஜாஜி வசிக்கிறார் என்ற பேற்றை இன்று இழந்துவிட்ட ஆனால் அன்று பெற்றிருந்த தியாகராய நகர் பஜுலுல்லா சாலையில் உள்ள இல்லத்தில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. வீட்டு வாயிலில் ராஜாஜி அவர்களுடைய பேரப் பிள்ளை ஒருவர் இருந்தார். ராஜாஜியைச் சந்திக்க வந்திருக்கிறேன் என்ற எனது ஆவலை அவரிடம் தெரிவித்தேன். அவ்வமயம் ராஜாஜி மாடியிலிருந்த தமது அறையில் இருந்தார். இன்னார் என்ற குறிப்புச் சீட்டை என்னிடம் பெற்று மேலே சென்று சற்றைக்கெல்லாம் கீழே வந்தார் பேரர். 'தங்களை வரச் சொல்கிறார்' என்றார்.

'வரச் சொல்கிறார்' — இந்த அழைப்பைக் கேட்டதும் ஏனோ என் ரோமங்களெல்லாம் புல்லரித்தன. மாடிப்படியேறக் கால்கள் தயங்கின. ஒருவிதமாகத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மேலே ஏறினேன். கவர்னராகவும், முதல் மந்திரியாகவும், இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாகவும் பல உன்னத பதவிகளைப் பெருமைப்படுத்தியவர்; தியாகசீலர்; தீர்க்கதரிசி; சாணக்கியனை நிகர்த்த ராஜ தந்திரி; உலகளாவிய புகழ் வாய்ந்த நுண்ணறிவாளர்; மாமேதை. அத்தகைய புருஷோத்தமனை நாம் இன்னும் சில விநாடிகளில் சந்திக்கப் போகிறோம். அவரைச் சந்திப்பதற்கு ஒரு சாதாரண இந்தியப் பிரஜை என்பதைத் தவிர வேறு யோக்கியதாம்சம் இல்லாத எனக்கு எவ்வளவு எளிதாகப் பேட்டி கிடைத்து விட்டது!

நான் சென்ற சமயம் தலைவரவர்கள் குனிந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். எழுதுவதில் முழு மனத்துடன் ஈடுபட்டிருந்ததால் என் வருகையை அவர் உடன் உணரவில்லை. நானோ வினயத்துடன் ஒரு பக்தனைப் போல் அவருடைய வசீகரத்தில் ஈடுபட்டபடி நின்றிருந்தேன். சில விநாடிகள் சென்ற பிறகு என்னை நோக்கி நிமிர்ந்து 'யார்?' என்று கேட்டார்.

''வாசுதேவன் என்று பெயர். செங்கற்பட்டுக்கு அருகில் உள்ள வில்லியம்பாக்கம் என்ற கிராமம் சொந்த ஊர். 'திருமலை நல்லான் சக்கரவர்த்தி' பரம்பரையைச் சேர்ந்தது எங்கள் குடும்பம். தமிழில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அந்த ஈடுபாட்டுக்கு வித்திட்டது மகா கவி பாரதியாரின் கவிதைகளும் கட்டுரைகளும். தங்கள் தமிழையும் பக்தியோடு படித்து வருகிறேன்'' என்றேன்.

அடுத்ததாக ''என்ன தொழில் செய்கிறீர்கள்?'' என்றார்.

தொழிலைச் சொன்னேன்.

''வேறு விசேஷம் உண்டா?'' என்றார்.

அவர் எழுதிய 'ரகுபதி ராகவ' என்ற நூலைக் கையில் எடுத்துச் சென்றிருந்தேன். அதை அவரிடம் நீட்டி, ''தங்கள் நூல்; நான் சிறந்தது எனப் போற்றி வைத்திருக்கும் சில நூல்களில் ஒன்று. தங்கள் ஆசீர்வாதம் வேண்டும்'' என்றேன்.

நூலை வாங்கி ஆர்வத்தோடு பார்த்தார் ராஜாஜி. அப்போது அவருடைய கண்கள் பளபளத்ததிலிருந்து அந்த ஆர்வத்தை நான் உணர்ந்து கொண்டேன். ''இந்தப் புத்தகத்தை எங்கு வாங்கினீர்கள்?'' என்றார்.

''1958ம் ஆண்டில் காஞ்சீபுரத்தில் நிகழ்ந்த ஒரு சர்வோதய மகாநாட்டில் வாங்கினேன்.''

நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டே 'ஆசீர்வாதம் — இராஜகோபாலாச்சாரி — 26–3–62' என்று அந்த நூலில் — காந்தியின் வண்ணப் படத்துக்கு எதிர்ப் பக்கத்தில் அன்போடு கையொப்பமிட்டுக் கொடுத்தார். ராஜாஜி கையொப்பமிட்ட அந்த நூலை இன்றும் நான் பெருமையோடு போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

குழந்தைகளையும், பெரியவர்களையும் பார்க்கப் போகும்போது வெறுங் கையுடன் போகக் கூடாதென்று சொல்லுவார்களல்லவா? அதன்படி என் சக்திக்கு முடிந்தபடி மூன்று ஆரஞ்சுப் பழங்கள் மட்டும் வாங்கிச் சென்றிருந்தேன். எளிமையான அன்பளிப்புத்தான். எனினும் எனது நெஞ்சத்தின் ஆழத்திலிருந்த அன்பின் பெருக்கை உணர்ந்தவர் போல் அந்தச் சிறு காணிக்கையை ஏற்றார். பழங்களை மேஜை மீது வைத்தபடி எழுந்தார். வணங்கியபடி நானும் விடைபெற்று பஜுலுல்லா சாலையில் 'ஏறுபோல் நடையினாய்' என்றாரே பாரதியார், அந்தப் பாணியில் நடை போட்டேன். ராஜாஜி பற்றிச் சுவையான விஷயங்கள் என் மனத்தில் எழுந்தன.

ராஜாஜியினுடைய தமிழ் நடையே ஒரு தனி பாணி. விஷயத்தைத் தெளிவாக விளக்குவதில் அவருக்கு அவரே நிகர். வியாசர் விருந்தைப் பற்றி ரசிகமணி டி. கே. சி. அவர்கள் கூறியுள்ள இந்த வாசகங்களில்

பக்தி: ஓர் இயற்கை உணர்ச்சி

தெய்வ வழிபாடு என்பது வாழ்வின் ஜீவாதாரத் தேவைகளில் ஒன்று: தன் உயிரைக் காத்துக் கொள்ள வேண்டும்; தன் இனம் விருத்தியாக வழி செய்ய வேண்டும் என்ற இயல்பான உந்துதல்கள் போன்ற—பசியும் தாகமும் புலன் வேட்கையும் எப்படிப்பட்ட இயற்கையான உணர்ச்சிகளோ அதே போன்ற — ஒன்றே தெய்வ வழிபாடும். 'இதன் உபயோகம் என்ன?' என்று கேள்வி கேட்டுப் பதில் சொல்லும் விஷயமல்ல தெய்வங்கொள்கை. மனித வாழ்வு அழியாதிருக்க வேண்டுமாயின் சேவை தேவையாகும். சேவைக்குப் பற்றின்மை அவசியம். பற்றின்மை உண்டாக ஆண்டவனே வழி.

பற்றுக பற்றற்றான் பற்றினை —அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு

—ராஜாஜி

ராஜாஜியினுடைய எழுத்தாற்றலை நாம் உள்ளபடி உணரலாம்:

''வியாசர் பூர்வ காலத்தவர். அவரோடு நமக்குப் பழக்கம் கிடையாது. ராஜாஜியையோ நமக்குத் தெரியும். அவர்கள் நம்மோடு நாள்தோறும் பல துறைகளிலும் பழகி வருகிறவர்கள்.

விஷயங்களை அவர்கள் அனுபவித்து, நம்முடைய பாஷையில் நம்மோடு கலந்து பேசுகிறார்கள். அதனால் உண்மைகளை உள்ளங்கையில் வைத்து அனுபவிக்கிற மாதிரி அனுபவிக்க முடியும்.

தமிழர்களுடைய ஒவ்வொரு வீட்டுக்கும் ஓர் அழகிய தீபம் கிடைத்திருக்கிறது. அது நந்தா விளக்காக இருக்கும்.''

'வியாசர் வாழ்கிறார்!' என்று சொல்லாமல் சொன்ன ரசிகமணியல்லாது வேறு யாரால் ராஜாஜியினுடைய எழுத்துத் திறத்தை இவ்வாறு அனுபவிக்க முடியும்?

அமர கவி பாரதியார் எழுதியுள்ள 'ஞானரதம்' என்ற நூலுக்கு 8—3—1936ல் ராஜாஜி எழுதிய முன்னுரை நினைவுக்கு வருகிறது.

''இப்புஸ்தகத்தில் பாரதியார் எடுத்த விஷயங்கள் மிகப் பெரியவை. விஷயங்களின் கௌரவம் ஒருபுறமிருக்க, தற்காலத்தில் தமிழ் வாசக நடை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைப் பாரதியார் எழுதிய இச்சிறு புஸ்தகத்தில் கண்டு கற்கலாம். அர்த்த புஷ்டியில்லாத அரற்றலின்றி, சொன்னதையே சொல்லி, பக்கங்கள் நிறைப்பதுமின்றி ஸ்படிகம் போன்ற தெளிவும், வைரம் போன்ற உறுதியும் பெற்று இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு ஆழ்ந்த கருத்துக்களை எழுதவும் சித்திரிக்கவும் உபயோகப்படுத்தலாம் என்பதைப் பாரதியார் வசனநடையில் நாம் பார்க்கலாம். தமிழுக்குள் கிடக்கும் எல்லையற்ற சக்தியையும் லாகவத்தையும் பாரதியார் எழுத்துக்களில் தமிழ் மக்கள் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். பயன் கொண்ட கற்பனா சக்தியும், கொழுந்துவிட்டெரியும் நாட்டன்பும் விசாலமான தரும ஞானமும், தோவாத ஹாஸ்ய ரசமும், தமிழ்த் தாயின் செல்லக் குழந்தை, வரப்பிரசாதர், பாரதியார் இயற்றிய இந் நூலில் ஜ்வலிப்பதை அனுபவிக்கலாம்.'

பாரதியாருடைய லோகாயத வாழ்க்கை ஜ்வலிக்காவிட்டாலும் அவரது அமர இலக்கியங்களின் ஜ்வலிப்பை ராஜாஜியுடைய வாசகங்களில் கண்டோம். நிஜ வாழ்க்கையில் வறுமையால் வாடிய பாரதியார் ராஜாஜிக்குச் சாப்பாடு—நல்ல சாப்பாடு போட்டாராம். பாரதியார் பெருமையைக் கூறும் அவர் அந்தச் சுவையான நிகழ்ச்சியை இவ்விதம் கூறியுள்ளார்:


'பாரதியார் பட்டினி கிடந்தார் என்று பலர் சொல்லுகிறார்கள். ஆனால் என்னுடைய அதிர்ஷ்டம் அந்தப் பாரதியாரே எனக்குச் சாப்பாடு போட்டார். சாப்பாடு ரொம்பவும் நன்றாகத்தான் இருந்தது. பாரதியாரின் வறுமையைப் பற்றி நாம் இப்போது ஓயாமல் வருத்தப்பட வேண்டியதில்லை. அவருக்கு ஏராளமாக யாராவது பணம் கொடுத்தாலும் ஒரு நாளில் செலவழித்து விட்டிருப்பார். அவரால் பணத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டு சௌக்கியமாக இருந்திருக்க முடியாது. அவருடைய சுபாவம் அது. அதனால்தான் அற்புதமான கவிகளைப் பாட முடிந்தது.'

அண்ணல் காந்தியடிகளின் பரிபூரண அன்பைப் பெற்ற உன்னதத் தலைவர்களில் ராஜாஜி முக்கியமானவர் என்பதைக் கூறத் தேவையில்லை. அத்தகையவர் இன்று நம்மிடையே வாழ்வது நாம் செய்த பெரும் பாக்கியம். 'ரகுபதி ராகவ' நூலின் முன்னுரையில் காந்தியத் தத்துவத்துக்கு ராஜாஜி இவ்விதம் விளக்கம் காண்கிறார்:

'நம்முடைய காந்தி மிகக் கூர்மையான மூளையும், தற்கால விஞ்ஞானக் கல்வியும் படைத்தவர். இந்த யுகத்தின் ஆட்சேபனை ஐயப்பாடுகள் அனைத்தையும் அறிந்த இத்தகையவர், நம்முடைய அரசியல் தலைவர் ராம பஜனை செய்து வந்தார். மதங்கள் அனைத்திலும் ஒரே தெய்வம் என்பதைப் போதித்தார். இருபதாவது நூற்றாண்டில் ஒரு ஆஸ்திகராக விளங்கினார். பாரத மக்கள் இதைக் கல்லெழுத்தில் எழுதிய சாஸனமாக வைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்த வேண்டும். அப்படி நடத்தினால்தான் ஆண்டவன் அருள் பெற்றுச் சுதந்திரத்துடன் சுகமும் பெறுவோம்.'

அண்ணல் காட்டிய பாதையில் தேசத்தை இட்டுச் செல்ல ராஜாஜி வாசகங்கள் நமக்குத் துணை செய்யும்.


கால்கேட் டூத் பிரஷ்
மேலும் துப்புரவாக உங்கள்
பற்களை சுத்தம் செய்யும்படி
அமைக்கப்பட்டிருக்கிறது!
4 சைஸ்கள்-அடல்ட்-ஜூனியர்-சைல்ட்-பேபி
ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்
COLGATE
NYLON TOOTH BRUSH
புதியது
மிகவும்
கவர்ச்சியானது!!
கால்கேட்
சூபர் டீலக்ஸ்
டூத் பிரஷ்
வாய் துர்நாற்றத்தை அகற்ற கால்கேட் காட்டும் வழி


உங்கள் பெண்
அவளது வருங்காலத்திற்கு
உரியதைப்
பெறவேண்டும்!
அதனை
பணச் சேமிப்பு
மூலம் அவளுக்கென்று
உறுதிப் படுத்துங்கள்
சேவிங்ஸ் பாங்க் அக்கௌண்டை எங்கள் பாங்கில் ஆரம்பியுங்கள்
ஜி. பி. கோயங்கா
சேர்மன்
ஆர். பி. ஷா
ஜெனரல் மானேஜர்
தலைமை ஆபீஸ்: கல்கத்தா
தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க்
லிட்.


முக்கியமான மாட்சில் ஆட வேண்டும் — ராஜுவுக்கோ முதுகுவலி
இன்று மாலை ஹாக்கி மாட்ச், ஆனால், என்னால் ஆட முடியாது: முதுகு வலி கொல்லுகிறது!
ஸாரிடான் சாப்பிடு! வலி நீங்கும்!
ராஜு ஸாரிடான் சாப்பிடுகிறான்
பிறகு ...
முதுகுவலி போயே விட்டதே! ஸாரிடானுக்கு இவ்வளவு சக்தியா!
ஒரே ஒரு
ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற் கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். ஒரு வில்லை முழு டோஸ்; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 பைசா
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் : வால்டராஸ் லிமிடெட்

சாதல் இல்லையேல் காதல்

சோ

காட்சி 24

சபேசன் வீட்டு வாசல்

(நாகராஜன் வாயிலில் நின்றுகொண்டிருக்கிறான்-சுரேஷ் வீட்டினுள்ளிருந்து அவசரமாக வெளியே வருகிறான்.)

சுரேஷ்: டேய் நாகு... இதுதான் சரியான சமயம்... வீட்டிலே சபேசன் இல்லே. திரும்பி வர இன்னும் அரை மணியாவது ஆகும்னு வேலைக்காரங்க சொல்றாங்க...

நாக: மாலதி எங்கேடா இருக்காளாம்?

சுரே: இரண்டாவது மாடியிலே... சீக்கிரம் போய் அவளைப் பார்த்துப் பேசிடு.

நாக: மாலதிகிட்டே ஒளிவு மறைவு இல்லாம நம்ம திட்டத்தை அப்படியே சொல்லிடப் போறேன்டா. இத்தனை நாட்கள் அவகிட்ட மறைச்சதே தப்பு.

சுரே: ஒண்ணும் தப்பில்லே... நீதான் எல்லாத்தையும் விவரமா எழுதி அந்தக் கவரிலே போட்டு சீல் பண்ணிக் கொடுத்திருக்கியே...

நாக: இருந்தாலும் இப்ப நான் எல்லாத்தையுமே சொல்லிடறேன்டா... மத்தவங்களைத்தான் ஏமாத்தறோம்னு, மாலதியையுமா ஏமாத்தணும்?

சுரே: ஆல்ரைட்! ஆறு ஒண்ணு. அக்கம் பக்கம் பார்த்துப் பேசு. நம்ப திட்டம் சபேசனுக்கு யார் மூலமாவது தெரிஞ்சு போச்சோ, அவ்வளவுதான்... நாம் செத்தோம்!....

நாக: போடா! நான்தான் ஏற்கனவே செத்துப் போயாச்சே!

சுரே: நாகு, டைம் ஆறது. நீ உள்ளே போ. நான் ரொம்ப அர்ஜன்டா நிர்மலாவைப் பார்க்கணும். நான் போறேன்...

நாக: என்னடா நிர்மலாகிட்டே அவ்வளவு முக்கியமான காரியம்?

சுரே: நான் அவளைத் தினமும் ஒரு தடவை மீட் பண்ணியாகணுமே?

நாக: ஏன்?

சுரே: உனக்கு இந்தப் பெண்களைப் பத்தியே ஒண்ணும் தெரியலே! தினமும் பார்க்கலேன்னு நம்பளை அப்படியே மறந்துடுவாங்க! பெண்களுக்கு மறதி அதிகம்! கல்யாணத்திலே மனைவி கழுத்திலே கணவன் தாலி கட்டறான். கணவன் கழுத்திலே மனைவி தாலி கட்டறாளா? கிடையாது! கல்யாணம் ஆயிடுத்து. கணவன் இருக்கான்னு மனைவிக்கு அடிக்கடி நினைவுபடுத்த கணவன் போட்டு வெக்கிற முடிச்சுத்தான்டா அந்தத் தாலி! டா! டா! பெஸ்ட் ஆப் லக்! நான் வரேன்!

(காட்சி முடிவு)

காட்சி 25

சபேசன் வீட்டு மாடியில் ஓர் அறை

(மாலதி ஜன்னலருகில் நின்று அருகிலே தெரியும் சமுத்திரத்தைப் பார்த்தவாறு நிற்கிறாள். நாகராஜன் பின்புறம் வந்து தயங்கி நிற்கிறான்.)

நாக: (தொண்டையைக் கனைத்துக்கொள்கிறான்.)

மாலதி (திரும்பிப் பார்த்து): நீங்களா!

நாக: ஆமாம்... நான்தான்....

மாலதி: நானே உங்களைப் பார்க்க வரணும்னு இருந்தேன்... வாங்க தியாகராஜன், உட்காருங்க...!

நாக (புன்முறுவலுடன்): என்னை என்னவென்று கூப்பிட்டே?

மாலதி: ஏன்... நீங்க... உங்க பேர் தியாகராஜன்தானே?

நாக (உரக்கச் சிரிக்கிறான்): நீயும் ஏமாந்துட்டியா? பலே! (சிரிப்பைச் சற்று அடக்கி) மாலதி! நீ இப்படி ஏமாறுவேன்னு நான் நினைக்கலே.

மாலதி: நீங்க என்ன சொல்றீங்க?

நாக: எல்லாம் விவரமாச் சொல்றேன், உட்காரு. நாகராஜன் சாகலே... (சிரிக்கிறான்)

மாலதி (சற்றுப் பயந்தவளாக): தியாகராஜன், உங்களுக்கு மனசு சரியாயில்லேன்னு நினைக்கிறேன்... பாவம்! அண்ணனைப் பிரிஞ்சது உங்களுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கு...

நாக: பைத்தியம்! (உரக்கச் சிரிக்கிறான்) அசல் பைத்தியம்! நாகராஜன் சாகலே!.... நான்தான் நாகராஜன்! (சிரிக்கிறான்)

மாலதி: ப்ளீஸ், மிஸ்டர் தியாகராஜன்! நீங்க போயிட்டு அப்புறம் வாங்க. எனக்கு பயம்மா இருக்கு.

நாக: மாலதி... (அவளை நெருங்குகிறான்).

மாலதி: மிஸ்டர் தியாகராஜன்! தள்ளி நில்லுங்க...

நாக (நிலைமை தன் கையை மீறிப் போவதாக நினைத்து): மாலதி... நான் பைத்தியம் இல்லே... உனக்காகத்தான் இந்த மாதிரியெல்லாம் நான் வேஷம் போட்டேன்..... நான் பைத்தியம்னு ஒத்துக்கிட்டது கூட உனக்காகத்தான் — உன்னைக் கல்யாணம் பண்ணிக்கத்தான்.

மாலதி (கோபமாக): தியாகராஜன்! இது என்ன பேச்சு? எனக்காகப் பைத்தியம் மாதிரி நடிச்சீங்களா? சபேசனை ஏமாத்திருக்கீங்க, இல்லே? தியாகராஜன், நீங்க செய்யறது கொஞ்சம் கூட நல்லாயில்லே.

நாக: மாலதி! என்ன இது ஒண்ணுமே புரிஞ்சுக்காமப் பேசறே... இன்னுமா உனக்கு என்னைப் புரியலே?

மாலதி: புரியறது மிஸ்டர் தியாகராஜன்—புரியறது! நீங்க இவ்வளவு மோசமானவர்னு நான் எதிர்பார்க்கலே. சே! என்ன நெஞ்சழுத்தம் இருந்தா, என்னைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேப்பீங்க!

நாக: மாலதி!

மாலதி: ஷட் அப்! செத்துப் போன உங்க அண்ணனுக்கு இந்த மாதிரி துரோகம் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்தது?

நாக: மாலதி! நாகராஜன் சாகலே. நான் தான் நாகராஜன்!

மாலதி: சபாஷ்! எப்பேர்ப்பட்ட பொய் யானாலும் ரொம்ப அலட்சியமா சொல்லிடு வீங்க போலிருக்கே!

நாக: மாலதி... என்னை நம்பு! நான் நாகராஜன்தான். எனக்குத் தியாகராஜன்னு ஒரு தம்பி இருந்தா, அது உனக்குத் தெரியாம இருந் திருக்குமா? உங்கிட்டச் சொல்லாம இருந் திருப்பேனா?

மாலதி: நாகராஜன் தனக்கொரு தம்பி இருக்கிறதா என்கிட்டச்சொன்னதில்லைதான். இப்பேர்ப்பட்ட ஒரு தம்பி இருக்கிறதாச் சொல்லிக்கவே வெட்கப்பட்டுத்தான் அவர் அதைப் பத்தியே என்கிட்ட பேசாமல் இருந் திருக்கார்... ஹூம்! இரட்டைப் பிறவிகள்—ஆனா இரண்டு பேருக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம்!

நாக: மாலதி! உன்னோட நான் முதல்லே மீட் பண்ணினது உனக்கு ஞாபகம் இருக்கா? நீ என் பௌண்டன் பேனாவைக் கடப் பரிசாக் கேட்டியே...

மாலதி: ஓ!... நாகராஜன் அதை உங்க கிட்ட சொன்னாரா?

நாக: போகட்டும்.. சினிமா போனோமே, மூம்தாஜ்—ஷாஜஹான்...

மாலதி: அவர் சொன்னதையெல்லாம் ஞாபகம் வச்சுக்கிட்டு, திருப்பிச் சொன்னா நான் ஏமாந்துடுவேன்னு நினைக்கறீங்க... எனக்கு இப்பத்தான் ஞாபகம் வருது. அவர் பம்பாய்க்கு வரதுக்கு முன்னாலே ஏதோ தம்பியைப் பார்க்கணும்... பம்பாயிலே நான் தம்பின்னு அரைகுறையா ஏதோ சொன் னார்... இங்கே வந்து உங்களைப் பார்த்திருக் கார். அவர்கிட்டேயிருந்து எங்களைப் பத்திச் சகல விவரமும் தெரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. அதையெல்லாம் சொல்லி, என்னை ஏமாத்த நினைக்கிறீங்க. இல்லே?

நாக: மாலதி!

மாலதி: என்கிட்ட இந்த மாதிரி பேசிக் கிட்டு நிக்க உங்களுக்கு வெட்கமா இல்லே? சொந்த அண்ணன் செத்துப் போன பிறகு நான்தான் அவர்னு சொல்லிக்கிட்டு ஒரு பெண்கிட்ட இந்த மாதிரி வம்பு செய்யறீங் களே... உங்களை மாதிரி ஒரு கொடியவனைப் பார்க்கிறது ரொம்பக் கஷ்டம்!

நாக: ஆல் ரைட்! மாலதி... நான் தியாக ராஜனாகவே இருக்கேன்!... ஆனா ஒரே ஒரு வேண்டுகோள்... நாகராஜன் பம்பாய்க்கு வர துக்கு முன்னாலே உங்கிட்ட கவர் ஒண்ணு குடுத்தான் இல்லையா? அதுலே அவன் திட்டம் பூரா இருக்குமில்லே?

மாலதி: ஓ! அதைப் பத்தியும் உங்கிட்ட சொல்லிட்டாரா!

நாக: அந்தக் கவரை இப்ப பிரிச்சுப் பாரு. அப்பத் தெரியும் நான் சொல்றதெல்லாம் உண்மையா, பொய்யான்னு! அதுலே நான் பம்பாயிலே வந்து தியாகராஜனா மாறின சகல விவரமும் இருக்கும்.



மாலதி: நான் அதை இப்பப் பிரிக்க முடியாது.

நாக: ஏன்?

மாலதி: சபேசனும் அதைப் பார்க்கணும்னு ஒரே துடியா யிருக்கார். நான் இன்னிக்குத் தான் கவரைப் பிரிக்கப் போறதா அவர் கிட்டே சொல்லியிருக்கேன். அவரையும் எதிரே வெச்சுக்கிட்டுத்தான் பார்க்கணும்.

நாக: ஐய்யய்யோ! போச்சு! அவர் அதைப் பார்த்தார்னு என் பிளான் எல்லாம் குட்டிச்சுவராயிடும்!

மாலதி: உங்க பிளான் எக்கேடு கெட்டா எனக்கென்ன? இந்த இடத்தை விட்டுப் போகப் போறீங்களா இல்லையா?

நாக: மாலதி! நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளு... நான் தியாகராஜன் தான்னே இருக்கட்டும். ஆனா அந்தக் கவரை உங்கிட்டக் கொடுத்தது நாக ராஜன். அதிலே பத்தாயிரம் ரூபா சம்பா திக்க அவன் திட்டத்தை எழுதி வெச்சிருக் கான். நீ அதை மத்தவங்க எதிரிலே பிரிச்



கப் பார்க்கலாமா? அவன் உன்னை நம்பிக் கொடுத்த ரகசியக் கடிதாசை எல்லார் எதிரேயும் பிரிக்கிறதுதான் நியாயமா?

மாலதி (யோசித்து): உம்...

நாக: நீ எனக்குக் கூட அதைப் படிக்கக் காட்ட வேண்டாம். இப்பவே போய்ப் பிரிக்கப் பாரு. உண்மை தெரியும்.

மாலதி: ஆல்ரைட்! கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. நீங்க சொல்றதை நம்பி நான் இந்தக் காரியத்தைச் செய்யலே. உங்களவன் உங்ககிட்ட சொல்லியிருக்கிற விஷயங்களை வெச்சுக்கிட்டு, நீங்க என்னை நம்ப வெக்கப் பார்க்கிறீங்க. அது நடக்காது. இருந்தாலும் நீங்க சொல்ற மாதிரி அந்தக் கவர்லே என்னதான் எழுதியிருக்கார்னு பார்த்துடறேனே... ப்ளீஸ் வெயிட்!

(உள்ளே போகிறாள்)

(நாகராஜன் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருக்கையில் மாலதி கையில் அந்தக் கவருடன் வருகிறாள்.)

நாக: கம் ஆன்! கவரைப் பிரி.

மாலதி: (கவரைப் பிரித்து அதிலிருக்கும் காகிதத்தை எடுக்கிறாள்.)

நாக: அதைப் படி!... இப்பத் தெரியுதா, நான் சொன்னதெல்லாம் உண்மைன்னு.

மாலதி: (அந்தப் பேப்பரைப் பிரித்து அப்படியே திகைத்து அசைவற்று நிற்கிறாள்.)

நாக: சொன்னுக் கேட்டியா? எல்லாம் அதிலே எழுதியிருக்கு பார்த்தியா?...

மாலதி: உங்களை மாதிரி அயோக்கியனை நான் பார்த்ததே கிடையாது! என்ன திமிர்! நீங்க கவரைப் பிரிச்சுப் பார்த்தா விஷயம் தெரியும்னு அவ்வளவு நிச்சயமாச் சொன்ன போது நானே கொஞ்சம் நம்ப ஆரம்பிச்

முந்தைச் சொத்தைக் காப்போம்

பெரியோர்களின் சந்ததியில் தோன்றிய நமக்கு இந்தக் காலத்தில் என்ன நேர்ந்துவிட்டது? அவர்களிடமிருந்த பக்தியும் சக்தியும் கற்பனைத் திறனும் இப்போது எங்கே? இந்த அசிரத்தையும் அற்பத்தனமும் அவலட்சணமும் அசுத்தமும் குறுகிய திருஷ்டியும் எங்கிருந்து வந்தன? மூதாதைகளின் ஆத்ம சக்தி யெல்லாம் எங்கே போய்விட்டது? இறைவா இப்படி ஏன் எங்களைக் கைவிட்டாய்?

வாலிபர்களே! யுவதிகளே! அகத் தூய்மையும், புறத் தூய்மையும் அடையுங்கள். பக்தியும் சக்தியும் பெறுங்கள். நமது மூதாதையர்களின் பிதுரார்ஜிதச் சொத்தை ஏற்றுக்கொள்ள முன் வாருங்கள். நமது முன்னோர்கள் இதையெல்லாம் நமக்காகவே தான் செய்து கொடுத்துவிட்டுப் போனார்கள். நம்முடைய தேகம், ஆத்மா எல்லாம் அவர்களிடமிருந்தே வந்தவை என்பதை ஒரு நாளும் மறவாதீர்கள். —ராஜாஜி

கட்டேன்! பிரிச்சுப் பார்த்தா பிறகுதானே தெரியுது!

நாக: மாலதி, என்ன சொல்றே.. அந்தப் பேப்பரைச் சரியாப் படி!

மாலதி: படிக்கிறதுக்கு என்ன இருக்கு? நீங்களே பாருங்க.

(பேப்பரைக் காட்டுகிறாள். அதில் ஓர் எழுத்துக்கூட எழுதப்படாமல் வெற்றுக் காகிதமாகவே இருக்கிறது.)

நாக: ஐய்யய்யோ! இது என்ன இது? வெறும் பேப்பரா இருக்கே! அய்யய்யோ!

மாலதி: ஏன் அலர்றீங்க? நாகராஜன் உங்களை விடப் புத்திசாலி இல்லையா? இந்த முக்கியமான விஷயத்தை உங்ககிட்ட மறைச்சிருக்கார். அதனாலேதான் நீங்க விஷயம் தெரியாமப் பேசிட்டீங்க!

நாக: மாலதி... மாலதி... அந்தக் கவர் எப்பவாவது கைமாறித்தா?

மாலதி: ஏன்? வேறு ஏதாவது புளுகலாம்னு பார்க்கிறீங்களா? அவர் கொடுத்தது வேத்து இந்தக் கவர் எங்கிட்டேயேதான் இருக்கு... மிஸ்டர் தியாகராஜன்! நீங்கள் வெளியே போகலாம்!

நாக: மாலதி! நான் சாகலே!... மாலதி, நான் சாகலே!... அய்யோ! உனக்காகத்தானே நான் செத்தேன்! இல்லே... சாகலே!...நான் நாகராஜன்... மாலதி... ப்ளீஸ்...உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலேன்னு எனக்கு நிரமாவே பைத்தியம் பிடிச்சுடும்!

மாலதி: சே! நீங்களும் ஒரு மனுஷப் பிறவியா? இரும்பித் இரும்பி இந்த மாதிரிப் பேச உங்களுக்கு அவமானமா இல்லே!... கெட் அவுட்!

நாக: மாலதி! என்னை நம்பு!

மாலதி: உங்களை நம்பறதை விட ஒரு விஷப் பாம்பையே நம்பலாம்! (திடீரென்று ஞாபகம் வந்தவளாக) மைகாட்! இப்பத்தான் எனக்கு ஞாபகம் வரது!

நாக: (ஆவலோடு): என்ன மாலதி?

மாலதி: பாம்புன்னு சொன்னவுடனே அவர் கடைசியாக என்கிட்ட எழுதிக் கொடுத்த கவிதை ஞாபகம் வரது. அதுக்கு இத்தனை நாள் எனக்கு அர்த்தம் புரியலே. இப்ப நல்லாப் புரியுது.

நாக: என்ன கவிதை அது? யாரைப் பத்தி?

மாலதி: உங்களைப் பத்தித்தான்னு இப்ப புரியுது. என்ன தீர்க்கதரிசனத்தோட எழுதியிருக்கார்.

பம்பாயிலே நான் தம்பி
மாட்டிக்கிட்டா என்னுயேன் கம்பி
அய்யய்யோ இது பெரிய வம்பே
நான் போறேன் நம்பி பாம்பே!

என்ன உள்ளர்த்தம்! ''பம்பாயிலே என் தம்பிகிட்ட மாட்டிக்கிட்டா, என்னை ஜெயிலுக்குள்ளேயே அவன் தள்ளிடுவான்!...இது பெரிய வம்புதான். நான் ஒரு விஷப் பாம்பை நம்பிப் போறேன்''. உங்களைப் பாம்புன்னு அவரே எழுதியிருக்கார்.

நாக: அய்யய்யோ! அதுக்கு அர்த்தம் அப்படியில்லே... ''பம்பாயிலே நானேதான் தம்பி — இந்தப் பிளான் தெரிஞ்சா ஜெயில்— இது பெரிய வம்பு... ஏதோ பம்பாயை நம்பிப் போறேன்''... பாம்பேன்றது பாம்பு இல்லே. பம்பாய்... பம்பாய்!

மாலதி: ஓஹோ! இது உங்க அர்த்தமா? இவ்வளவு நடந்த பிறகும் நீங்க பேசிக்கிட்டு நிக்கறதே தப்பு! நாகராஜன் என்ன அர்த்தத்திலே அந்த வெத்துக் காகிதத்தை வெச்சிருப்பாரோ தெரியலையே! அர்த்தமில்லாத ஒரு காரியத்தை அவர் செய்ய மாட்டாரே!

நாக: மண்ணாங்கட்டி வெத்துக் காகிதம்! அவன் அதை வெக்கலே. அது எப்படியோ மாறிப் போயிருக்கு!

மாலதி: இந்த மாதிரி விஷயங்களெல்லாம் உங்க மூளைக்கு எட்டாது. நாகராஜன் ஏதோ பெரிய ஐடியாவோடுதான் அந்த வெறும் பேப்பரை வெச்சு கவரை எங்கிட்ட கொடுத்திருக்கார்.

நாக: மாலதி.. கடைசியாக் கேக்கறேன். நான் சொல்றதை நம்பவே மாட்டியா? நான் சாகலே மாலதி. நான் சாகலே!

மாலதி: —நீங்க சாகலே. உங்க அண்ணன் நாகராஜன்தான் போயிட்டார்.

நாக: நான்தான் நாகராஜன்!

மாலதி: மிஸ்டர் தியாகராஜன்! இவ்வளவு நேரம் உங்களை வெளியே போங்கன்னு நானே சொல்லிக்கிட்டிருந்தேன். ஏதோ நாகராஜன் தம்பியாச்சேன்னு இந்த மரியாதையாவது கொடுத்தேன்.

நாக: மாலதி!

மாலதி: இனிமே ஒரு நிமிஷம் இங்கே இருந்தீங்கன்னு வேலைக்காரங்களைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளச் சொல்லுவேன்! கெட் அவுட்!...

(காட்சி முடிவு)

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon